

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 21st August 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Holdsworth Dam

*1282 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri V. ARUNACHALA THEVAR) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal for digging a channel from the Holdsworth Dam, Tirumayyam taluk, Tiruchirappalli district, for agricultural purposes; and

(*b*) if so, the probable area which can be irrigated by this channel?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) A gap of 336 acres, under sixteen lower down tanks, between their registered ayacut and the average extent now under cultivation will be bridged. Supply to an extent of 1,808 acres which is now being cultivated will also be stabilized. In all 2,144 acres will thus be benefited.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ? எப்போது இது பூர்த்தியாகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸாங்ஷன் ஆகும் தருவாயில் இருக்கிறது. இன்னும் விரிவான மதிப்பீடு வரவில்லை, அது சீஃப் என்ஜினியரிடமிருந்து வந்ததும் மேலும் பரிசீலனை செய்து ஸாங்ஷன் செய்யப்படும்.

Money Order forms

*1283 *Q.*—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the State Government have made any representations to Central Government for the issue of Money Order forms in bilingual scripts, namely, English and Tamil; and

(*b*) if so, the result of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir. It is, however, ascertained from the Postmaster-General, Madras Circle, that the Government of India have decided to issue M.O. forms, registered acknowledgment forms and certain other Posts

[21st August 1961

and Telegraphs forms used by the public in bilingual scripts, viz., English and the regional language. Bilingual M.O. forms in English/Tamil have since been printed and issued to the public by the Posts and Telegraphs Department.

SRI A. A. RASHEED : May I know who has borne the cost of printing these money-order forms?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is all done by the Government of India. There is no question of anybody bearing the cost.

Mission Hospital, Gudiyatham

* 1284 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் உள்ள மிஷன் ஆஸ்பத்திரி கட்டிடத்தை வாங்கி சர்க்கார் ஆஸ்பத்திரியுடன் சேர்க்கும் விஷயம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு மருந்து வகைகள் இரண்டு மடங்காக அதிகப்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The matter is under the consideration of the Government.

(இ) No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், குடியாத்தம் நகரில் ஒரு மிஷன் ஆஸ்பத்திரியும், ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரியும் நடந்து கொண்டு வந்தன. இப்போது மிஷன் ஆஸ்பத்திரியை மூடிவிட்ட காரணத்தினால் சர்க்கார் ஆஸ்பத்திரியில் அதிகப்படியான நோயாளிகள் சிகிச்சை பெற முடியாத அளவு கஷ்டப்படுகிறார்கள். மருந்து இல்லாத குறைபாட்டினாலும், இடம் இல்லாத குறைபாட்டினாலும் என்பது அமைச்சருக்கே தெரியும். ஆகவே தயவுசெய்து உடனடியாக கட்டிடத்தை வாங்கி ஆஸ்பத்திரியை விஸ்தரித்து, மருந்தையும் இரட்டிக்க உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மருந்தைப் பொருத்தவரையில் ஒன்றும் கஷ்டம் இல்லை. அது சர்க்கார் ஆஸ்பத்திரியாக இருப்பதால் மருந்தைப்பற்றி கவலை இல்லை. வேறு ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரியாக இருந்தால் வேண்டுமானால் மருந்து சம்பந்தப்பட்ட மட்டில் குறைபாடு இருக்கலாம். கட்டிடம் எடுத்துக்கொள்ளும் விஷயம் இப்போது நடவடிக்கையில் இருக்கிறது. கட்டிடத்தின் மதிப்பு ரூ. 29,000 இருக்குமென்று என்ஜினீயரிடமிருந்து எஸ்டிமேட் வந்திருக்கிறது. அதோடு டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீஸர், டி.எம்.எஸ். ஆகியவர்களிடமிருந்து ரிப்போர்ட்டை எதிர்பார்க்கிறோம். அது வந்த பிறகு என்ன செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்படும். மிஷன் ஆஸ்பத்திரி 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ம் தேதியிலிருந்துதான் மூடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்தக் கட்டிடத்தை வாங்கி நர்ஸஸ் க்வார்ட்டர்ஸ் வைக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இப்படி நர்ஸஸ் க்வார்ட்டர்ஸ் வைக்கக்கூடிய காரணத்தினால் ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கான போதுமான இடம் இல்லாத ஒரு நிலைமை ஏற்படும். ஆகவே, ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு என்ன செய்யப்படும்.

THE HON. SRI M. A. MANICKAVELU : முதலில் முட்டைகளைப் போடட்டும். அப்புறம் குஞ்சுகளை எண்ணலாம். (சிரிப்பு.)

21st August 1961]

SRI A. A. RASHEED : Have the Government received any protest or petition from the Mission authorities against Government acquiring this building?

THE HON. SRI M. A. MANICKAVELU : Not that I am aware of.

Bridge across Cauvery

* 1285 Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI S. LAZAR) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the cost of the new bridge across Cauvery in Tiruchirappalli;

(b) the date when it was commenced;

(c) the date when it was scheduled to be completed; and

(d) the date when it will be actually completed?

THE HON. SRI P. KAKKAN : (a) Rs. 38·545 lakhs as technically sanctioned by Chief Engineer.

(b) 20th March 1957;

(c) 31st December 1960;

(d) The Government of India's approval for superstructure design is awaited. On receipt of Government of India's approval, a revised target date for completion will be fixed.

SRI R. SRINIVASA IYER : ஸார், இந்தப் பாலம் கட்டுவது இப்போது என்ன நிலைமையில் இருக்கிறது. 1960-ல் முடிந்துவிடும் என்று முதலில் சொல்லப்பட்டதே. மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கட்டிய பாலத்திற்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டதா ?

THE HON. SRI P. KAKKAN : சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இந்தப் பாலத்திற்கு எந்தவிதமான சேதமும் இல்லை என்று அறிகிறேன். இதற்கு சூபர்ஸ்ட்ரக்சர் டிஸைன் அப்ரூவ் ஆகவேண்டும். இதற்காக டெபுடி சீஃப் என்ஜினீயரை டில்லிக்கு அனுப்பினோம். அவரும் போய்ப் பேசி வந்திருக்கிறார். மத்திய சர்க்காரிடமிருந்து உத்திரவு வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.

Mullikadu Vaniyar Scheme

* 1286 Q.—SRI M. K. MARIAPPAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முள்ளிக்காடு-வாணியாறு அணைக்கட்டுத் திட்டம் பற்றி சர்க்கார் எடுத்திருக்கும் முடிவு என்ன ?

THE HON. SRI P. KAKKAN : The Vaniar Scheme has been deferred.

Homœopathic System of Medicine

* 1287 Q.—SRI M. KALYANASUNDARAM (on behalf of SRI A. R. MARIMUTHU) : ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹோமியோபதி வைத்திய முறையை அங்கீகரிப்பது சம்பந்தமாக ஆராய்ச்சி கமிட்டி நியமிக்கப்பட்டதா ?

(இ) அதனுடைய அறிக்கை கிடைத்துவிட்டதா ?

(உ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

[21st August 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) & (இ) Yes, Sir.

(உ) The Committee has submitted its report in a bill form. Legislation has to be undertaken and the question is under consideration.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact only mostly uneducated people are practicing this homœopathic system of medicine?

THE HON. SRI M. A. MANICKAVELU : Uneducated means uneducated in proper modern medicine. That is what the hon. Member means. In order to avoid second-rate and third-rate medical practitioners, it is proposed to legislate so that proper standards might be kept up whatever be the system of medicine, homœopathy or indigenous system of medicine. We want to maintain standards. That is why in this regard we want to have legislation.

SRI K. VINAYAKAM : What is the attitude of this Government towards this homœopathic system of medicine? Does this Government recognize it as modern system of medicine efficacious to relieve patients from diseases?

THE HON. SRI M. A. MANICKAVELU : Recently Government have recognized this system. Whether it was recognized as a system of modern medicine, is not the question. As a system of medicine it has been recognised and the Government want to maintain standards. On account of that, legislation is necessary.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்தப் பிரச்னையைக் குறித்து இரண்டு ஆண்டுகளாக இரண்டு, மூன்று கேள்விகளுக்கு பதில் சொல்லி யிருக்கிறார்கள். இதற்குச் சட்டம் கொண்டுவருவதாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். இப்போது அது அஷ்யூரன்ஸ் கமிட்டியிலும் இருக்கிறது. இரண்டு ஆண்டுகள் தாமதமாவதற்கு முக்கிய காரணம் என்ன ? அதிலே உள்ள குறைபாடுகள் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காக மூன்று டாக்டர்களைச் சேர்த்து ஒரு கமிட்டியை ஏற்படுத்தினோம். அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ரிப்போர்ட் பிரகாரம் இரண்டு கோர்ஸுகள், ஒன்று $6\frac{1}{2}$ வருஷம், மற்றொன்று $3\frac{1}{2}$ வருஷம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது இப்போது பில் ஃபார்மில் இருக்கிறது. சட்டம் வந்து அது முடிவானதும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : வைத்திய விஞ்ஞானத்தில் முன்னேறியிருக்கும் நாடுகளான ஜெர்மனி, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் ஹோமியோபதி ஒரு அங்கீகரிக்கப்பட்ட வைத்திய முறை என்று அமைச்சர் அறிவார்களா ? ஆகவே இந்த ஹோமியோபதியை சொல்லிக் கொடுக்கும் முறையை சர்க்காரிலே ஏற்றுக்கொண்டு நடத்துவார்களா ? இப்போது அது தனியார் கையில் இருக்கிறது. பணம் சம்பாதிப்பதற்காக மட்டும் அதை உபயோகப்படுத்துகிறார்கள். இதற்காகத் தனியாக பள்ளிகளை ஏற்படுத்தி அல்லது இப்போது இருக்கும் வைத்தியக் கல்லூரிகளிலேயே சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON SRI M. A. MANICKAVELU : இந்த முறைப் பிரகாரம் கூட வைத்திய சிகிச்சை செய்யலாம் என்று அரசாங்கம் அங்கீகரித் திருக்கிறது. அங்கீகரித்த பிறகு, மற்ற முறைகளில் எப்படி பள்ளிச்

21st August 1961]

ளெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அதே போன்று இந்த முறையிலும் ஏற்பாடு செய்ய சட்டம் கொண்டுவர வேண்டும். அப்படி சட்டம் கொண்டு வந்த பிறகு அரசாங்கமே நடத்துவதா அல்லது தனியார் துறையில் சர்க்கார் உதவியோடு நடத்தலாமா என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

SRI A. A. RASHEED : What are the salient features of the newly proposed Bill?

THE HON. SRI M. A. MANICKAVELU : The salient features are that they must have a hard and good course of 6½ years. That is the degree course. The diploma course would last for three years. Under these two categories properly trained men in homœopathy would be got.

SRI N. K. PALANISAMY : ஸார், 1½ வருஷத்திற்கு முன்னதாக கேள்வியைப் போட்டபோது, இப்போது, சொன்னதைப்போல் அப்போதும் கன்சிடரேஷனில் இருப்பதாகச் சொன்னார்கள். அதை உடனடியாக சட்டமாகக் கொண்டுவருவதற்கு சர்க்கார் என்ன ஏற்பாடுகளைச் செய்தார்கள்? அதற்கான என்ன நடவடிக்கைகள் அதுவரை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை நல்லமுறையிலே மசோதாவாகக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இதற்கு பட்டப்படிப்புக்கு 6½ வருஷம் என்று போடப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ? ஹோமியோபதி முறையே தானாக அழிந்து விடட்டும் என்பது சர்க்காரின் நோக்கமா ? என்று அறிய விரும்புகிறேன். அதோடு எம்.பீ.பீ.எஸ். பட்டப் படிப்புக்கே 5 வருஷம்தான் போடப்பட்டிருக்கிறது. இதற்குமட்டும் 6½ வருஷம் என்று போடுவதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலே கமிட்டி சேர்மனாக போடப்பட்டுள்ள டாக்டர் உமாபதி முதலியார் கொடுத்துள்ள ரிப்போர்டிலே 6½ வருஷம் என்று போடப்பட்டிருக்கிறது. ஐந்து வருஷம் படிப்புக்காக இருக்கும். பாக்கி 1 வருஷம் அல்லது 1½ வருஷம் பிராக்டிகல் போன்றவைகளுக்காக இருக்கும்.

SRI N. K. PALANISAMI : இதற்கான பள்ளிக்கூட வசதிக்கான பணம் தனிப்பட்டவர்கள் துறையில் இருந்து சர்க்காருக்குக் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரமென்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி ஒன்றும் வாக்களிக்கப்பட்டு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த கமிட்டியினுடைய ரிப்போர்டு சர்க்காருக்கு எப்போது கிடைத்தது ? இப்போது மசோதா தயாராக இருக்கிறதா ? அப்படி மசோதா தயாராயிருந்தால் எப்போது கொண்டு வரப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கமிட்டி ரிப்போர்டு சமர்ப்பித்தது 1959 டிசம்பரிலே. அதற்குப் பின்னால் பரிசீலனை நடந்து கொண்டு வருகிறது. அது முடிந்தவுடன் கொண்டுவரப்படும்.

SRI N. K. PALANISAMI : இந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்டை நமக்கு மேஜைமேல் வைக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி யோசிக்கப்படும்.

New railway lines

* 1288 *Q.*—Sri T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether the proposed railway lines in the Third Five-Year Plan have been accepted by the National Development Council and the Planning Commission?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : From the finalised Third Plan, it is seen that Salem-Bangalore line and Manamadurai-Virudhunagar line are under consideration for inclusion in the railway programme. The Cape Comorin-Tirunelveli line has also been proposed by the Railway Board.

Sri M. KALYANASUNDARAM : ஸார், நமது ராஜ்ய சர்க்கார் இன்னும் வேறு என்னென்ன பாதைகளை சிபார்சு செய்தார்கள், அவைகள் எந்த அளவில் ஆலோசனையில் இருந்து வருகின்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கடைசியாக, அதிகம் சிபார்சு செய்து அனுப்பிப் பயனில்லை என்று கருதி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளும்படி நான்கு ரயில்வே லயின்களை சிபார்சு செய்தோம். இவைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளும்படி கேட்டிருக்கிறோம். (1) சேலம்-பங்களூர் லயின், (2) விருதுநகர்-அருப்புக்கோட்டை-முதுகளத்தூர்-கீழக்கரை லயின், (3) மானாமதுரை-தூத்துக்குடி லயின், (4) திருநெல்வேலி-கன்யாகுமரி லயின். இதைத் தவிர, மதராஸ்-அரக்கோணம் எலக்ட்ரிசிடி லயின் ஆகியவைகள் கடைசியாக சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

Sri T. S. RAMASWAMI : May I know the estimated cost of these railway lines and the priorities given to them by our Government?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : This is the priority. I have read the order under which these proposals were made. That was the priority indicated by this Government. I do not have any figures about the estimated cost of these new lines. I don't think even the Railway Board has got it.

Sri M. KALYANASUNDARAM : ஸார், சேலம்-பங்களூர் மார்க்கமாகப் போடப்படும் லயின் மீட்டர் கேஜா ? அல்லது பிராட் கேஜா ? பிராட் கேஜாகப் போடுவதாக இருந்தால், திருச்சியிலிருந்து சேலம் வரை போடுவதாக இருந்ததே, அது என்ன ஆயிற்று ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : திருச்சியிலிருந்து சேலம் வரை போடப்படுகின்ற லயினைப்பற்றி முன்னாலே சிபார்சு செய்து அனுப்பியிருந்தோம். ஆனால் இது பின்னால் எடுத்துக்கொள்ளப்படும். இப்போது நான் சொன்ன லயின்களை மட்டும்தான் சிபார்சு செய்திருக்கிறோம்.

Srimathi HEMALATHA DEVI : கனம் தலைவர் அவர்களே, சேலம்-பங்களூர் ரயில் பாதைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதால் அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

21st August 1961]

SRI A. A. RASHEED : May I know whether the electrification of Madras-Arkonam line will be included in the Third Plan and whether it has been accepted by the Railway Board?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : So far there is no possibility of immediately taking up the Madras-Arkonam electrification.

SRI M. KALYANASUNDARAM : ஸார், கடலூர்-சேலம்வரை மீட்டர் கேஜாக உள்ள லயினை பிராட் கேஜாகப் போடும் உத்தேசம் இந்த அரசாங்கம் சிபார்சு செய்து, மத்திய அரசாங்கம் கைவிட்டதா அல்லது நம்முடைய அரசாங்கமே கைவிட்டு விட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் கைவிட வில்லை. அதுவும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : கனம் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் சிபார்சு செய்துள்ளதாகச் சொல்லப்பட்ட இணைப்புக்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி இந்த அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறதா ? அல்லது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி சிபார்சு செய்யப்பட்டு, மத்திய சர்க்காரால் கைவிடப்பட்டு, அதை மீண்டும் சேர்க்கும்படி இந்த அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே புறக்கணிப்பதற்கு என்று ஒன்றுமே இல்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பல லயின்களை சிபார்சு செய்திருந்தோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிச்சயம் இரண்டு லயின்கள் எடுத்துக்கொள்ளப் படும் என்று தெரியவருகிறது. அத்தனையும் ஒரே சமயத்தில் எடுத்துக் கொள்ளமுடியாது. பிரியாரிடிபடிதான் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI R. SRINIVASA IYER : ஸார், மதாரஸ்-செங்கல்பட்டு மின்சார ரயில்வே லயின் விஷயம் ரொம்ப நாளாக சொல்லப்பட்டு வருகிறது. அது இப்போது எந்த நிலைமையில் உள்ளது ? எப்போது எடுத்துக் கொள்ளப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த வேலை எற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : தூத்துக்குடியிலிருந்து, சென்னை எழும்பூர் வரையுள்ள மீட்டர் கேஜ் மார்க்கத்தை, தூத்துக்குடி-திருச்சி வரை பிராட் கேஜாக மாற்றும் யோசனை இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு ஒரு யோசனையும் இல்லை.

Houses for Policemen

* 1289 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a housing colony for the men of the Special Armed Police Unit at Avadi;

(*b*) if so, when will the work be taken up; and

(*c*) the number of houses to be constructed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The proposal has just been approved. The execution of the work will be taken up soon after the preliminaries are over.

(*c*) 195.

[21st August 1961

SRI A. A. RASHEED: What is the estimated cost of this housing project? Will this Colony accommodate the Southern Zone Police Force also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: For the Southern Zone Police Force, that need not require special accommodation as such. For these quarters for the Special Armed Police the cost is Rs. 18,25,000.

Caterpillar menace

* 1290 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் மதுரை ஜில்லா, உசிலம்பட்டி பகுதியில் கம்பளிச் பூச்சிகள் படையெடுப்பால் எத்தனை ஏக்கர் நிலக்கடலைப் பயிர் பாதிக்கப் பட்டது ?

(இ) அதனால் ஏற்பட்ட நஷ்டத்தின் மொத்த மதிப்பென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) 12,397·75 acres.

(இ) Rs. 6·19 lakhs.

SRI N. R. THIAGARJAN: ஸார், மின்சார இலாகா அமைச் சர் அவர்கள் அந்தப் பகுதிக்குச் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்தபோது, கிட்டத்தட்ட 20 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்று சொன்னார்கள். ஆகவே இனிமேல் இவ்வாறு நஷ்டமேற்படாது இருப்பதற்கு, பாதுகாப்பு அளிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ? எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் கூறிய மதிப்பு பிறர் கூறுவதைக் கேட்டுச் சொன்ன மதிப்பாகும். உத்தியோக பூர்வமாக மதிப்பு எடுத்ததில் 619,000 என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது கம்பளிப்பூச்சி என்று சொல்லப் படுகிறது. இம்மாதிரித் தொல்லைகள் ஏற்படும் காலங்களில், அவ்வப்போது அந்தத் தொல்லைகளைச் சமாளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

SRI P. K. MOOKIAH THEVAR: ஸார், நமது மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் அங்கு வந்தபோது, நஷ்டமேற்பட்டதைப் பார்த்து தக்க பாதுகாப்பு அளிப்பதற்கு பல காரியங்கள் செய்வதாகச் சொல்லி, அவைகள் பத்திரிகைகளில் கூட வெளிவந்தது. அந்தக் காரியங் கள் நடந்தேறியதா அல்லது இல்லையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அமைச்சர் அவர்கள் கூறியவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டுத்தான் வருகிறது.

SRI N. K. PALANISAMI: கோவை ஜில்லாவில் பொள்ளாச்சியில் ஆகாய விமானத்திலிருந்து மருந்தை ஸ்ப்ரே செய்து ஒரளவுக்கு வெற்றி கண்டிருப்பதனால், இதை மாகாணத்தில் வேறு இடங்களில் விஸ்தரிப்பதற்கு சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எங்கெங்கு ஆகாய விமானத்திலிருந்து பூச்சி மருந்துகளை அடித்து பூச்சிகளை அழிக்க முடி யுமோ அதில் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது. பொள்ளாச்சியில் பூச்சி மருந்து அடித்தோம். ஆனால் அங்கே கால் பங்கு பூச்சிகள் 'அண்டர்கிரௌண்டுக்கு' போய்விட்டன. (சிரிப்பு.) மறுபடியும் பருவ காலத்தில் வெளிவரும். அப்படி வெளிவருகிற பொழுது பூச்சி மருந்து தெளித்து எல்லாவற்றையும் சேர்த்து அழிக்க வேண்டும்.

21st August 1961]

SRI K. VINAYAKAM : May I know how the menace caused by these swarms of caterpillar was controlled. What were the steps taken to control such kind of menace? What is the cost involved for taking such kind of measures?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We apply pesticides to kill these swarms. I cannot say what is the average cost per acre in combating these pests. Normally the ryot has to pay about Rs. 7 to Rs. 8 per acre.

SRI J. MATHA GOWDER : உருளைக்கிழங்கு பயிரில் கூட இதே மாதிரி பூச்சி பரவி அதனால் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அன்னிய நாட்டு நிபுணர்களைக்கூட தருவித்தோமே? அவர்களுடைய ரிபோர்ட்டு வந்திருக்கிறதா? இந்தப் பூச்சிகளை தடுப்பதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அன்னிய நாட்டு நிபுணர்கள் அங்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் பரிசீலனை செய்து இந்தப் பூச்சிகளை அடியோடு நீக்க முடியாது, இந்தப் பகுதி உருளைக் கிழங்குக்கே லாயக்கு இல்லை என்று சொல்லுவது தவறு' என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். இந்த பூச்சிகளுடைய தொல்லையை தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களோ, அவைகளெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI V. SUBBIAH : மொச்சை, தட்டை, பாசிப்பயறு போன்ற தானியங்களின் மகசூல்களில் அடிக்கடி கம்பளிப் பூச்சியின் தொல்லை ஏற்படுகிறது. இந்தப் பூச்சிகள் இந்தப் பயறு வகைகளை பாதிப்பதை அரசாங்கம் கவனித்து, அதைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே அவ்வப்பொழுது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. விஞ்ஞான ரீதியிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முடியுமோ அவைகளெல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது விவசாய இலாகா கொடுக்கக்கூடிய மருந்துகளினால் பூச்சிகளை ஒழிக்க முடியவில்லை. காரணம் மருந்தை அந்த சமயங்களில் ஒரு தரம் அல்லது இரண்டு தரம் தூவ வேண்டும். பல பேர்களுக்கு பண வசதி இல்லாததன் காரணமாக அவர்களால் தூவ முடிவதில்லை. ஆதலால் மருந்து போட்டவர்கள், போடாதவர்கள் எல்லோருடைய நிலங்களுமே இந்த பூச்சி நோய் பரவி விடுகிறது. ஏற்கனவே பெஸ்ட் கண்டிரோல் ஆர்டர் என்று இருக்கிறது. அதை கலெக்டர்கள் அமுல் நடத்த வேண்டும். விவசாய இலாகா 'பவர் ஸ்ப்ரேயர்ஸ், டஸ்டர்ஸ்' எந்த அளவுக்கு எந்த ஏரியாவுக்கு எவ்வளவு வேண்டும் என்பதை கணக்கிட்டு மொபிலைஸ் செய்து 'பெஸ்ட் கண்டிரோல் ஆர்டரை' இம்ப்லிமெண்டு செய்து பணம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சரி, கந்தாயத்தோடு அதன் விலையையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்ற முறையிலே சர்க்கார் உத்தரவிட முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்வாறெல்லாம் சர்க்கார் ஆலோசித்து அதற்குத் தகுந்தபடி விதிகளிலும் சட்டங்களிலும் மாற்றம் செய்வதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : கம்பளிப் பூச்சியினால் கடலைப் பயிருக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆரம்பத்தில் இந்த கம்பிளிப் பூச்சி இருந்தால், பின்னாலே கடலைப் பயிரில் பலன் இல்லை என்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகையினால் கம்பளிப்பூச்சி எப்படி உற்பத்தி

ஆகிறது, இதை எப்படி 'பிரிவெண்டு' செய்யவேண்டும் என்ற ஆராய்ச்சி நடந்து வந்திருக்கிறதா? அந்த ஆராய்ச்சி இப்பொழுது எந்த நிலைமையில் இருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது ஆராய்ச்சி செய்ததிலே கம்பளிப்பூச்சிகளை ஒரு வயதான பிறகு கொல்லவே முடியாது என்று தெரியவருகிறது. ஆகையால் அதை எந்த நிலையிலே கொல்ல வேண்டும் என்பது கவனிக்கப்பட்டு, இது பரவியிருக்கும் பிராந்தியங்களில் ஆகாய விமானம் பயன்படுத்தி இதைக் கொல்லுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI P. K. MOOKIAH THEVAR : இந்தப் பகுதியிலே மந்திரி அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதி விலையில் விதைக்கடலை கொடுக்கப்படும், வரி வஜா செய்யப்படும் என்றெல்லாம் சொல்லிவிட்டு, ஒன்றுமே செய்யாமல் இருப்பது நியாயமா? மந்திரியின் வாக்குறுதியை நிறைவேற்றுமல் இருக்கலாமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மந்திரி என்ன வாக்குறுதி அளித்தார்கள் என்பதுபற்றி தகவல் என்னிடம் இல்லை. அவ்வாறு உறுதியாக வாக்குறுதி அளித்திருக்க முடியாது விவரங்கள் இல்லாமல். அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது விவசாயிகள் தங்களுடைய குறைகளை, கோரிக்கைகளை தெரிவிக்கிறார்கள். அவர்கள் பரிசீலனை செய்வோம் என்று சொல்லுவார்கள். அந்தக் குறைகள் பரிசீலனை செய்யப்படுகின்றன. பரிசீலனை செய்யப்பட்டு சில முடிவுகளும் எடுக்கப்பட்டுவருகின்றன.

Kar paddy (destruction by birds)

* 1291 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் கடற்கரை ஓர கிராமங்களில் பள்ளக் கால்களில் சாகுபடி செய்யப்படும் கார் நெல் மகசூலை "செரவி" என்னும் பட்சிகள் ஆயிரக்கணக்கில் வந்து ஆண்டு தோறும் அழித்து வருவதை அரசாங்கம் அறியுமா?

(இ) அப்படியானால், அப்பறவைகளினால் சேதம் ஏற்படாமல் தடுக்க அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா? அதன் விவரமென்ன?

(உ) இல்லையானால், அத்தகைய முயற்சி ஏதேனும் எடுத்துக்கொள்ளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) & (உ) Till recently, the Government have not taken any step in this regard as no incidence of this pest of alarming nature has so far been recorded. But these birds can be scared away by beating drums especially at nights when they are found to cause damage to paddy crops. It has been suggested that as these birds make a very delicious dish the "Shikaris" may be encouraged to shoot them. Instructions have been issued to all the District Officers concerned for the adoption of the above methods by enlisting the co-operation of the ryots through the village panchayats.

SRI A. VEDARATHNAM : இந்தக் கடற்கரை பகுதிகளில் உள்ள கார் மகசூல் 3 அடி, 4 அடி தண்ணீரில் நடக்கிறது. இந்தப் பறவைகள் கம்பளிப் பூச்சிகள் போல் அண்டர்கிரௌண்டிலிருந்து வருவதில்லை. பத்தாயிரக் கணக்கில் ஆகாயத்திலிருந்து வந்து அந்த இடத்திலே மகசூலை அழித்துவிடுகின்றன. கால்படி தானியம் கூட கிடைப்பதில்லை.

21st August 1961]

ஆண்டுதோறும் இதனால் பல ஆயிரக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அம்மாதிரி தானியத்தை சேதப்படுத்துவதனால், இதை உடனடியாக தவிர்ப்பதற்கு தீவிரமாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆகாயத்திலிருந்து பறவைகள் வருவதினால் இந்தத் தொல்லை ஏற்பட்டு பயிர்கள் நாசப் படுத்தப்படுவதால், அவைகளை கொல்லத்தான் வேண்டும். இதுபற்றி வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கும், விவசாய இலாகா அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

SRI V. SUBBIAH : இந்த "செரவி" என்று சொல்லக்கூடிய பட்சிகள் சில சந்தர்ப்பங்களில் சூரியனையே மறைத்துவிடக்கூடிய அளவிலே ஏகமாக வந்துகொண்டிருக்கின்றன. கரிசல் பிரதேசத்தில் கம்பு, தினை போன்ற மகசூல்களை ஒரே நாளில், காவல் இருந்தாலும், அழித்துவிட்டுப் போய்விடுகின்றன. அப்பேர்ப்பட்ட பட்சிகளை ஒழிப்பதற்கு திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனிதர்களே சிலர் சுரண்டுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது பறவைகள் பயிர்களை சாப்பிடுவது இயற்கைதான். பயிர்களை காப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவைகளெல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

SRI K. VINAYAKAM : Do these "Seravi" birds come only during nights? If so, how is it possible for the Shikaris to shoot these birds in darkness?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am afraid the hon. Member has no idea of Shikari skill. Shikaris do kill birds and animals even during nights.

Temples at Vikramangalam

* 1292 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Temple Inspector, Ariyalur, or the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments Board, ever inspected Soleswarar and Varadaraja Perumal temples, Vikramangalam, Udayarpalayam taluk, and examined the accounts of the temples during 1959 and 1960;

(*b*) whether it is a fact that the Temple Inspector made a report to the Assistant Commissioner, Tiruchirappalli, against the managing trustee about his reprehensible conduct; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) Charges have been framed against the Managing Trustee and the matter is still pending before the Area Committee.

SRI K. R. VISWANATHAN : May I know when the charges were framed and what charges are pending?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We have got all particulars. This is a matter for the Area Committee to go into. Either the Government or the Board cannot interfere with the discretion of the Area Committee. It can come up to the Board only after the Committee takes a decision in the matter.

SRI K. R. VISWANATHAN : May I know whether it is a fact that the Commissioner appointed an Executive Officer in the beginning and the Executive Officer found himself helpless to assume charge from the Managing Trustee and may I also know the action Government propose to take on the trustee?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information about it. Perhaps it may be so. If that is so, whatever action could be taken under the provisions of the Act are being taken.

9.00 a.m.

SRI K. R. VISWANATHAN : May I know, Sir, whether the Government are aware that the Managing Trustee did not prepare the accounts of the temple for so many years and he did not prefer to give explanation to the charges framed against him for the last one or two years and more?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may repeat that the whole matter is before the Area Committee.

Fuel (price)

* 1293 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the price of fuel per ton at present; and

(*b*) the steps taken (i) to reduce the price of fuel and (ii) to overcome the fuel shortage?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The wholesale prices of fuel in Madras City for the week ended 11th August 1961 are as follows :—

Junglewood—Rs. 55 per ton.
Casuarina—Rs. 63 per ton.
Charcoal—Rs. 251 per ton.

(*b*) The Railway authorities were addressed in April 1961 to give priority and allot additional wagon facilities for the transport of firewood from certain centres in South Arcot and Nellore districts, where accumulation of stocks of firewood was reported. The Railways have since made necessary arrangements to clear the outstanding demands for transport of firewood in the above districts.

SRI M. KALYANASUNDARAM : ஸார், வெளி ஜில்லாக்களிலிருந்து விறகு சென்னைக்குக் கொண்டு வருவதனால், மாகாணம் பூராவிலும் விறகு விலை எங்கிலும் உயரத்தான் செய்யும். ஆகவே,

21st August 1961]

பற்றுக் குறையைப் போக்க வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் இல்லையா ? சென்னை நகரத்திற்காவது, ஸ்லேவேஜிலிருந்து காஸ் தயார் செய்து, பெரிய பங்களாக்களுக்காவது கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் யோசனைப்படி காஸ் தயாரித்துக் கொடுப்பதுபற்றி ஒன்றும் பரிசீலனை இதுவரை செய்யப்படவில்லை. ஆனால், விறகு உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அது ஒரு நீண்டகாலத் திட்டம். அது மூன்ருவது திட்ட காலத்தில் நிறைவேற்றப்படும். அதில் முக்கியமானது, பல இடங்களிலும் "பார்ம் பாரஸ்ட்ரி" செய்வது, அதாவது, ஒவ்வொரு வட்டாரத்திலும் தானியம் பயிரிட முடியாத இடங்களில், மரங்களை வளர்த்து விறகுக்குப் பயன்படுத்த வேண்டுமென்பது திட்டம். அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : The soaring in prices of fuel is due to the shortage of supply in the City of Madras. Is it a fact that the Hon. Minister concerned had made a statement that by felling the trees in Parambikulam area and that fuel could be transported to the City would lessen the cost of the fuel in the City of Madras? What steps have been taken to reduce this high cost of fuel?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes, Sir. I desire to state that this a matter for negotiation with the Kerala Government. If we succeed in the negotiation we can supply to the Madras City at 2,500 tons every month for two years to come. There is so much fuel available. If we succeed in that, it will have a very good effect in reducing the price of fuel in the City of Madras.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that the price of fuel has increased by 25 per cent during the last six months? If so, will the Government consider to control the price of fuel?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member just now that there is downward trend in the price of fuel.

Rice and fuel (price)

* 1294 *Q.*—Sri A. A. RASHEED :
Sri K. SATTANATHA KARAYALAR : } Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to bring down the prices of rice and fuel-wood in Thanjavur district and in Madras City?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : In order to arrest the upward trend in the price of rice, the Government sanctioned the opening of 50 Fair Price Shops in Thanjavur district and 150 Fair Price Shops in Madras City. The Fair Price Shops in Thanjavur district were closed by the end of February 1961.

However consequent on the recent floods, the Government have sanctioned the opening of 100 Fair Price Shops in Thanjavur district. In Madras City, there are 98 Fair Price Shops at present,

As regards fuel-wood in Thanjavur district, there was some scarcity in the flood-affected areas during November 1960. Arrangements were made for the transport of fuel-wood from the adjoining divisions for sale at reasonable prices.

Regarding measures for bringing down the price of firewood in Madras City, the Railways were addressed in April 1961 to provide additional wagon facilities to clear certain accumulated stocks of firewood from different centres in South Arcot and Nellore districts and the Railways have made arrangements to clear the outstanding demands for firewood in both the above districts.

SRI A. A. RASHEED : Sir, what is the reason for the increase of price of rice in Thanjavur district, which is known as the granery of the South?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that Thanjavur may be termed as ' granery of the south '. But Thanjavur district does not retain all the rice within the district. Rice goes out of the district and therefore rise in prices has its effect in Thanjavur also.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் நடத்தும் நிவாரணக் கடைகளுக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு உதவியளிக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்கார் எவ்வளவு கேட்டாலும் கொடுக்கிறார்கள்.

SRI N. K. PALANISAMI : அப்படியானால் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு நிவாரணக் கடை வைக்க சர்க்காரால் ஏற்பாடு செய்யப்படுமா ? (சிரிப்பு.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிவாரணக் கடைகள் அவசியத்திற்குத் தக்கபடி வைக்கப்படும்.

SRI M. D. THIAGARAJA PILLAI : இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியாய விலைக் கடைகள் மிகக் குறைவாக இருக்கின்றன ; ஒரு மூட்டை, ரூபாய் 25–4–0 என்று லாரிக்கு ஏற்றப்படுகிறது. நியாய விலை கடைகளை இன்னும் சீக்கிரமாக அதிகமாக்க தக்க ஏற்பாடுகள் செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றி கலெக்டர்கள் அவ்வப்பொழுது பரிசீலனை செய்கிறார்கள். எங்கெங்கே நியாய விலைக் கடைகள் அவசியம் என்கிறார்களோ, அங்கெல்லாம் கடைகள் வைக்க அனுமதி தரப்படுகிறது. சில கலெக்டர்கள் சில கடைகளில் வாங்குவாரே இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியென்றால், அங்கு நியாயவிலைக் கடை அவசியம் இல்லை என்றுதான் அர்த்தம்.

SRI M. KALYANASUNDARAM: ஸார், காட்டிலாகா விறகு வெட்டுவது பூராவையும் காண்ட்ராக்ட்க்கு விடாமல், ஒரு பகுதியை சர்க்காரே எடுத்து வெட்டி, சென்னை போன்ற பெரிய நகரங்களில், அரிசி நியாயவிலைக் கடைகள் போன்று, விறகு நியாய விலைக் கடைகளையும் திறக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில நகரங்களைப் பொறுத்தவரையில், மலைப்பிரதேசங்களுக்குப் பக்கத்தில் இருந்தால், கோடை, உதகை போன்ற இடங்களில், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு அவர்களே ஒரு " கூப்பை " எடுத்துக் கொண்டு, மலிவான விலைக்கு விறகு

கொடுக்கலாம் என்கிறோம். அரசாங்கமே விறகுக்காக நியாய விலைக் கடைகள் வைக்கவேண்டிய அவசியம் இல்லை. கூட்டுறவு சங்கங்கள் முன் வந்தால் வேண்டிய வசதிகள் அளிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM: சூரியவெளிச்சத்தை சமயலுக்கு பயன்படுத்துகின்ற முறையை வட இந்தியாவில் கண்டு பிடித்தார்களே, அது பரிசீலனை செய்யப்பட்டதா ? அது அமுலுக்கு வந்தால், இந்த விறகுப் பஞ்ச குறைபாட்டை போக்க சுலபமாக இருக்குமா என்று பார்க்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பரீட்சார்த்தமாகச் செய்ததை, ஓரிரண்டு இடங்களில் அப்படிச் செய்ததை நாம் பத்திரிகையில் பார்க்கிறோம். அப்படி அது வெற்றிகரமாக வந்தாலும், விறகுப் பஞ்சத்தைப் போக்க முடியாது. என் எண்ணம் நெய்வேலி நிலக்கரித் திட்டம் முற்றிலும் நிறைவேற்றப்பட்ட பிறகும், விறகுப் பஞ்சம் இருந்து கொண்டேதான் இருக்கும். ஆகவே மரங்களை வளர்த்து, விறகு உற்பத்தியைப் பெருக்குவதுதான் நிரந்தரமான ஒரு வழியாக அமையும் என்றுதான் நான் சொல்லுவேன்.

SRIMATHI HEMALATHA DEVI : விறகுக்காக மரங்களை வளர்க்க வன மகோற்சவம் முதலியன செய்கிறோம். கண்ட்ராக்டர்கள் கூப்புகளை ஏலத்தில் விலைக்கு எடுக்கிறார்கள். அவர்கள், எடுத்த விஸ்தீர்ணத்திற்கு அப்பால் இதர மரங்களை முதலில் வெட்டி விடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன ? இல்லையென்றால், இனியாவது நடவடிக்கை துரிதமாக எடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தவறுகள் ஏற்பட்டால் அவ்வப்பொழுது அவை கண்காணிக்கப்படுகின்றன. கண்டு பிடித்தால், கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

Electricians for headquarters' hospitals

* 1295 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether electricians have been appointed in the district headquarters hospitals;

(*b*) if not, the reasons therefor; and

(*c*) whether there is any proposal to appoint them, in the near future?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Electricians are employed in the District Headquarters Hospitals at Tiruchirappalli, Thanjavur, Madurai, Salem, Palayamkottai, Ootacamund and Ramanathapuram. In the other District Headquarters Hospitals the maintenance and repairs of electrical installations are attended to by the Public Works Department.

(*c*) Proposals are under the consideration of the Director of Medical Services for the employment of Electricians in the District Headquarters Hospitals at Vellore, Coimbatore, Kanyakumari and Chingleput.

SRI V. K. KOTHANDARAMAN : சார், மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் பப்ளிக் ஒர்க்ஸ் இலாகா எலெக்ட்ரீஷன்கள் தான் பழுது பார்க்க வேண்டும் என்று இருக்கிற காரணத்தால், மாதத்தில் சில நாட்களில் 4, 5

மணி நேரங்கள் மின்சார விளக்குகள் இல்லாமல் நோயாளிகள் கஷ்டப் படுகிறார்கள், பாதிக்கப் படுகிறார்கள் என்று அமைச்சரவர்களுக்கும் பல லெட்டர்கள் வந்திருக்கின்றன. ஆகவே, தயவுசெய்து உடனடியாக, துரிதமாக இந்த எலெக்ட்ரிஷன்களை நியமிக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த ஆஸ்பத்திரிக்கும் இன்னும் மற்ற ஆஸ்பத்திரிகளுக்கும் எலெக்ட்ரீஷன்களுக்கு ஏற்பாடு செய்கிறோம். விளக்குகள் ஃபெயில் ஆகலாம், சில சமயங்களில். ஆனால், கனம் அங்கத்தினர் சொல்வதுபோல அந்த அளவுக்கு இருக்காது, அவ்வளவு அதிகமாக இல்லை.

Family Planning Day

* 1296 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the **Hon. the** Minister for Revenue be pleased to state—

(*a*) whether Family Planning Day was celebrated in 1959 throughout the State under the auspices of the Medical department;

(*b*) if so, in how many centres; and

(*c*) the public reaction in the various districts?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes.

(*b*) In 95 Family Planning Clinics.

(*c*) In every district there was great enthusiasm among the people to participate in the Family Planning Day Celebration. Many were eager to learn about Family Planning methods. This eagerness was particularly noticeable in rural parts.

SRI N. K. PALANISAMI : On this auspicious day, may I know what the people are expected to do?

THE HON. SRI M. A. MANICKAVELU : If it is an auspicious day, people are expected to exercise their minds very vigorously on this matter.

SRI K. VINAYAKAM : In spite of the vigorous propaganda carried on by the Government in this respect, are the Government aware of the fact that a very popular Tamil Journal of the City of Madras is carrying on a tirade against this propaganda and is almost trying to poison the minds of the mothers who wish to take to Family Planning? If so, may I know what steps the Government have taken against such kind of mischievous trade and propaganda?

THE HON. SRI M. A. MANICKAVELU : Government do not consider it necessary to take any steps in the matter, because, in spite of the tirade carried on against Family Planning, the movement is becoming very popular and it is gathering strength day by day.

21st August 1961]

SRI T. S. RAMASWAMI : The latest census figures show that the rate of increase of population in our State is the lowest when compared to the other States in India. May I know whether this is due to our propaganda or any other reasons?

THE HON. SRI M. A. MANICKAVELU : The effect of our propaganda could not have reflected on the latest census figures. But, surely, its effect will be felt later on. I think the lowest birth-rate in this State is due to-what shall I say-Tamilians' culture, tradition and all those things.

SRI A. V. P. ASAITHAMBI : இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மந்திரி சபையில் உள்ளவர்கள் அனுஷ்டித்து வருகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கொஞ்சம் பிரயாசை எடுத்துக்கொண்டு, இதைப்பற்றி கணக்கு எடுத்துப் பார்த்தால் விவரம் தெரிய வரும். (சிரிப்பு.)

SRI A. VEDARATHNAM : இந்த குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை கிருஸ்தவர்கள் மனதினுல்கூட நினைக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். நான் தேர்தலுக்கு நின்ற சமயத்தில் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் நீங்கள் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று என்னிடம் கிருஸ்தவர்கள் வாக் குறுதி கேட்டார்கள். முஸ்லீம்கள் குரானைக் காரணம் காட்டி ஹராம் என் கிறார்கள். இப்பொழுது இந்த திட்டம் இந்து சமுதாயத்தில்தான் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்ற காரணத்தினாலே, இன்னும் கொஞ்ச காலத்திலே இந்து சமுதாயம் மைனாரிட்டியாகப் போய்விடுமோ என்ற பயம் தெரிவிக்கப்படுகிறது. இதை அரசாங்கம் ஆராய்ந்ததா ? அப்படியானால் அதன்பேரில் இந்தத் திட்டத்தை புனர் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆரம்ப காலத்திலே கிருஸ்தவர்களிடமிருந்து, அதிலும் குறிப்பாக கத்தோலியர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. முஸ்லீம்களிடமிருந்தும் எதிர்ப்பு வந்தது. ஆனால் இப்பொழுது உள்ள நல்ல அனுகூலங்களைப் பார்த்து அவர்களும்கூட ஒப்புக் கொள்ளுகிறார்கள். போப் ஆண்டவர் கூட முதலிலே எதிர்த்தவர், இப் பொழுது சில முறைகளை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

Misappropriation of funds (Tiruturaipundi Block)

* 1297 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி பிளாக்கில் விவசாய இலாகா உத்தியோகஸ் தர்களால் நிதி கையாடல் செய்யப்பட்டது எந்த வருஷத்தில் ?

(இ) இதுவரை அதன் பேரில் முடிவு செய்யாது காலகரணம் செய்வ தன் காரண மென்ன ?

(உ) எப்போது இது முடிவடையும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Defalcation took place during 1956–57 and 1957–58.

(இ) & (உ) Criminal prosecution has been sanctioned against all but one of the officials concerned. The question of sanctioning the prosecution of the remaining persons is under consideration.

SRI A. VEDARATHNAM : இந்தக் கையாடலைச் செய்தவர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? இவ்வளவு நீண்டகாலமாக ஒன்றும்

[21st August 1961

செய்யாமல் இருக்கின்ற காரணத்தினுலே இந்த கேஸ் ஒன்றும் இல்லாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ?இம்மாதிரி கையாடல் செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை யென்ருல் அவர் களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் அளித்த விடை கனம் அங்கத்தினர் காதில் விழவில்லை என்று நினைக்கிறேன். கிரிமினல் பிராசிகியூஷன் சாங்ஷன் ஆகியிருக்கிறது. கொஞ்சம் தாமதம் ஆவதற்கு காரணம் கணக்கு எல்லாம் வரவேண்டியிருந்தது. அக்கௌண்டண்ட் ஜெனரல் ஆபீசிலிருந்து தகவல் வரவேண்டியிருந்தது. அது வருவதிலே கொஞ்சம் காலதாமதம் ஆயிற்று. சம்பந்தப்பட்டவர்களிடம் எக்ஸ்பிள னேஷன் கேட்டு பிராசிகியூஷன் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விஷயம் பரிசீலனையிலிருப்பதால் இன்னும் அதிகமாக தகவல் கொடுப்பது முறையல்ல.

Central Jails

* 1298 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சிறைகளில் விவசாயத்திற்காக யந்திரங்களையும் அதற் கான கருவிகளையும் செய்வதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உத்தேச முண்டா ?

(இ) எந்தெந்த தொழிற்சாலைகள் எந்தெந்த சிறைகளில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(அ) No, Sir.

(இ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : மத்தியச் சிறைச்சாலைகளிலே குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அடைந்தவர்களுக்கு ஒரு தொழில் நுட்ப பயிற்சி அவர்களுக்கு அளிக்க வேண்டியதாய் இருப்ப தினுல் விவசாயிகளுக்கு வேண்டிய இயந்திரங்களை தயார் செய்வதை முன்னிட் டாவது, ஒன்றிரண்டு மத்திய சிறைச்சாலைகளில் இது போன்ற தொழிற் சாலைகளை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வது நல்லது என்று கனம் அமைச் சர் அவர்கள் கருதுகிருர்களா ? இனிமேலாவது அந்த மாதிரி ஆரம்பிப்ப தற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவிப்பவர்களுக்கு தொழில் கற்றுக்கொடுக்க வேண்டியதன் நோக்கம், சிறையைவிட்டு வெளியே வந்த பிறகு அவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபடவேண்டும் என்பதற்காகத்தான். அப்படிப் பார்க்கும் பொழுது, ஒரு குறிப்பிட்ட தொழிலிலே பயிற்சி பெறுகின்றவர்கள் அதை நடத்த முடியாமலிருக்கலாம். இப்பொழுது கீழ்க்கண்ட தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

Tailoring, aluminium and blacksmithy work, spinning and weaving, boot making, carpentary, book-binding, handmade paper-making, composing in printing press, gardening, cooking, etc.

Pamani-Kallimedu road.

* 1299 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுக்கா பாமணி-கள்ளிமேடு ரஸ்தா வுக்குக் கப்பி போடத் திட்டமுண்டா ?

21st August 1961]

(இ) அப்படியானால், எப்போது, என்ன செலவில் ?

THE HON. SRI P. KAKKAN : (அ) No, Sir.

(இ) Does not arise.

SRI A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தபொழுது இந்தப் பகுதி ரஸ்தாவைப் பார்த்தார்கள். அந்தப் பக்கத்திலுள்ள கிராமவாசிகள் எல்லோரும் தங்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். அந்தச் சமயத்தில் இதைக் கவனித்து உடனே வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக சொன்னதோடுமட்டு மல்லாமல், அங்கே உள்ள அதிகாரிகளிடமும் குறிப்பு எடுத்துக்கொள்ளச் சொன்னார்கள். இப்பொழுது நெகடிவ் பதில் கொடுக்கின்ற காரணம் தெரியவில்லை. தயவு செய்து இதை கவனித்து ஆவன செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நான் வாக்களித்ததற்கு இணங்க ஏற்பாடு நடந்து வருகிறது. இப்பொழுது இதை எடுத்துக் கொள்வதா அல்லது பிறகு எடுத்துக்கொள்வதா என்பதுதான் பிரச்னை. மூன்று லட்சம் ரூபாய்க்கு திட்டமிட்டு இதை பரிசீலனை செய்து வருகிறோம். மூன்றுவது திட்டத்தில் இது சேர்க்கப்படவில்லை. பின்னர் பரிசீலனை செய்து சேர்த்துக் கொள்ளலாம்.

Steel (Export)

* 1300 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேனிரும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் ஆட்சேபணை செய்துள்ளார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

DEPUTY SPEAKER : Next question.

Sri S. M. Annamalai rose.

DEPUTY SPEAKER : When the answer is in the negative, I do not know what the hon. Member is going to ask?

Sri S. M. Annamalai again rose.

DEPUTY SPEAKER : When the answer is 'No', I am not going to allow any supplementary question. I have already called the next question. The hon. Member will please resume his seat.

By-pass roads (Pennagaram)

* 1301 *Q.*—SRIMATHI HEMALATHA DEVI : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் ஜில்லா தர்மபுரி தாலுக்காவில் உள்ள பென்னகரத்தில் தர்மபுரி ஒகேனக்கல் ரோட்டிற்கு பை-பாஸ் ரோடு போட உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Yes.

SRIMATHI HEMALATHA DEVI : இந்த ரோடானது அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும்படியான நிலையிலே மிகவும் குறுகலாக இருப்பதினாலே, கூடிய சீக்கிரம் இந்த வேலையைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இது முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டிய ரோடாக இருப்பதினாலே, மூவாயிரத்து நானூறு அடி நீளத்திற்கு ஒரு பை-பாஸ் ரோடு போடுவதற்கு திட்டமிட்டிருக்கிறோம். அதுவும் வெகு சீக்கிரத்தில் போடப்படும்.

[21st August 1961

Clerks in the Registration department

* 1302 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have given effect to the recommendation of the Madras Pay Commission for upgrading clerks in the Registration Department?

The Hon. Sri V. RAMAIAH : Yes, Sir.

Industrial Development

* 1303 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government's attention has been drawn to the suggestion made by the National Council of Applied Economic Research that an investment of Rs. 1,600 crores should be allotted for the Industrial development of Madras State in view of the economic backwardness of the State;

(*b*) whether this Government have represented to the Centre to bear the major portion of the expenditure; and

(*c*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) The Report on Techno-Economic Survey of Madras has just been printed. The recommendations made in the Report are being examined by Government.

Sri N. K. PALANISAMI : திட்டங்கள் போடுவதற்கு முன்பே பல ராஜ்யங்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. பல ராஜ்யங்கள் பின்தங்கி யிருக்கின்றன. ரீஜினல் டிஸ்பாரிடி போக வேண்டுமானுல், ஜனத்தொகை அடிப்படையில் பார்க்காமல், எந்தப் பிரதேசம் பின்தங்கி யிருக்கிறதோ அதற்கு அதிகப்பணம் ஒதுக்க வேண்டுமென்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு வற்புறுத்தி எடுத்துச் சொல்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த மூலக்கேள்விக்கும் கனம் அங்கத்தினர் போடும் ஸப்ளிமெண்டரி கேள்விக்கும் சம்பந்தமே கிடையாது. டெக்னோ-இகனுமிக் ஸர்வே செய்தவர்கள் என்ன சிபார்சு செய்திருக்கிறார்கள், அதை எப்படி இம்ப்ளிமெண்ட் பண்ணுவது என்பது பற்றியது கேள்வி. அது சம்பந்தமாக ஸப்ளிமெண்டரி கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

Diesel Engines

* 1304 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any Madras Firm has been licensed to make new chassis for diesel engines?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes, Sir. One firm, viz., Ashok Leyland, Limited has been licensed to make chassis for diesel engines.

Sri A. A. RASHEED : May I know, Sir, whether any loan or aid has been given to this firm and if so, how much?

The Hon. Sri R. VENKATARAMAN : It is not in the public interest to disclose matters about a private company,

21st August 1961]

Illicit felling of trees (Madurai district)

* 1305 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, உத்தமபாளேயம், தாமரைக் குளம், தேவாரம் கண்மாய் போன்ற குளங்களில் உள்ள மரங்களை திருடர்கள் வெட்டிச் செல்வது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) இதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No intimation has been received about the illicit cutting of trees. The babul trees at the tank bed of Tamaraikulam belonging to Public Works Department were sold in public auction and removed. Presumably, this might have been taken as illicit cutting.

SRI N. R. THIAGARAJAN : சென்ற ஐந்தாண்டுகளாக "குளங்களில் உள்ள மரங்களை ஏலத்திற்கு விட்டு விடுங்கள்" என்று அங்குள்ளவர்கள் சொல்லியும், ரெவினியூ டிபார்ட்மெண்டாரும் பொது மராமத்து டிபார்ட் மெண்டாரும் ஒத்துக்கொள்ளாததால், மரங்கள் ஏலத்திற்கு விடப்படாமல் இருக்கின்றன. அதனல் யார் யாரோ மரங்களை வெட்டிக்கொண்டு போய்கொண்டிருக்கிறார்கள். உத்தமபாளேயம், தாமரைக்குளம் கண்மாய் களிலுள்ள மரங்களை உடனடியாக ஏலம் விடவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : தாமரைக் குள மரங்களை ஏலத்திற்கு விட்டிருக்கிறார்கள். ஏலம் விட்ட மரங்களை வெட்டிக்கொண்டு போகவில்லை. அதனல், அவைகளில் சிலவற்றையாவது வெட்டிக்கொண்டு போயிருக்க லாம். ஏலம் விட்ட பிறகு, வெட்டிக் கொண்டு போவதைப் பார்த்து, திருட்டுத்தனமாக வெட்டிக்கொண்டு போவதாகச் சொல்லப்படுகிறதோ என்னவோ என்று கலெக்டர் தகவல் தந்திருக்கிறார். தேவாரத்திலிருப் பது பொது மராமத்து இலாகாக் குளம் அல்ல. அது ரெவின்யூ இலாகா வின் கீழுள்ள மைனர் இர்ரிகேஷனைச் சேர்ந்தது என்று நினைக்கிறேன். அதிலுள்ள மரங்கள் ஏலம் விடப்பட்டு இருந்தாலும்; வெட்டிக் கொண்டு போகப்படாமலிருந்திருக்கலாம். அவைகளில் சிலவற்றை யாராவது வெட் டிப் போவதைப் பார்த்து, திருட்டுத்தனமாக வெட்டுவதாக கனம் அங்கத் தினர் நினைக்கிறார் போலும். சில ஏரிகளில் மரங்கள் அதிகமாக இருக் கின்றன. அதிகமாக வளர்ந்து முற்றின மரங்களை ஏலம் விடுவதற்குத் தக்க ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறோம்.

Institute of Handloom Technology

* 1306 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் கைத்தறித் தொழில் கல்வி நிலையங்கள் (Institute of Handloom Technology) எத்தனை, எங்கு உள்ளன ?

(இ) 1959-ல், 1960-ல் எவ்வளவு பேர் பயிற்சி அளிக்கப்பட்டனர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : There are no institutes of handloom technology in this State. During 1959–60, there were, however, 17 institutions in this State in which handloom weaving courses were taught as shown below :—

Madras	4
Thanjavur district	3
Tiruchirappalli district	2
Tirunelveli district	2
Salem district	1
Kanyakumari district	5

[21st August 1961

(இ) The total number of candidates on rolls during 1959-60 in these institutions was 477.

Welfare of Backward Classes

* **1307Q.—Sri A. VEDARATHNAM** : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் ஷெட்யூல்டு வகுப்பினரின் நலனுக்காக நம் மாநிலத்திற்கு ஒதுக்கிய 16 கோடி ரூபாயை குறைக்கும் உத்தேசம் மத்திய அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) அப்படியாளுல், அந்தத் தொகை குறைக்காது வழங்கத் தக்க நடவடிக்கை நம் அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா ? அதன் விவரமென்ன ?

The Hon. Sri P. KAKKAN : (அ) & (இ) A statement[a] is placed on the table of the House.

Sri A. VEDARATHNAM : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற எட்டில் இரண்டாவது பாராவில், "The All-India outlay for third plan for backward classes has been drastically cut down to Rs. 100 crores" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முறையிலே நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையைக் குறைக்க ஏற்பாடு உண்டா ? ஒதுக்கப்பட்ட தொகை முழுதும் கிடைக்குமா ? குறைக்கும் உத்தேசம் இருந்தால், அப்படிக் குறைக்காமலிருக்க நம்முடைய அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : மொத்தமாக, இந்தியா தேசத்திலுள்ள ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், பின் தங்கிய மக்கள் இவர்கள் எல்லோருக்குமாகச் சேர்த்து 100 கோடி ரூபாய்தான் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிருர்கள். அப்படி ஒதுக்கும்போது, நம்முடைய மாநில ஜனத்தொகை அடிப்படையில் நமக்கு எவ்வளவு ஈவு கிடைக்குமோ அதைவிடக் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக வந்திருந்தாலும் மேலும் அதிகமாகச் செலவழிக்க வேண்டிய தொகையை இந்த மாநிலமே ஏற்றுக் கொள்வதற்கு முன் வந்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 12 கோடி செலவு செய்திருக்கிரேம், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 20 கோடி செலவு செய்ய இருக்கிரேம் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Sri P. G. MANICKAM : சென்னை ராஜ்யத்தில் தீண்டாமையினுல் ஏற்படும் கொடுமைகள் அதிகமாக இருக்கின்றன என்றும், இவைகளினுல் பாதிக்கப்பட்டவர்களுடைய புனர்வாழ்வுக்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் மத்திய சர்க்காரினுல் நியமிக்கப்பட்ட ஷெட்யூல்டு வகுப்பார், ஷெட்யூல் ட்ரைபினர்களுக்கான கமிஷனர் தம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர். நமது சென்னை ராஜ்யத்திலுள்ள ஷெட்யூல் வகுப்பினரின் புனர்வாழ்வுக்கான காரியங்களை அதிகமாகச் செய்ய வேண்டுமென்று கமிஷனர் அவர்களே தெரிவித்திருக்கும் காரணத்தைக் காட்டியாவது இன்னும் அதிகத் தொகை பெறுவதற்கு நம்முடைய சென்னை சர்க்கார் முயற்சி செய்யுமா ? இதுபற்றி மத்திய சர்க்காருக்கும் தெரிவிக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : அதெல்லாம் திட்டம் போடும்போது நன்கு பரிசீலனை செய்து, இந்த மாநிலத்திற்கு எவ்வளவு ஒதுக்க வேண்டுமென்று முடிவு செய்து இருக்கிருர்கள். மேற்கொண்டும் அதிகமாகத் தேவைப்படுமானுல், அதை இந்த மாநில சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத்

[a]Printed as Appendix I on page 532 infra.

21st August 1961]

தெரிவித்துக் கொள்கின்றேன். கனம் அங்கத்தினர் முன்னுரையாகச் சொல்லும்போது, கொடுமைகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஒரு சில இடங்களில் அத்தகைய கொடுமைகள் இருக்கலாமே தவிர, பொதுவாக நம்முடைய மாநிலத்திலுள்ள மக்கள் மனதார நல்ல முறையில் தீண்டாமையை ஒழிப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Marudayar Scheme

* 1308 *Q*.—SRI K. R. VISWANATHAN (on behalf of Sri T. K. SUBBIAH): கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருதையாறு திட்டத்தினால் எந்தெந்த கிராமங்களில் எவ்வளவு நிலங்கள் (கிராமவாரியாக) பயனடைகின்றன ?

(இ) இதனால் எவ்வளவு தானியம் அதிக உற்பத்தியாகும் ?

(உ) இத்திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் ?

(எ) இந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN: (அ) to (எ) The attention of the hon. Member is invited to the paper[a] placed on the table of the House.

SRI K. R. VISWANATHAN: தலைவர் அவர்களே, மருதையாறுத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலேயே எடுக்கப்படும் என்று முன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது அந்தத் திட்டம் பரிசீலனை செய்த பிறகுதான் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. பரிசீலனை முடிய இன்னும் எவ்வளவு நாள் ஆகும் ? பரிசீலனை முடிந்து, இந்த வேலை மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்திற்குள் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் அதை அரசாங்கம் கவனிக்க முன்வந்துள்ளது. ஆகையால், பரிசீலனை செய்யும்போது, வெகு சீக்கிரம், அதிக நாள் என்பது இல்லை, எவ்வளவு விரைவாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வர முடியுமோ அந்த வகையில் அரசாங்கம் முயற்சி செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: திருச்சி ஜில்லாவில் பரிசீலனை முடிந்து சிபார்சு செய்யப்பட்டிருக்கிற நான்கு திட்டங்களில் இந்தத் திட்டம் ஒன்றல்லவா ? அப்படியிருக்கும்போது, ஏன் இது இன்னும் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN: அதைத் தான் கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு முதலில் பதில் சொன்னேன். இறுதியான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. இறுதி முடிவு எடுத்த பிற்பாடுதான் அதுபற்றி விவரமாகச் சபையில் தெரிவிக்கப்படும்.

SRI S. RAMALINGA PADAYACHI: முதலில் இந்தத் திட்டத்தின் மூலம் 30 ஆயிரம் ஏக்கராவுக்குத் தண்ணீர் பாய வசதி இருக்கும் என்ற வகையில் பரிசீலனை செய்யப்பட்டது. அதற்குப் பின் இதைக் குறைத்து, 15 ஆயிரம் ஏக்கராவுக்குத்தான் பாயும் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான ஏக்கராவுக்குப் பாய வேண்டும் என்று எடுத்த திட்டத்தைக் குறைத்துக் கொள்வதினால் அதிகச் செலவாகும் என்ற எண்ணத்தில் இராமல், திட்டத்தை கைவிடாமல் 15 ஆயிரம் ஏக்கராவுக்காவது இதன் மூலம் பாசன வசதி கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: பரிசீலனை செய்யப்பட்டு நமக்கு வந்திருக்கும் தகவலிலே 13,674 ஏக்கராக்களுக்குத்தான் இந்தத் திட்டத்தை நாம் பயன்படுத்த முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். முதலிலே கனம்

[a] Printed as Appendix II on pages 532—533 infra.

[21st August 1961

அங்கத்தினர் சொன்ன அளவுக்குப் பாசன வசதி கொடுக்க முடியுமா என்று பரிசீலனை செய்திருக்கலாம். கடைசியாக ஒரு முடிவுக்கு வரும் போது 13,674 ஏக்கராக்களுக்குத்தான் பயன்படும் என்று தெரிகிறது.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் திட்டப் பரிசீலனை பூர்த்தி செய்யப்பட்டு, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகலில் சேர்க்கப் பட்டுள்ளது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? போதுமான நிதி ஒதுக்காத காரணத்தால் அது கைவிடப்படும் என்பதற்கு அறிகுறியாக இப்படி ஜவாப் சொல்லப்படுகிறதா?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே பரிசீலனை செய்திருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். நீர்ப்பாசனத்திற்கு அதிகமாக நாம் திட்டம் போட்டோம். பிறகு திட்டக் கமிஷனில் குறைத்து விட்டதினால், நாம் எந்த எந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்வது என்பது பற்றி இன்னும் இறுதி முடிவு செய்யப்படவில்லை. ஆகையால், கைவிடப்படுமா, கைவிடப் படாதா என்ற பிரச்னை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Palar Basin Rules

* 1309 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பாலாறு பேசின் விதிகள் மற்ற உப நதிகளுக்கும் உள்ளதை ரத்து செய்ய வேண்டுமென்று வடாற்காடு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் அனுப்பிய தீர்மானத்தின்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

9-30 a.m.

THE HON. SRI P. KAKKAN : No action has been considered necessary on the resolution for relaxation of the Palar basin rules as such relaxation is being made wherever extension of irrigation by lift is possible without affecting the existing interests.

SRI V. K. KOTHANDARAMAN : கிணறுகளுக்கு பம்பு செட்டு முதலியன வைப்பதற்கு அனுமதி அளிக்கும்போது ஒரு கிணற்றுக்கும், இன்னொரு கிணற்றுக்கும் இடையில் 2,000 அடி இருக்கவேண்டும் என்பதாக சமீபத்தில் விதி ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. அதையும் கூட ரத்து செய்ய வேண்டுமென்ற அளவுக்கு வடாற்காடு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் தீர்மானம் போட்டு, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக அதை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன செய்வதாக உத்தேசம்?

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

Coconut (Exemption from salestax)

* 1310 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have received any representation recently from the Provincial Coconut Producers and Merchants Association to exempt coconut from sales tax?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

SRI V. K. KRISHNAMURTHY : தேங்காயானது எண்ணெய் வித்துக்களுடன் சேர்க்கப்பட்டிருப்பதால் கொப்பரைக்கு வரி விதித்துவிட்டு, இள நீருக்கும், தேங்காய்க்கும் வரி விதிக்காமல் இருக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தியா சர்க்கார் " எண்ணெ வித்துக்கள்" என்ன என்ன என்று குறிப்பிட்டு ஒரு சர்க்குலர் அனுப்பினார்கள் அதைப் படிக்கிறேன். " Coconut has to be understood to mean coconut—fresh or dried, shelled or unshelled including copra, but excluding tender coconuts." ஆகையால் இளநீர்களைத் தவிர மற்றது எல்லாம் எண்ணெ வித்துக்கள் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.* An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. POINT OF ORDER *re* PUTTING SUPPLEMENTARY QUESTIONS.

SRI S. M. ANNAMALAI : On a point of order, Sir. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உபகேள்வி கேட்க உரிமை இருக்கிறது. அதனாலேயே நாங்கள் உபகேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறோம். என்னுடைய மெயின் கேள்வியே சரியான முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படாததால் —அது வேறுவிதமாக மாற்றி அமைக்கவும் பட்டிருப்பதால் அதைப் பற்றி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் வேறு எந்த வகையில் அதைப்பற்றி நான் எழுப்ப முடியும் என்று கேட்கிறேன்.

DEPUTY SPEAKER : While the hon. Members have got a right to put supplementary questions, the Chair has got the right to allow or disallow a supplementary question.

III. PERSONAL EXPLANATION UNDER QUESTION NO. 1290.

THE HON. SRI V. RAMAIAH : On a point or personal Explanation Sir ; திரு. என். ஆர். தியாகராஜன் போட்ட மூலக் கேள்விக்கு (கேள்வி—1290) கனம் மூக்கைய தேவா அவர்கள் உபகேள்வி போடும் போது மதுரை ஜில்லாவில் நான் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அந்தப் பிராந்திய விவசாயிகளுக்கு கம்பளிப் பூச்சியினால் உண்டாகிற துன்பங்களை நீக்கப் பல வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அதை அப்படியே விட்டு விட்டதுபோலப் பேசினார்கள். அதைப்பற்றி அவர்கள் சரியான முறையில் தெரிந்து கொள்ளாது, தெரிந்துக்கொள்ள முயற்சி செய்யாது ஏதோ பிரசார ரீதியில் பேசுவது சரியல்ல. பத்திரிகையில் வந்த செய்தியைப்படித்துவிட்டு அதுபோல் அமைச்சர் அவர்கள் செய்வது சரியா என்று கேட்டார்கள்.

கனம் அங்கத்தினர் மூக்கைய தேவர் அவர்களுக்கு அப்படி பத்திரிகையில் வந்த செய்தி தவறு, என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கின்றன என்று என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். நடந்தது என்ன என்று பார்க்கலாம். மதுரைக்கு நான் போய் இருக்கக் கூடிய நேரத்தில் ஒரு பத்திரிகைச் செய்தியை " உசிலம்பட்டியில் கம்பளிப் பூச்சித் தொந்தரவினால் ரயில் ஓடுவது நின்று விட்டது " என்பதைப் பார்த்தேன். அதைப் பார்த்தவுடன் ஏற்பட்ட வேதனை காரணமாக மற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் விட்டுவிட்டு உடனே அந்த இடத்திற்குச் சென்று கிட்டத்தட்ட இருபது இருபத்திரண்டு கிராமங்களுக்குச் சென்று பார்த்தேன். ஏதோ ஒரு கிராமத்தில் இருந்து விவசாயிகளுடன் பேசி அவர்களுக்கு ஏதோ வாக்குறுதி கொடுத்துக்கொண்டிருக்கவில்லை. நின்று பேசக் கூட அப்போது நேரமில்லை. ஆனால் நான் செய்தது என்ன ? கம்பளிப் பூச்சியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களையும், அங்குள்ள கஷ்ட நிலையையும் கண்டவுடன் உடனே அரசாங்கத்திற்கு தெரிவித்துத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நினைத்தேன். அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினேன். அதுபற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படியாகவும் சொல்லிவிட்டு வந்தேன். அவர்கள் அன்று முதல் அங்குள்ள

[Sri V. Ramaiah] [21st August 1961

கஷ்டமான நிலையை ஆராய்ந்து பார்த்து ஒரு அறிக்கை அரசாங்கத்திற்குக் கொடுத்தார்கள். அதே சமயத்தில் மீண்டும் ஒரு வாரத்திற்குப் பிறகு அங்கு இருக்கக் கூடிய அதிகாரிகளையும், விவசாய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையும் அழைத்து மதுரையிலேயே அதிகாரிகளின் கூட்டம் ஒன்றைப் போட்டிருந்தோம். அவர்கள் புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்து நஷ்டம் இவ்வளவு ஏற்பட்டிருக்கும், இதை ஒழிப்பதற்குப் பூச்சி மருந்துகளை விநியோகிப்பது, நஷ்டம் அடைந்தவர்களுக்கு உதவுவது என்று திட்டவட்டமாகப் பல யோசனைகளைச் சொன்னார்கள்.

Sri M. KALYANASUNDARAM : நாங்கள் அறிந்த மட்டில் திரு. மூக்கையதேவர் அவர்கள் கனம் ராமையாவைப் பற்றிச் சொல்லவில்லை. அப்படியே இருந்தாலும் ரூல் 41 படி ஸ்டேட்மெண்டு கொடுக்கலாம். அதைவிட்டு இவ்வளவு நீண்ட பிரசங்கம் செய்ய வேண்டுமா ?

DEPUTY SPEAKER : The Hon. Minister perhaps wants to explain his position clearly.

The Hon. Sri V. RAMAIAH : எல்லாப் புள்ளி விவரங்களையும் வைத்துக்கொண்டு முடிவு எடுக்க வேண்டியிருந்தது. திரு. கல்யாணசுந்தரம் இங்கே கவனிக்க வேண்டும்—இதுவரையிலும் அந்தப் பகுதியில் கம்பளிப் பூச்சித் தொந்தரவினால் ஏற்படுகிற கஷ்டங்களை ஜனங்களே அனுபவித்து வந்தார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கே வந்தது இல்லை. ஆனால் இந்த முறை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரச் செய்தேன். அதிகாரிகளும் சில சிபார்சுகளைச் செய்தார்கள். உசிலம்பட்டி, நிலக்கோட்டை முதலிய பகுதிகளில் கம்பளிப்பூச்சி ஒழிப்பு நடவடிக்கையும், நிவாரண வேலைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்த வட்டார மக்கள் எவ்வளவு நன்மை அடைந்திருக்கிறார்கள் என்பதை அந்த வட்டார மக்களைக் கேட்டால் தெரியும். கனம் மூக்கைய தேவர் அவர்களுக்குத் தெரியுமோ என்னமோ ரூல் 41 படி திரு. சந்திரசேகரன் அவர்கள் கேட்டதற்கு கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த விரிவான அறிக்கையையும் அவர்கள் பார்க்கவில்லை. அதனால் தான் இத்தகைய உபகேள்வி கேட்டார்கள் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER : The Hon. Minister may finish his speech soon.

The Hon. Sri V. RAMAIAH : Yes, Sir, I want to put an end to this kind of propaganda. கனம் மூக்கைய தேவர் அவர்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டாலும் விவசாயிகளுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக அந்தப் பிரச்சனையைப் பரிசீலனை செய்து என்னால் முடிந்ததைச் செய்திருக்கிறேன் என்று நான் நினைக்கிறபோது நான் சந்தோஷமே அடைகிறேன்.

Sri S. MOOKIAH THEVAR Rose.

DEPUTY SPEAKER : There cannot be a discussion on the matter. The hon. Member may resume his seat.

IV. DISCUSSION UNDER RULE 57, VIZ., ALIENATION OF GOVERNMENT PORAMBOKE LANDS, AT SUBRAMANIAPURAM (GOLDEN ROCK PANCHAYAT) TO Messrs. T. V. S. AND SONS.

DEPUTY SPEAKER : Hon. Member Sri M. Kalyanasundaram has given notice under Rule 57 of the Assembly Rules to raise a discussion on an urgent matter of administration, viz., the alienation of Government Poramboke lands at Subramaniapuram (Golden Rock Panchayat) to Messrs. T. V. S. & Sons, depriving the Panchayat of its claim over the lands. Sri M. Kalyanasundaram may now speak.

21st August 1961]

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சனையானது மிகவும் முக்கியமானது. பஞ்சாயத்து ஆட்சி, இன்னும் நம்முடைய கிராமப் புறத்தின் அபிவிருத்தி ஆகியவற்றில் மிகவும் அக்கறை கொண்டிருக்கிற நமது அரசாங்கம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பிரச்சனை இது என்பதனால் இதை ரூல் 57 படி இங்கே ஒரு நாள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்த வேண்டியதாக ஆயிற்று.

டி.வி.எஸ். பஸ் முதலாளிகள் நம் ராஜ்யத்தில் பஸ் தொழிலில் முதல் ஸ்தானம் வகிக்கக் கூடியவர்கள். பெரிய ஏகபோக முதலாளி என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

அவர்கள் தொழில் நடத்த வசதி செய்து கொடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அவர்களும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் தொழில் நடத்த வேண்டும், எவ்வளவு செல்வாக்கு உள்ளவர்களாக யிருந்தாலும் சரி, அல்லது எவ்வளவு பணம் உள்ளவர்களாகயிருந்தாலும் சரி, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் தொழில் நடத்த அனுமதி கொடுக்க வேண்டுமே தவிர சட்ட திட்டங்களைப் புறக்கணிக்கக் கூடிய முறையில் அதிகாரிகள் யார் உத்தரவு பெற்றுச் செய்தார்கள் என்று தெரியாது. இப்படிச் சில அதிகாரிகள் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பொன்மலை பஞ்சாயத்து பிரதேசத்தில் புதிதாக சென்னையிலிருந்து மதுரைக்குப் போகக் கூடிய பெரிய ரோடு திருச்சி நகரினுள் பிரவேசிக்காமலேயே போகக்கூடிய சாலை அமைந்து கொண்டிருக்கிறது. காவேரி ஆற்றின் மேல் பாலம் கட்டி பூர்த்தி செய்து விட்டால் திருச்சி நகரில் பிரவேசிக்காமலே நேரடியாக சென்னையிலிருந்து இந்தச் சாலை மூலம் வெகு துரிதமாகவும், சுலப மாகவும் போய்ச் சேர முடியும். ஆகவே இந்த ரோடு இப்பொழுது ரொம்பவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டது. அந்த ரோடிற்கு அருகில் டி.வி.எஸ். முதலாளிகளுக்கு எப்படியாவது ஒரு நல்ல இடம் வேண்டும்; அவர்களுடைய பஸ் போக்குவரத்திற்கு இந்த ரோடு மிகவும் அவசியம். திருச்சிக்கு புதுக்கோட்டை மார்க்கமாகவும், மதுரை மேலூர் மார்க்கமாகவும், திண்டுக்கல் மார்க்கமாகவும் போகக் கூடிய ரஸ்தாக்களின் சந்திப்பாக அந்த ரோடு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ரோடில் முக்கிய இடம் வேண்டுமென்று டி.வி.எஸ். முதலாளிகள் கடந்த நாலைந்து வருடங்களாகவே பலவிடங்களில் முயற்சி செய்து கொண்டிருந் தார்கள். பொன்மலை பஞ்சாயத்திற்கு ''தினசரி மார்க்கட்'' கட்டுவதற்காக ஒரு இடமும், பார்க் அமைப்பதற்காக ஒரு இடமும் ஒதுக்க வேண்டுமென் றும் உள்ள ஆலோசனை அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வந்தது. இது இரண்டும் திருச்சியிலிருந்து புதுக்கோட்டை போகும் ரோடிற்கு இரு புறத்திலும் இருக்கக் கூடியது. மார்க்கட்டிற்காக கேட்ட இடத்தை பொன் மலை மார்க்கட்டிற்குக் கொடுக்க வேண்டுமென்று ரெவின்யூ போர்ட்டால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் அதை நேரடியாக டி.வி.எஸ். க்கு கொடுக்க முடியவில்லை போலும். எதிர்த்தாற்போல், ஜமால் மொஹ மட் காலேஜை யொட்டியும், சிலோன் லேபர் கமிஷனர் ஆபீசுக்கும் இடையே இருக்கக்கூடியது வெகு முக்கியத்துவம் வாய்ந்த இடம். திருச்சியிலிருந்து புதுக்கோட்டை போகும் ரோடு, திருச்சியிலிருந்து திண்டுக் கல் மேலூர் போகக் கூடிய ரோடு இவைகளை இணைக்கக்கூடிய இடம். அந்த இடம் சர்க்கார் புறம்போக்கு. 2 ஏக்கர் 3 செண்ட். இது, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு வொர்க்ஷாப் கட்டுவதற்கும், பஸ் நிறுத்த டிப்போ கட்டவும் கோரப்பட்டிருந்தது. அதற்காகக் கட்டிடம் கட்ட ஸ்கெச் தயார் செய்து எஸ்டிமேட் போட்டு அரசாங்கம் இறுதியாகக் கூட முடிவு எடுத்து விட்டது என்று கூறலாம். அந்நேரத்தில் அந்த இடத்தை டி.வி.எஸ்.-க்குக் கொடுத்து விடுவது என்றால்? ஏனெனில் பஞ்சாயத்து மார்க்கட்டுக்கு என்றுள்ள இடத்தை டி.வி.எஸ்.-க்கு கொடுத்து விட்டால் அது ரொம்பவும் பச்சையாகயிருக்கும். ஆகவே, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு ஒதுக்கியிருந்த இடத்தை டி.வி.எஸ்.-க்கு கொடுத்து விட்டு பஞ்சாயத்து தினசரி மார்க்கட்

கட்ட ஒதுக்கியிருந்த இடத்தை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு கொடுக்க வேண்டுமென்று சில அதிகாரிகள் முடிவு எடுத்து விட்டார்கள். இத் திட்டங்கள் எப்பொழுது என்னென்ன காரணங்களால் உருவாயிற்று என்று கவனிக்க வேண்டும். அந்த இடத்தை டி.வி.எஸ்.-க்கு மாற்றிக் கொடுத்து விட்டால் அரசாங்கத்தின் எண்ணம் வெளியாகிவிடும் என்று நினைத்தோ என்னவோ அதிகாரிகளுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அரசாங்கத்திற்கு தேவையாகயிருக்கிற இடத்தை டி.வி.எஸ். அரசாங்கத்திற்குக் கொடுத்து உதவ முன் வருவதுபோல் ஒரு நாடகம் நடத்துவது என்று. திருச்சியில் ஹரிஜன் ஹாஸ்டல் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தை டி.வி.எஸ். முதலாளி விலைக்கு வாங்கி அதை அரசாங்கத்திற்கு கொடுத்து அதற்குப் பதிலாக இந்த இடத்தை அரசாங்கம் டி.வி.எஸ்.-க்கு மாற்றுக் கொடுப்பதாக ஒரு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன ஹாஸ்டல் நல்ல இடத்தில் கட்டப்பட வேண்டுமென்பதில், இரு அபிப்பிராயம் கிடையாது. அதற்கு இடம் வேண்டுமென்றால் இதை விட நல்ல இடம் திருச்சியில் சர்க்கார் கையில் இருக்கிறது. கன்டோன்மெண்ட் பகுதியில் 4 ஏக்கருக்குக் குறையாமல் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. அங்கு கட்டினால் பல கல்லூரிகள், பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு அருகாமையில் இருக்கும். ஹரிஜன மாணவர்களுக்கும் போக வர சௌகரியமாகயிருக்கும். அதற்கும் பதில் டி.வி.எஸ். ஓர் இடிந்த இடத்தை வாங்கி ஹரிஜன மாணவர்களுக்குத் தானம்கொடுப்பதாகச் செய்து அதற்குப் பதிலாக இந்தச் சர்க்கார் புறம்போக்கு நிலத்தை பஞ்சாயத்திற்கு பார்க் கட்ட ஒதுக்க வேண்டுமென்றிருந்த நிலத்தை டி.வி.எஸ்.-க்கு கொடுக்க முடிவு எடுக்கப்பட்டது. இவையெல்லாம் மறைமுகமாக நடந்து கொண்டிருக்கிறது. உண்மையில் ஹரிஜன மாணவர்களின் தேவைக்காகச் செய்யப்பட்டிருந்தால் அது வேறு விஷயம். அதை ஆட்சேபிக்க மாட்டேன். ஹரிஜன் ஹாஸ்டல் கட்ட எவ்வளவோ இடம் இருக்கிறது. அங்கு கட்டியிருக்கலாம். ஆனால் டி.வி.எஸ்.-க்கு இந்த இடத்தைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் உள்நோக்கம். இன்னொரு நோக்கமும் இருக்கிறதோ என்னவோ? கோல்டன் ராக் பஞ்சாயத் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாக உள்ள பஞ்சாயத்து. சில அமைச்சர்கள் அங்கு சுற்றுப்பிரயாணம் செய்யும்போது கம்யூனிஸ்ட் தேர்ந்தெடுத்தால் ஒன்றும் நடக்காது என்று பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். கோல்டன் ராக் பஞ்சாயத்திற்கு தினசரி மார்க்கட் கட்ட அந்த இடத்தை ஒதுக்க ஏழு வருடங்களாக பேச்சு வார்த்தை நடந்து சாங்க்ஷன் ஆகும்போது அதை டிரான்ஸ்போர்ட்டுக்கு கொடுப்பதென்றால், அந்தப் பஞ்சாயத்திற்கு மாற்று இடம் கொடுக்க ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகளுக்கு நல்லெண்ணம் இருந்திருந்தால் 'மார்க்கட்டுக்கு இடம் கேட்டிருக்கிறார்களே, அதற்கு என்ன செய்ய' என்று வேலை எடுத்திருக்க வேண்டும். அப்படி அவர்கள் கவலை எடுத்ததாகத் தெரியவில்லை. 15-3-61-ல் திருச்சிராப்பள்ளி ஆர்.டீ.ஓ. எழுதியிருக்கிறார் தாசில்தாருக்கு, அந்த நிலத்தைப் பஞ்சாயத்துக்கு மாற்றிக் கொடுத்துவிடுங்கள் பூங்காவிற்கு என்று உத்தரவும் போட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் நகல் என்னிடமிருக்கிறது. அதன் எண் எல்லாம் என்னால் கொடுக்க முடியும். மார்ச் 14-ம் தேதி உத்தரவு போடுகிறார்கள், எப்ரல் மாதம் 6-ம் தேதி அரசாங்க உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அதை டி.வி.எஸ்.-க்கு மாற்றிக் கொடுங்கள் என்று. பஞ்சாயத்தை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? 1958-வது சட்டப்படி பார்த்தால் அந்த நிலத்தைப் பஞ்சாயத்திற்கே கொடுக்க வேண்டும், அவர்களுக்கு உரிமையுள்ள இடம். பஞ்சாயத்தை கேட்காமல் பராதீனம் செய்யக்கூடாது. அப்படியிருந்தும் டி.வி.எஸ். குறுக்கே நின்றதால், அவர்களுக்குத் திருச்சியில் ஒரு நல்ல இடம் இருக்க வேண்டுமென்று செய்யப்பட்டது. அங்கு டிரான்ஸ்போர்ட் வொர்க்ஷாப் அல்லது டிப்போ கட்டியிருக்கலாமே. பொன்மலை பஞ்சாயத்து மார்க்கட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்குக் கொடுத்து விட்டு இந்த நிலத்தை டி.வி.எஸ்.-க்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி தனிப்பட்ட முதலாளிகளின் சௌகரியத்திற்காக செய்வதில் எப்படி வேண்டுமானாலும் அரசாங்கம் செய்யலாம் என்ற

எண்ணத்தினுல் ஏற்பட்டதா அல்லது அஜாக்கிரதையால் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். அஜாக்கிரதையால் ஏற்பட்டதல்ல இது. டி.வி.எஸ். ஐந்து ஆண்டுகளாக முயற்சித்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த இடத்தை மாற்றிக் கொடுக்க முடியாது என்று பஞ்சாயத்திலிருந்து அதிகாரிகளிடமும், டி.வி.எஸ். முதலாளிகளிடமும் சொல்லப்பட்டது. அப்படியிருக்க, டி.வி.எஸ்.-க்கு சௌகரியம் செய்ய வேண்டியது அவசியம் என்ற எண்ணத்தை அதிகாரிகளுக்கு யார் உண்டாக்கியிருக்கிருர்கள் என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ளது, ஜமால் மஹமத் காலேஜ் காம்பவுண்டுக்கு ஒட்டியிருக்கக்கூடியது. அந்தக் காலேஜுக்கு காம்பவுண்ட் கூட கிடையாது. வேலியோடு சேர்ந்து 2 ஏக்கர் 3 செண்ட் இருக்கிறது. அங்கு செண்ட் விலை 250 ரூபாய். விலை ஒருபுறம் இருக்கட்டும். அது, காலேஜிக்கும் முக்கியம், பஞ்சாயத்துக்கும் முக்கியம். அங்கு பஞ்சாயத்து ஒரு பூங்கா அமைத்தால் மாணவர்கள் மாலை நேரங்களில் உட்கார வசதியாகயிருக்கும். பக்கத்தில் சர்க்கார் காரியாலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹைவேஸ் சூப்பரன்டெண்டிங் என்ஜினியர் காரியாலயம் இருக்கிறது. பின்னர், டூரிஸ்ட் ஹோம் இருக்கிறது. முக்கியமான இடம், அது. ஒரு பக்கம் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும், இந்தப் புறத்தில் டி.வி.எஸ்.-க்கும் கொடுத்தாகிவிட்டது.

அப்போது பஞ்சாயத்தின் நிலை என்ன? பஞ்சாயத்துக்கு மாற்றிடம் கொடுக்க ஏற்பாடு உண்டா இல்லையா? இது தான் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரமும் அதிகாரமுமா? ஏழு வருஷமாக நான் பெரு முயற்சி செய்து ரெவின்யூ அமைச்சர்களிடமும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களிடம் சென்று இதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். உண்மையில் இதன் மீது ஏதாவது முடிவு எடுக்க வேண்டும் என்றால் கலெக்டர் அவர்கள் பஞ்சாயத் போர்டு தலைவர் அவர்களிடம் கேட்டிருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் பஞ்சாயத் போர்டு எதற்கு, பஞ்சாயத்து யூனியன் எதற்கு, டெவலப்மெண்ட் கௌன்சில் எதற்கு? இவைகளை எல்லாம் எதற்காக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்கிறேன். இந்த மாதிரி பிரச்னைகள் வரும்போது முக்கியமாக பஞ்சாயத்து போர்டைக் கேட்டு முடிவு எடுத்திருக்க வேண்டும். அப்படியொன்றுமில்லாமல், ஒரே நாள் ராத்திரியில் மாற்றி விட்டார்கள். மறு நாள் பார்த்தால், இந்த இடத்தில் வேலி போட்டு "ஸைட் ஃபர் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்" என்றும் இன்னொரு இடத்தில் "ஸைட் ஃபர் டி.வி.எஸ். அன்ட் ஸன்ஸ்" என்றும் போடப்பட்டிருக்கிறது. இதில் டி.வி.எஸ்-க்கு கொடுக்க வேண்டுமா என்பது தான் முக்கியம். ஏதோ டி.வி.எஸ். ஹரிஜன ஹாஸ்டல் கட்டுவதற்காக இடம் கொடுத்து விட்டார்கள், அதை ஏதோ தானம் போல் கொடுத்து விட்டது மாதிரியும், அதற்குப் பதிலாக அரசாங்கம் இதைக் கொடுக்க கடமைப் பட்டிருப்பதாகவும் சொல்லுவது விசித்திரமாக இருக்கிறது. வேண்டுமென்றால் நேரிடையாகக் கொடுக்கட்டும். இது நியாயம் தானு என்பதை யார் வேண்டுமானுலும் வந்து பார்க்கட்டும். எந்த அமைச்சர்கள் வேண்டுமானுலும் வந்து பார்க்கட்டும். இவ்விதம் டி.வி.எஸ்-க்குக் கொடுத்தது நியாயம் தானு என்று. நாட்டில் ஜனநாயகம் தான் தழைத்தோங்குகிறது என்று சொல்லுகிறோம், அதே நேரத்தில் ஜனங்களிடம் இதைப்பற்றி அபிப்பிராயம் ஒன்றும் கேட்காமல் இவ்விதம் முடிவு எடுக்கப்படுகிறது. இதைப்பற்றி ஜனங்களிடம் அபிப்பிராயம் கேட்க வேண்டாமா? பஞ்சாயத்தினுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்கவேண்டாமா? அதைப்பற்றி ஒன்றும் கேட்காமல், ஹரிஜன ஆஸ்டலுக்கு என்று டி.வி.எஸ். இடத்தை கொடுத்திருப்பதாகவும் அதற்காக இந்த இடத்தை டி.வி.எஸ்.-க்கு கொடுத்திருப்பதாகவும் உத்தரவு எல்லாம் போட்டாய் விட்டது. அதன் பின்னுல் தான் இந்த விவரங்கள் எனக்குத் தெரிய வந்தது. அதன் பிறகு அமைச்சர் அவர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் போய் பார்த்தோம். பஞ்சாயத்துக்குக் கொடுக்கலாம் என்று முன்னுல் சொல்லியிருந்தார்களா என்று இப்போது தான் இங்குள்ள அதிகாரிகள் கேட்கிருர்கள். அப்படியென்றால் ஆர்.டி.ஓ. எப்படி உத்தரவு கொடுத்தார்? அவர் கொடுத்த லட்டரின் எண், தேதி எல்லாம் என்னிடமிருக்

கிறது. ஆகவே கொஞ்சம் கூட இதில் ஜனங்களின் எண்ணமோ, அல்லது நன்மையோ இல்லை. முக்கியமாக அரசியல் துவேஷம் தான் இதற்கு காரணமாய் இருக்கலாம். இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று டி.வி.எஸ்.-க்குக் கொடுக்கவேண்டும் என்பது, இரண்டு கம்யூனிஸ்ட் ஆதிக் கத்திலுள்ள பஞ்சாயத்துக்குக் கொடுக்கவேண்டாம் என்பது. எப்படியானு லும் இந்த இரண்டும் அக்கிரமம்தான். இதையெல்லாம் செய்து விட்டு வெளியில் ஜனநாயகம் தழைத்தோங்குகிறது, எதிர்க் கட்சிகளுக்கு எல் லாம் பூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறோம், என்ன வேண்டுமானாலும் விமரிசனம் செய்வதற்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம், சோவியத் ரஷ்யா போன்ற நாட்டில் தான் ஒரே கட்சி ஆதிக்கம் நடக்கிறது, இங்கு பரிபூரண சுதந்திரம் நடக்கிறது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அப்படி யானால் பஞ்சாயத்துக்குக் கொடுத்த அதிகாரத்தை மதிக்கவில்லையே, ஏதோ அவர்களைச் சார்ந்தவர்களுக்கு வேண்டியதை கொடுத்துவிட்டு, பார்த்தீர்களா கம்யூனிஸ்டு தலைவர்கள் எல்லாம் சட்டசபையில் வந்து உட்கார்ந்திருக் கிறார்களே, அவர்களால் எதையாவது செய்ய முடிந்ததா பாருங்கள் என்று வேண்டுமானால் வெளியில் போய் பிரச்சாரம் செய்யலாம். உண்மையி லேயே இதில் அரசியல் நோக்கம் இருக்கிறது என்று தான் நான் கருது கிறேன். இவர்களுக்கு டி.வி.எஸ். போன்ற பெரும் முதலாளியின் உதவி தேவை என்பதற்காகத்தான் இது கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. அவர்கள் இன்னும் கட்டிடம் கட்ட ஆரம்பிக்க வில்லை. வேலிதான் போட்டு வைத்திருக்கிறார்கள். டி. வி. எஸ். வேண்டு மானால் சென்டுக்கு ஆயிரமோ இரண்டாயிரமோ கொடுத்து வேறு வாங்கிக் கொள்வார்கள். இப்போது தினசரி மார்க்கட்டுக்கு என்று கேட்டிருந்ததை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு என்று எடுத்திருக்கிறார்கள். வேண்டுமென்றால் அதைவேண்டுமானால் வைத்துக்கொள்ளட்டும். ஆனால் டி. வி. எஸ். க்கு கொடுத்திருக்கும் இடம் பூங்காவுக்கு என்று கேட்டிருந்த இடம், ஆகவே அதையாவது ரத்து செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். டி. வி. எஸ் வாங்கியுள்ள இடத்தை தான் ஆஸ்டலுக்கு எடுக்க வேண்டும் என்றால் லாண்ட் அக்விஷிஷன் ஆக்ட் மூலம் அதை எடுத்துக்கொள்ள முடியாதா என்ன ? அதல்லாமல் ஏதோ டி.வி.எஸ். சர்க்காருக்குத் தானம் செய்தது போலவும், அதற்காக டி.வி.எஸ்-க்கு. சர்க்கார் இடம் கொடுக்க கடமைப்பட்டி ருக்கிறார்கள் போலவும் சொல்லுகின்ற நாடகம் மட்டும் வேண்டாம் என்று தான் நான் கேட்டுக் கொள்கிறேன். இதைப்பற்றி சரியான பரிசீலனை செய்ய வேண்டும். அதோடு இப்பேர்ப்பட்ட மோசடிக்கு யார் பொறுப்பாளிகள் என்பதையும் சர்க்கார் விசாரணை செய்ய வேண்டும் என்பது என்னுடைய பணி வான வேண்டுகோள், இவ்விதம் பஞ்சாயத்துக் கென்று ஒதுக்கியிருந்த இடத்தை டி. வி. எஸ். க்கு அபகரித்துக் கொடுத்துவிட்டால் பஞ்சாயத்தி னுடைய கதி என்ன ? பஞ்சாயத்துக்கு எப்போது எங்கே நிலம் வாங்கிக் கொடுக்கப்போகிறீர்கள். இனிமேல் வாங்கிக்கொடுக்கலாம் என்று சொல்லு வது நம்பக்கூடிய விஷயமா ? அல்லது இப்போது ஏதோ இங்கு சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார்களே, அதை இப்போதைக்கு திருப்தி பண்ணி விடலாம் என்கிற நோக்கமா?அல்லது எதிர்கட்சியில் செல்வாக்கு இருக்கிறதே, அதை ஒடுக்குவதற்காக செய்யப்பட்ட வேலைகளா என்று தெரியவில்லை. எந்த விதத்திலும் இம்மாதிரியான நடவடிக்கை எடுத்திருப்பது அக்கிரம மானது. ஆகவே இதைப்பற்றி விசாரணை செய்து இந்த இடங்களைப் பஞ்சாயத் துக்கு பூங்கா அமைக்கவும், தினசரி மார்க்கட் அமைக்கவும் இடம் கொடுக்க வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களிடம் வற்புறுத்துவதற்காகத்தான் இதை இந்தச் சபையில் கொண்டு வந்தேன் என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் டி.வி.எஸ்.க்கு இடம் கொடுக்கப்பட்டதைப்பற்றி அரசியல் துவேஷம் தான் என்று நினைத்து ஏதோ பிரமையோடு அதன் அடிப்படையிலேயே பேசினார் கள். டி.வி.எஸ்.க்குச் கொடுத்திருக்கிறது அபிஷேகபுரம், தென்குளம் என்கிற இடத்தில், இந்த இடங்கள் அஸெஸ்ட் லாண்டும் அல்ல, புறம்

போக்கு லாண்ட்டும் அல்ல. இது பணம் கொடுத்து வாங்கின இடம் தான். 4 லட்சத்தி 90 ஆயிரம் ரூபாய் கொடுத்து சிலோன் இமிக்கிரேஷன் டிப்பார்ட்மெண்டிடம் இருந்து வாங்கப்பட்டது. அதே நேரத்தில் திருச்சி ராப்பள்ளியில் ஒரு ஹரிஜன் ஆஸ்டல் கட்டவேண்டும் என்றும் அதற்காக இடமும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆஸ்டலில் இடம் இருக்கிறது என் பதற்காக ஏரோடிரோம் பக்கத்தில் கொண்டு போய்க் கட்டவும் முடியாது, டவுனில் இருக்க வேண்டும். இதற்காக இடம் கிடைக்குமா என்று பார்த்த சமயத்தில் டவுனில் டி.வி.எஸ். இடம் ஒன்று இருந்தது, அதை கெவர்ன் மெண்டுக்குக் கொடுத்தார்கள். நாம் கொடுத்த நிலத்தை விட இதற்கு விலையும் அதிகமாகத்தான் இருந்தது. ஏரியாவும் அதிகமாக இருந்தது. அவர்கள் கொடுத்தது 2 ஏக்கரா 2,750 சதுர அடி, நாம் கொடுத்தது 2 ஏக்கர் 1,366 சதுர அடி. இந்த இடம் டவுனுக்கு வெளியேதான் இருக்கிறது. அவர்கள் தந்த இடம் ஆஸ்டல் கட்டுவதற்குச் சௌகரியமாக வும் இருக்கிறது. இப்போது டி.வி.எஸ். கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக் கும் இடத்திற்குப் பக்கத்தில் ஜமால் மொகைதீன் காலேஜ் இருக்கிறது. இவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அப்படி ஒன்றும் ஆட்சேபணை பண்ணவில்லை. இது தவிர பக்கத்தில் சூப்பிரண்டன்டிங் இஞ்சினியர் ஆபீஸ், அஸிஸ்டண்ட் இஞ்சினியர் ஆபீஸ் இவைகள் எல்லாம் இருக்கின்றன. இவர்களும் எந்த விதமான ஆட்சேபணையும் சொல்லவில்லை. ஒரு பழமொழி சொல்லுவார்கள், "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்" என்று. அதுபோல் அவர்கள் ஒன்றும் ஆட்சேபணை சொல்லவில்லை, கனம் அங்கத்தினர் அவர் கள்தான் இதைப்பற்றி பெரிதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக் கீடு) அது மட்டுமல்ல, இந்த நிலம் கொடுக்கப்பட்டது 1-5-61-ல். இதற்காக 13-6-61-ல் தீர்மானம் போட்டு பின்னால் ஆட்சேபணை செய்தார்கள். முத லில் இந்த நிலத்தில் டெல்லி மார்க்கட் வைக்கவேண்டும் என்று கேட்டார் கள். டி.வி.எஸ். கம்பெனி வருவதை விட இது கூடுதல் நியூசென்ஸ்-ஸாக இருக்கும். ஆகவே அதை மாற்றிவிட்டு இதில் பார்க் அமைக்க வேண்டும் என்று பின்னால் கேட்டார்கள். இந்த இடம் கொடுப்பதினால் கஷ்டங்கள் ஒன்றும் வந்து விடாது என்று கருதித்தான் இதைச் செய்தார் கள். இதில் தவறு ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ அரசியல் கண்ணோட்டத்தோடு தான் வேறு எதையெல்லாமோ பேசினார்கள் என்று நினைக்கிறேன். நான் சொன்னதிலிருந்து என்ன நடந்தது என்பது தெட்டதெளிவாகியிருக்கும் என்று நினைக்கிறேன். இதற்கு மேல் ஒன்றும் சொல்ல வேண்டிய தேவையில்லை என்று நினைக் கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: On a point of clarification அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், சர்க்கார் பணம் கொடுத்து வாங்கிய நிலத்திலிருந்துதான் கொடுத்தது என்று சொல்லுகிறார்கள். எப்படி இருந்தாலும் டி.வி.எஸ். கொடுத்திருக்கிற நிலத்தை விட மதிப்பானது. என்னிடம் இதனுடைய சர்வே நம்பர் கூட இருக் கிறது. பணம்கொடுத்து வாங்கிய நிலமாக இருந்தால் எப்படி ஆர்.டி.ஓ. இதை ஏலியனேட் செய்யலாம் என்று உத்திரவு போட்டார்கள். அமைச்சர் அவர்கள் சொல்வதற்கும் நான் சொல்வ தற்கும் வித்தியாசம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பூங்காவிற்குக் கேட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்போது டி.வி.எஸ்.க்குக் கொடுத்ததைப் பூங்காவிற்கும், ஸ்டேட் டிரான்ஸ் போர்ட்டுக்காக ஒதுக்கப்பட் டுள்ளதை தினசரி மார்க்கெட்டுக்கும் கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லுவது முற்றிலும் உண்மைக்கு மாறாக இருக்கிறது. இருக்கட்டும், பஞ்சாயத்தை ஏன் ஆட்சேபணைகளைக் கேட்கவில்லை? இதைப் பற்றி விசாரிக்கவாவது அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

10 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினருக்குக் கிடைத்துள்ள தகவல்கள் அங்கும் இங்கும் விசாரித்துக் கிடைக்கும் தகவ லாக இருக்கலாம். நான் கொடுக்கும் தகவல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொடுக்கக் கூடிய தகவல்கள்.

V. GOVERNMENT BILLS.

(1) THE HOLDINGS (STAY OF EXECUTION PROCEEDINGS) (MADRAS AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That leave be granted for the introduction of the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1961."

DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : I introduce the Bill, Sir.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS CO-OPERATIVE SOCIETIES BILL, 1961 (L.A. BILL NO. 22 OF 1961).

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to move—

"That the Madras Co-operative Societies Bill, 1961 (L.A. Bill No. 22 of 1961) as amended by the Select Committee be taken into consideration."

உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாக நம்முடைய சட்டசபையில் இருந்து வந்திருக்கின்றன. அதற்கான முயற்சிகள் நான்கைந்து ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. முக்கியமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றி 30 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆகவே காலத்திற்கு எற்றபடி இதை மாற்றி அமைக்க வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு நீண்ட காலமாக இருந்தது. இதை இரண்டு—மூன்று ஆண்டுகளுக்கு முன்பே தயாரித்துக் கொண்டு வந்திருக்க முடியும். இடையில் மத்திய சர்க்கார் அடிக்கடி கூட்டுறவு சம்பந்தமாக அவர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டு வந்ததாலும், அதற்காக ஒரு தனிக் கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்ததாலும், சட்டத்தை எற்படுத்த ஒரு மாடல் பில் தயாரித்ததாலும், அதையெல்லாம் பார்த்துப் பிறகு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக சற்றுத் தாமதப் படுத்தியிருந்தோம். ராஜ்ய சர்க்கார் சென்ற ஆண்டு இந்தச் சட்டத்தைத் தயாரித்து, இந்தச் சபையின் முன்பு வைத்து, அதை ஒரு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பினார்கள். அந்த ஆய்வுக் குழு இதை நன்றாகப் பரிசீலனை செய்து தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. சாதாரணமாக ஆய்வுக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது ஆய்வுக்குழு என்னென்ன திருத்தங்கள் செய்தது என்று சொல்லுவது வழக்கம். ஆய்வுக் குழு செய்திருக்கிற திருத்தங்களெல்லாம் அறிக்கையிலேயே கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால், அதைப்பற்றி விவரிக்காமல், இப்போது செய்திருக்கிற சட்டம் எந்தெந்த முறையில் முற்போக்கு வாய்ந்தது என்று நான் விளக்குவதற்கு முன்வருகிறேன்.

இப்போது இருக்கக் கூடிய சட்டத்தை விட நாம் கொண்டு வந்திருக்கிற மசோதா பல முன்னேற்றகரமான திட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது. அவைகளைப் பற்றி எல்லாம் இப்போது நான் சற்று எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

21st August 1961] [Sri R. Venkataraman]

கூட்டுறவு சங்கங்களிலே யார் வேண்டுமானாலும் சேரக்கூடிய உரிமை இருக்க வேண்டுமென்பது இப்போது உள்ள கருத்து. 20—30 ஆண்டுகளுக்கு முன்பு கூட்டுறவு சங்கம் அமைக்கின்ற காலத்தில், யார் அமைக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அவர்கள் மாத்திரம் சேர்ந்து, அவர்கள் இஷ்டப்பட்டவர்களை மாத்திரம் சேர்த்து அமைக்க வேண்டும் என்பது அந்த நாளைய கருத்து. இன்று கூட்டுறவுச் சங்கம் பரவலாக எல்லோருக்கும் உதவி அளிக்கும் வகையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்குட்பட்டு, இந்தச் சட்டத்தில் 17–வது பிரிவில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, குறிப்பிட்ட சொஸைட்டிகளில் அங்கத்தினர்களாவதற்கு அப்ளிகேஷன் போட்டால், உடனடியாக அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது என்னென்ன சொஸைட்டிகள் என்று சட்டத்தில் நாம் சொல்லாவிட்டாலும், எதை மனதில் வைத்திருக்கிறோம் என்று சட்டசபையில் விளக்கலாம். கடன் வாங்கும் சொஸைட்டிகள் (க்ரெடிட் சொஸைட்டீஸ்), ஸ்டோர் நடத்தும் சொஸைட்டிகள் (கன்ஸ்யூமர்ஸ் சொஸைட்டீஸ்) மற்றும் விற்பனை ஸ்தாபனங்கள் (மார்க்கெட்டிங் சொஸைட்டீஸ்) ஆகியவைகளில் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், சேரத் தகுதி பெற்றவர்கள், பெறாதவர்கள் என்ற பாகுபாடு வேண்டியதில்லை. இந்த மாதிரி சொஸைட்டிகளில் அப்ளிகேஷன் போட்டவுடன் அவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். "தி ப்ரின்ஸிபில் ஆப் யுனிவர்ஸல் மெம்பர்ஷிப்"–ஐ இந்த சொஸைட்டிகளில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவ்வாறு சேர்த்துக்கொண்ட பிறகு ஒருவர் தகுதியற்றவர் என்று கமிட்டி கருதினால் அவரை நீக்குவதற்கு ரிஜிஸ்ட்ராருக்கு மனுப் போடவேண்டுமே தவிர அவரைச் சேர்த்துக் கொள்ள முடியாது என்று சொல்ல இப்போது போடும் சட்டத்தில் அதிகாரம் இல்லை. மற்ற சொஸைட்டிகளிலே, உதாரணமாக, வீவர்ஸ் சொஸைட்டியாக இருந்தால் தறி இருந்தால்தான், அல்லது ஜாயிண்ட் ஃபார்மிங் சொஸைட்டியாக இருந்தால் நிலம் இருந்தால்தான் அல்லது உழைப்புக்கு எவ்வளவு பேர்கள் தேவையோ அவ்வளவு பேர்களைத்தான் சேர்க்க முடியும். அந்த விதமான சொஸைட்டிகளில் அங்கத்தினர்களாகச் சேர மனுப் போடவேண்டும். மனுவைக் கமிட்டி பரிசீலனை செய்து அவர்களை அநியாயமாக சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டால் அதற்குமேல் ரிஜிஸ்ட்ராரிடத்தில் அப்பீல் போட வேண்டும் என்று உரிமை கொடுத்திருக்கிறோம். ஆகவே கூட்டுறவு இயக்கத்தில் அங்கத்தினர்களாக எல்லோரும் சேர்ந்து அதைப் பலப்படுத்துவதற்கு ஒரு பெரிய சந்தர்ப்பம் இந்தச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக நாம் செய்திருக்கிற பெரிய மாறுதல் இப்போது இருக்கிற சொஸைட்டி பைலாக்களை சர்க்கார் நோக்கத்திற்கு ஒத்தவாறு திருத்த வேண்டுமென்று சொன்னால் அதைத் திருத்துவதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. உதாரணமாக நாம் இப்போது ஒவ்வொரு தாலூக்காவிற்கும் ஒரு லாண்ட் மார்ட்கேஜ் பாங்க் வைக்க வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் முன்பு லாண்டுட் மார்ட்கேஜ் பாங்க் ஆரம்பித்த காலத்தில் இரண்டு தாலூக்காக்களுக்கு அல்லது பல பகுதிகளுக்குச் சேர்த்து ஒரே லாண்ட் மார்ட்கேஜ் பாங்க் இருந்தது. அந்த பாங்குகளைப் பிரித்து ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு பாங்க் வைக்க பைலாக்களைத் திருத்த வேண்டுமென்று சொன்னால், இப்போது இருக்கின்ற முறையில் சொஸைட்டி ஒத்துக் கொண்டால்தான் செய்ய முடியும். இல்லாவிட்டால் செய்ய முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அதை மாற்றி இப்போது பைலாக்களைத் திருத்துவதற்கு ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். ஏரியா ஆப் ஆபரேஷனை மாற்றுவதற்கும், சொஸைட்டி செய்யக்கூடிய சேவைகளை விஸ்தரித்து அதிக நன்மை செய்ய வழி செய்யவும் அவசியம் என்று ரிஜிஸ்ட்ரார் கருதினால் பைலாக்களைத் திருத்த வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கலாம். அவ்வாறு நோட்டீஸ் கொடுத்தால் சொஸைட்டி அதைப் பரிசீலனை செய்து, அதை அவர்கள் ஒத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் ஆட்சேபணை சொல்லலாம். ஆட்சேபணைகளை ரிஜிஸ்ட்ரார் பரிசீலனை செய்து அவர்கள் ஒத்துக் கொண்டால் மாற்றுவதை விட்டுவிடலாம். இல்லாவிட்டால் மாறுதல் செய்தாக வேண்டும் என்று முடிவு செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[Sri R. Venkataraman] [21st August 1961

இன்னொரு துறையில் ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் தேவையாக இருக்கிறது. இப்போது நிலம் இல்லாதவர்களுக்கும் கடன் கொடுக்க வேண்டும் என்று திட்டம் வைத்திருக்கிறோம். சில சொஸைட்டிகளில் நிலம் இல்லாதவர்களுக்குக் கடன் கொடுக்க வசதியாக பைலா இல்லை. பைலாவைக் காட்டி நிலம் இல்லாதவர்களுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவேதான் இந்த விதமாக நல்ல முறையில் சேவை செய்வதற்கு ஏதாவது பைலாவில் திருத்தம் அவசியமென்றால் அதைச் செய்யக் கூடிய உரிமை ரிஜிஸ்ட்ராருக்கு வேண்டும் என்று இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

வரவர நம்முடைய நாட்டிலே கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் வளர்ந்து கொண்டே வருகின்றன—பெரிதாகிக்கொண்டு வருகின்றன. சில கூட்டுறவு சங்கங்கள் ராஜ்யம் பூராவும் பரவியிருக்கின்றன. சில கூட்டுறவு சங்கங்கள் 5,000 பேர்களுக்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கின்றன. ராஜ்யம் பூராவிலும் இருக்கக்கூடிய சங்கங்கள் அல்லது ஏராளமான மெம்பர்களைக் கொண்ட சங்கங்கள் ஒழுங்கான முறையில் ஒரு ஜெனரல் பாடியை நடத்த முடியாது. உதாரணமாக ராஜ்யம் பூராவிலும் இருக்கக்கூடியக் கூட்டுறவு சங்கத்தில் ஜெனரல் பாடியை நடத்த வேண்டுமென்று சொன்னால் எந்த ஊரில் கூடுகிறதோ அந்த ஊரில் இருக்கிறவர்கள் தான் வருவார்கள். அவர்களுடைய அபிப்பிராயம்தான் ஜெனரல் பாடியின் அபிப்பிராயமாகப் போய்விடும்.

அதே போல்தான் 50,000 மெம்பர்கள் கொண்ட டி.யூ.சீ.எஸ். இருக்கிறது. அவர்களுக்கும் மொத்த பேரையும் கூட்டி ஜெனரல் பாடி கூட்ட வேண்டுமென்று சொன்னால், அது சரியாக முடியக்கூடியக் காரியமல்ல. ஆகவே இப்போது இது விஷயத்தில் ரிஜிஸ்டிராருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அதாவது அதிக ஏரியா ஆபரேஷன் அல்லது அதிகப்படியான அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய சொசைடிகளுக்கு ரெப்ரசென்டேடிவ் ஜெனரல் பாடி ஒன்று தேர்ந்தெடுத்து, அந்த ரெப்ரசென்டெடிவ் ஜெனரல்பாடி செய்யக்கூடிய காரியங்களை ஜெனரல் பாடி கூட்டம் செய்ததாக ஒப்புக் கொள்வதாகும். இந்த உரிமையை இப்போது கொடுத்திருக்கிறோம். இது மிகவும் அவசியமான மாறுதல். ஏனென்றால், இன்றைக்குக் கூட்டுறவு சொஸைட்டிகள் அதிகமாக வளர்ந்து கொண்டு வருகின்றன என்பது உண்மை. எல்லாவற்றிற்கும் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு செய்வது என்பது இயலாத காரியம். ஆகவே தான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து, மானேஜிங் கமிட்டி எப்படி இருக்க வேண்டுமென்பதிலே சில மாறுதல்கள் செய்திருக்கிறோம். இந்த மானேஜிங் கமிட்டிகள் ஏதோ 1, 2, 3 வருஷங்கள் என்று போடப்பட்டிருக்கிறது. இப்படி போட்டிருப்பதால், அதிலே உள்ளவர்கள் ரிடையர்ட் ஆகிவிட்டால் மீண்டும் அவர்களுக்காகத் தேர்தல் நடத்த வேண்டியிருக்கிறது. அதற்குப் பதிலாக மானிஜிங் கமிட்டி நிரந்தரமாகத் தொடர்ந்து இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக மூன்று ஆண்டுகளுக்கு ஒரு மானேஜிங் கமிட்டி இருக்க வேண்டுமென்று செய்யப்பட்டிருக்கிறது. அந்த மானேஜிங் கமிட்டிகளிலே மூன்றில் ஒரு பங்கு வருஷத்திற்கு ஒரு முறை ரிடையர்ட் ஆகும். இந்தத் திருத்தத்தை இப்போது நாம் செய்திருக்கிறோம். இப்படிச் செய்திருப்பதால் தொடர்ந்து மானேஜிங் கமிட்டி இருந்து கொண்டு செயலாற்றிவரும். அதாவது நமது லெஜிஸ்லேடிவ் கவுன்சில் தொடர்ந்து இருந்து பணியாற்றி வருவது போல், சொஸைடிகளும் இனித் தொடர்ந்து இருந்து பணியாற்றும். ஆனால் ஒரு ஆண்டிற்கு மூன்றில் ஒரு பங்கு பேர் மாறிக் கொண்டு வருவார்கள்.

இரண்டாவதாக, இதுவரையில் இந்த மானேஜிங் கமிட்டித் தேர்தல் எந்த முறையிலும் நடந்து கொண்டு வந்தது. ஆனால் இப்போது சட்டப்படி தேர்தல் பாலட் மூலமாகத்தான் நடத்த முடியும். இந்த இரு முக்கிய மாறுதலையும் இப்போது செய்திருக்கிறோம். அதனால் தேர்தலில் எல்லாவிதப்

21st August 1961] [Sri R. Venkataraman]

பிரச்னைகளும் எழாமல் நியாயமான முறையிலே நடக்கும். இந்த மசோதா கொண்டு வந்த காலத்தில் மானேஜிங் கமிட்டி அங்கத்தினர்கள் இது பற்றி இரண்டு விஷயங்கள் குறிப்பிட்டிருந்தார்கள். ஒன்று, மானேஜிங் கமிட்டியிலே இருப்பவர்கள்; இரண்டு டெர்ம் மெம்பர்களாக அதிலே இருந்து விட்டால், அடுத்து உடனடியாக அவர்கள் மூன்ருவது டெர்முக்கு தேர் தலில் நிற்கக் கூடாது. அதோடு ஒரு மானேஜிங் கமிட்டி மெம்பர் ஒரே மெம்பர் 5 மேனேஜிங் கமிட்டிகளுக்கு மேல் அங்கம் வகிக்கக் கூடாது என்று திட்டங்கள் கொண்டு வந்திருந்தோம். விவாதம் நடக்கின்ற காலத் திலேயும் இதைப் பற்றிச் சொன்ஞர்கள். ஆனல் இது விஷயத்தில் ஏதாவது ஒன்றை சர்க்கார் ஏற்றுக் கொள்ளலாமா என்று யோசித்தது. இரண்டையும் அப்படியே செய்வது என்பது நோக்கமல்ல. இதைப் பின்னல் பரிசீலனை செய்து கொள்ளலாம் என்று செலக்ட் கமிட்டிக்கு விட்டு, அதன்படி முடிவு செய்யலாம் என்று சொன்னேம். அசெம்பிளியில் கொண்டு வந்து முதன் முதலில் இதை பிரேரேபிக்கின்ற போதே இதைத்தான் சொன்னேம். இதற்கு எதிர்ப்பு வந்ததால் மாறுதல் வந்தது என்று சொல் வதற்கில்லை. அப்படி எதிர்ப்பின் காரணமாக மாறுதல் வந்தது என்று சொன் ஞலும் தவறில்லை. ஜனநாயக முறைப்படி எதிர்ப்பு வந்தால் அதை ஏற்றுக் கொள்வது என்பதும் நியாயமான முறையே. இப்போது இந்த இரண்டு ஷரத்துக்களிலே ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அதாவது ஒரு மானேஜிங் கமிட்டி அங்கத்தினர் 5 கமிட்டிகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறோம். இது ஒரு முற்போக்கான அம்ச மாகும். எனெனில், பல கமிட்டிகளில் இருந்து கொண்டு பல வேலை களைச் செய்ய முடியாமல், எந்த அலுவல்களையும் சரிவரச் செய்ய முடியாமல் போய்விடும். இரண்டாவதாக இப்படிச் செய்வதின் மூலமாக வேறு பலருக்கும் சந்தர்ப்பம் அளிப்பதற்கு வசதியாக இருக்கும். இப்போது செய்திருக்கின்ற இந்த மாறுதல் ஒன்றும் புதிதல்ல. இது ஏற்கனவேயே கம்பெனிச் சட்டத்திலே ஒருவர் 10 மானேஜிங் கமிட்டிகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. அதே போல் 20 டைரக்டர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று விதி இருக்கிறது. அதே போல் பாங்குச் சட்டத்தில், ஒரு பாங்குக்கு மேல் டைரக்டராக இருக்கக் கூடாது என்று இருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தம் மிகவும் முற் போக்கான ஒரு திருத்தமாகும். இதை நாம் அனைவரும் வரவேற்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, இந்த அங்கத்தினர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு சூபர்சீட் செய்து விட்டால், அவ்வாறு சூபர்சீட் செய்வதற்கு முன்னல் அவர்கள் எல்லாம் ராஜினமா செய்து விட்டு, மீண்டும் அவர்கள் தேர்தலுக்கு நின்று அவர்களே மீண்டும் அங்கத்தினர்களாக வந்து விடுகிருர்கள். இந்த முறை நடைமுறையிலுள்ள சட்டத்தில் செல்லுபடி யாகக் கூடிய நிலைமை இருக்கிறது. அதற்காகத் தான் இவ்வாறு நடக்கக் கூடாது என்பதற்காக இப்போது இந்தப் புதுச் சட்டத்தில் ஷரத்து போடப்பட்டு இருக்கிறது. ஒரு அங்கத்தினர் மீது சூபர்சீட் நடவடிக்கை எடுக்கப்பட்டால், அவர் தேர்தலுக்கு நிற்கக் கூடாது. சூபர்சீட் செய்யப்பட்டு, அது செல்லு படியாகி விட்டால் அப்போது அவர் அங்கத்தினராக இருநதாலும் கூட, அதற்கு பின்னல் மூன்று வருடங்களுக்குத் தேர்தலுக்கு அவர் நிற்கக் கூடாது என்று ஒரு புதிய திருத்தம் செய்திருக்கிறோம்.

அடுத்ததாக, இப்போது கூட்டுறவு இயக்கத்திலே இரண்டுவித மான அபிப்பிராயம் இருக்கிறது. ஒன்று சர்க்கார் நேரடியாகப் பங் கெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பங்கெடுத்துக் கொள்வதன் மூலமாகத்தான் சர்க்கார் தனது பங்கை நிறைவேற்ற முடியும் என்று சொல்லப்படுகிறது. இதனல் அவசியம் சர்க்காரின் டைரக்ட் பார்டிசிபேஷன் அவசியமென்றும், நல்லதென்றும் சொல்லப்படுகிறது. மற்றொரு அபிப்பி ராயமும் சொல்லப்படுகிறது. அதாவது சர்க்காரின் நேரடிப் பங்கு இருக்கக் கூடாது என்பதாகும். சர்க்கார் கொடுக்க வேண்டிய பணத்தை ஸ்டேட் சொசைடி மூலமாகக் கொடுத்து, ஸ்டேட்பாங்கு அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்பது. அதே போல், ஸ்டேட் பாங்கு சென்ட்ரல் பாங்குக்குக்

கொடுத்து, அவர்கள் அதைப் பிரைமரி பாங்குகளுக்குக் கொடுத்து, அந்த வகையில் சர்க்காரின் இன்-டைரக்ட் பார்டிசிபேஷன் இருக்க வேண்டு மென்று சொல்லப்படுகிறது. இதில் எது நல்லது என்பதைப் பற்றி பல சர்ச்சைகள் எல்லாம் செய்திருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற சட்டத்தில் நாம் இந்த இரண்டுக்கும் வழி செய்திருக்கிறோம். விரும்பினால் சர்க்காரின் பங்கு இருக்கும்; இல்லாவிட்டால் அவர்கள் இன்-டைரக்ட் ஆகவும் பார்டிசிபேஷன் செய்யலாம் என்று ஷரத்துக்கள் போட்டு இருக் கிறோம். கிளாஸ் 44-ஆ வதைப் பார்த்தாலும், அதற்குப் பின்னுள்ள 5, 6 ஷரத்துக்களைப் பார்த்தாலும் டைரக்ட் பார்ட்டிசிபேஷனுக்கான ஷரத்துக்கள் போடப்பட்டிருப்பதைக் காணலாம். அதேமாதிரி மறைமுகமாகப் பங்கு கொள்வதற்கான ஷரத்துக்களையும் ஏற்படுத்தி இருக்கிறோம்.

அதற்கு அடுத்தபடியாக, ஒரு முக்கியமான மாறுதல் ஒன்று செய் திருக்கிறோம். அதாவது ஒரு சொஸைட்டிக்குக் கிடைக்கக்கூடிய நிகர லாபத் தை எப்படிப் பங்கிட வேண்டுமென்பதைப் பற்றியது. இதற்கான ஷரத் துக்களை இப்போது போட்டிருக்கிறோம். கிளாஸ் 62-ல் நெட் பிராபிட் எப்படி வினியோகிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது 25 சதவிகிதம் ரிசர்வ் பண்டுக்குக் கொடுத்து விட வேண்டும். இரண்டாவது, சர்க்கார் ஏதாவது பண்டுகள் நியமித்தால் அதற்கு அவர்கள் குறிப்பிட்ட அளவு போட வேண்டும். எதற்காக என்று சொன்னால், நாம் அக்ரிகல்சுரல் கிரெடிட் கூட்டுறவு சொஸைடி என்று ஏற்படுத்தியிருக்கிறோம். இதில் நிலமில்லாத விவசாயிகளுக்கு, அவர்கள் கொடுக்க வேண்டிய கடன் தொகைக்கு நஷ்ட ஈடாக ஓரளவு தொகை தனியாக ஒதுக்குவதற்கு வழி செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே இதற்காகக் கட்ட வேண்டிய கட்டணம் இரண்டாவதாகும். மூன்றாவது, ஷேர் ஹோல்டர்களுக்கு டிவிடெண்ட் கொடுக்க வேண்டும். நான்காவது, ஷேர் ஹோல்டராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அந்த சொஸைடியிலே வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளுக்குப் போனஸ் கொடுக்க வேண்டும். ஐந்தாவது, கூட்டுறவு கல்விக்காகக் கொடுக்கவேண்டும். இப்போது கூட்டுறவு பற்றி பல பயிற்சிகள் நடத்தப்படுகின்றது. ஆகவே அந்த பண்டிற்குப் பணம் தர வேண்டும். ஆகவே இதை அமைத்திருக் கிறோம். ஆறாவது, தனிப்பட்ட விசேஷ பண்ட ஏதாவது ஆரம்பித்தால் அதற்குக் கொடுக்க வேண்டும். ஏழாவது, காமன் குட் பண்ட்; இதில் தர்மத்திற்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இது போக மீதமிருந்தால், அவைகள் மறுபடியும் ரிசர்வ் பண்டுக்கே போகும். இப்போது இவைகளை யெல்லாம் மிகவும் விவரமாகச் சொல்லி இருக்கிறோம். இது வரையில் அந்தந்த சொஸைடி தன்தன் இஷ்டப்படி எதற்குக் கொடுக்கலாம், கொடுக்கக் கூடாது என்ற வழி முறை இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது இவைகளை வரையறுத்து, நியாயமான முறை யில் இதில் ஈடுபட்டிருக்கக்கூடிய எல்லாவற்றுக்கும் நியாயமான முறையில் எல்லாப் பகுதிகளுக்கும் நிகர லாபம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக் கிறோம். இதில் ஒரு சிலருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இப்படி நீங்கள் லாபத்திலிருந்து போனஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லி விட்டால், இன்கம் டாக்ஸ் கொடுக்க வேண்டிய சொஸைடிகள் எல்லாம் எப்படி இந்த நிகர லாபத்தில் டாக்ஸ் கட்டும் என்று சொல்லப்பட்டது. அதற்காக வேண்டி நாம் சட்டத்தில் ஒரு மாறுதல் செய்து இருக்கிறோம். இந்தச் சட்டத்தில் நிகர லாபம் என்பது என்ன என்பதையும், இன்கம் டாக்ஸ் கட்டக்கூடிய சொஸைடிகள் எப்படி அதைச் செலுத்த வேண்டுமென்பதற்கும் வழிமுறை வகுத்திருக்கிறோம். ஆகவே அதற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதைத் தெளிவு படுத்தி இருக்கிறோம்.

அடுத்தாற்போல் ஒரு முக்கியமான அதிகாரம் ஒன்றையும் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறது. தவறு செய்கிற சொஸைடிகளில் இருக்கக்கூடிய சிப்பந் திகளைச் சர்க்காரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. தவறு செய்பவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், சொஸைடி கள் நடவடிக்கை எடுப்பதே இல்லை. ஓரிரண்டு சொஸைடிகளில் என்ன நிலைமை ஏற்படுகிறது என்று பார்த்தால், தவறு செய்தவர்கள் மீது

21st August 1961] [Sri R. Venkataraman]

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் எடுக்காத காரணத்தினால் அவர்கள் அதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகளை மறைத்து விடும்படியான நிலைமையே ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்களில் ஏதாவது குற்றம் ருசுப்படுத்த வேண்டுமென்று சொன்னால் யார் குற்றம் செய்தார்களோ உடனே அவர்களை நீக்கிவிட்டு, அதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகளைப் பாதுகாப்பு செய்தால் தான் பின்னால் குற்றத்தை நிரூபிக்க முடியும். இந்த விதமாகத் தவறுகள் செய்கின்ற சிப்பந்திகளை நீக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய அதிகாரத்தை ரிஜிஸ்டிரார் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம்.

புதியதாக இந்தச் சட்டத்தில் ஒரு தனி "சாப்டர்" சேர்க்கப்பட்டிருக்கிறதே அதுதான் "ஜாயிண்டு பார்மிங் சொஸைடீஸ்" பற்றியது. நாம் கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். அதை எந்த முறையில் செய்ய வேண்டுமென்று விதிகளெல்லாம் இப்பொழுது செய்யப் பட்டிருக்கிறது. உதாரணமாக இப்பொழுது "ஜாயிண்டு பார்மிங் சொஸைடி" என்று சொன்னால் என்ன என்பதை விவரித்து நாம் "டிபைன்" செய்திருக் கிறோம். பலர் தங்களுடைய நிலங்களை ஒன்றாகச் சேர்த்துக் கூட்டாக விவசாயம் செய்வது தான் "ஜாயிண்டு பார்மிங் சொஸைடி" என்று நினைக்கிறார்கள். தனியாக அவர்கள் விவசாயம் செய்து கொண்டு கடன் முதலியவைகள் வாங்கினால் அது "ஜாயிண்டு பார்மிங் சொஸைடி" ஆகாது. கூட்டாக விவசாயம் செய்வதை "ஜாயிண்டு பார்மிங் சொஸைடி" என்று நாம் இப்பொழுது சொல்லியிருக்கிறோம். அவ்வாறு கூட்டாக விவசாயம் செய்கிற பொழுது ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவ ருடைய நிலத்தைச் சேர்க்கிறார்கள். குறைந்த பட்சம் 5 வருஷங் களுக்காவது அந்த நிலத்தில் கூட்டாக விவசாயம் செய்வதற்கு அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கு மேல் வேண்டு மானால் "பைலாஸ்" பிரகாரம் செய்து கொள்ளலாம். குறைந்த பட்சம் ஐந்து வருஷங்களுக்குக் கூட்டாக விவசாயம் செய்வதற்கு அவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டும் என்று போட்டிருக்கிறோம். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அல்லது குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு தங்களுடைய நிலத்தை திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு திருப்பிப் பெறமுடியும் என்பதையும் நாம் கண்டிக்கிறோம். ஏனென்றால் 5 ஆண்டுகளுக்கு ஒரு நிலத்தைச் சேர்த்து, அந்த இடத்திலே ஒரு கிணறு வெட்டி அல்லது வேறு ஏதாவது "இம்ப்ரூவ் மெண்டு" செய்தவுடன் "சரி தான், என் நிலத்தைப் பிரித்துக் கொண்டு நான் போகிறேன், எனக்கு நிலத்தைக் கொடுத்தாக வேண்டுமென்று" சொன்னால், பொதுவாகச் செய்த நன்மையின் லாபம் தனியாக ஒருவருக்குப் போய்விடும். அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய விதிகளெல்லாம் போட்டிருக்கிறோம். அவ்வாறு பிரித்துக் கொண்டு போக வேண்டுமென்று சொன்னால், பிரித்துக் கொண்டு போக விரும்புகிறவர்களுக்கு வேறு ஏதாவது பக்கத்தில் அல்லது அருகாமையில் சொஸைடியில் ஒதுச்குப்புறமாக இருக்கக் கூடிய நிலத்தைக் கொடுக்கலாம். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டால் சரியாகப் போய்விடும் என்ற ஷரத்து இருக்கிறது. அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால் "அக்விஸிஷன் ஆக்ட்" பிரகாரம் அவர்களுக்கு எந்த விதத்தில் காம்பென்ஸேஷன் கொடுத்து அந்த நிலத்தைக் கூட்டுறவு சொஸைடி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற் கான விதிகள் போடப்பட்டிருக்கிறது. காம்பென்ஸேஷன் எப்படிக் கொடுக் கவேண்டும், காம்பென்ஸேஷன் எவ்வளவு என்றெல்லாம் விதிகளில் விவரிக் கப்படுகிறது. இன்னும் யாராவது 10 பேர்கள் சேர்ந்து, அவரவர் 5 ஏக்கர் 10 ஏக்கர் போட்டு, 50 ஏக்கர், 100 ஏக்கர் கூட்டாகத் தயார் செய்து ஒரு சொஸைடி ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கிறபொழுது, நடுவிலே இருக்கக்கூடிய ஒரு சிறு பகுதி நிலத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒன்றிரண்டு பேர்கள் மாத்திரம் "அப்ஜெக்ஷன்" செய்தால், அதனால் ஒரு சொஸைடி அமைக்க முடியாத நிலைமை ஏற்படுமேயானால், அந்த நிலத்தை "லாண்டு அக்வி ஸிஷன் ஆக்ட்" பிரகாரம் வாங்குவதற்கு இந்த மசோதாவில் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அதிலும் மொத்தம் சொஸைடிக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறதோ அதில் 10-ல் ஒரு பங்குக்கு அதிகமாக "அக்விஸிஷன்"

செய்ய முடியாது. அப்படி 10-ல் ஒரு பங்கு நிலத்தை அக்விஷிஷன் செய்வதாக இருந்தால்கூட, அது அவசியம், இல்லாவிட்டால் சொஸைடி அமைக்க முடியாது என்று நிரூபித்தால் தான், அந்த விதமாக அவர்கள் அந்த நிலத்தை அக்விஷிஷன் செய்யலாம் என்ற விதியும் போட்டிருக் கிறோம். சிலருக்கு இதைப்பற்றிச் சந்தேகம் வந்துவிட்டது. எப்படி கோவாபரேடிவ் பார்மிங்க்காக லாண்டு அக்விஷிஷன் செய்யலாம் என்று சிலர் கேட்கிறார்கள், யாரோ ஒருவர் தனியாக கம்பெனி வைப்பதற்கு குப்பன், சுப்பன் நிலத்தை லாண்டு அக்விஷிஷன் ஆக்ட்படி வாங்குவது நியாயம் என்று ஒத்துக் கொண்டிருக்கிறோம். வேறு ஏதாவது காரியத் திற்கு என்றால் லாண்டு அக்விஷிஷன் ஆக்ட் படி நிலத்தை வாங்கிக் கொள்ளலாம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கும் பொழுது கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்காக லாண்டு அக்விஷிஷன் ஆக்ட் படி நாம் நிலத்தை வாங்கிக் கொடுக்கக்கூடாது என்று சொல்லுவது சரியான வாதம் அல்ல என்று தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். கூட்டுறவு செஸைடி வைப்பதற்காக வேறு 1,000, 2,000 ஏக்கர் நிலத்தை லாண்டு அக்விஷிஷன் ஆக்ட்-படி வாங்குவது என்றால் அது தவறாகும். பலர் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு முன் வந்து அவ்வாறு செய்வதற்கு ஒருவர், இருவர் மாத்திரம் இடையூறாக இருந்தால், அதுவும் மொத்த நிலத்தில் 10 சதவிகிதத்திற்குக் குறைவாக இருக்கும் நிலமாக இருந்தால், அதை லாண்டு அக்விஷிஷன் ஆக்ட் பிரகாரம் வாங்குவது தவறு இல்லை என்பதுதான் சர்க்கார் அபிப்பிராயம். அதை சட்டசபை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும் ஒரு பெரிய மாறுதல் என்னவென்றால், ட்ரிப்யூனல் என்ற கோர்ட்டு ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறோம். ரிஜிஸ்டிரார் ஸர்சார்ஜ் செய் கிறார்கள், அல்லது சில சொத்துக்களை "அடாச்" செய்கிறார்கள். இவைக ளெல்லாம் "குவாஸி ஜுடிஷியல்", அதாவது பாதி அட்மினிஸ்ரேடிவ், பாதி ஜட்ஜ் போல் செய்யக்கூடிய வேலைகள். இவற்றிற்கு மேல் இருக்கக் கூடிய அப்பீல்களை சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று வைத்து அவை களை டிரிப்யூனலின் தீர்ப்பிற்கு விட்டிருக்கிறோம். ஒன்றோ அல்லது ஒன் றுக்கும் மேற்பட்ட டிரிப்யூனல்களை அமைப்பதற்கு இந்த மசோதாவில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கடைசியாக, ஒரு பெரிய மாறுதல் என்னவென்று சொன்னால், கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கு "ஸெல்ப் ரிலையன்ஸ் சொஸைடீஸ்" ஏற் படுத்த வேண்டுமென்ற ஒரு லட்சியம். இப்பொழுது இருக்கிற கூட்டுறவு சங்கங்கள் பொது மக்களுடைய பணத்திலிருந்தோ அல்லது அவர்கள் இடத்தில் இருக்கக்கூடிய சேமிப்பைத் திரட்டியோ பொது மக்களுக்குச் சேவை செய்வதில்லை. ரிசர்வ் பாங்கு கடன் கொடுப்பதை டிஸ்டிரிபியூட் செய் கிறோம். ஒழுங்காக, நியாயமாக வாங்கித் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம். அந்த முறையில் தான் கூட்டுறவு சொஸைட்டிகள் பெருவாரியாக நடந்து கொண்டு வருகின்றன. வெளி நாடுகளில் கூட்டுறவு சொஸைட்டிகள் நடக்கின்ற முறையைப் பார்த்தால், மக்களுடைய சேமிப்பை எடுத்து, அதையே மக்களுக்கு உபயோகப்படும்படி செய்கிறார்கள். டெபாஸிட்டை ஏராளமாக வாங்கி, அந்த டெபாஸிட் மூலம் வருகிற தொகையை ஆங் காங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கோ அல்லது வேறு கூட்டுறவு பணிகளுக்கோ உபயோகப்படுத்துகிறார்கள். இந்த விதமாக இயங்குகிற சொஸைடிகளுக்குச் சில சலுகைகளை நாம் கொடுத்திருக்கிறோம். 110–வது பிரிவில் அந்த சொஸைட்டிகளுக்குச் சலுகைகள் கொடுத்திருக் கிறோம். இதைத்தவிர சர்க்காருக்கு இன்னும் சலுகைகள், "எக்ஸெம்ப் ஷன்" கொடுப்பதற்க்கு உரிமைகள் இருக்கின்றன. எது நியாயமாக இருக்கும் என்று நினைக்கிறார்களோ அதைக் கொடுப்பதற்கு சர்க்கார் தயா ராக இருக்கிறது. இதன் மூலம் "ஸெல்ப் ரிலையன்ஸ் சொஸைடிகளுக்கு" சர்க்காரிடமிருந்தோ அல்லது மத்திய பாங்கிலிருந்தோ கடன் வாங்காமல் மக்களுடைய சேமிப்பைத் திரட்டி டெபாஸிட் மூலம் நடத்துகிற சொஸைடி களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்பது சர்க்காரின் லட்சியம். அந்த லட்சியத்திற்கு எந்த ஒரு முயற்சி செய்தாலும், அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று விதிகள் பிறப்பித்திருக்கிறோம்.

21st August 1961] [Sri R. Venkataraman]

இவைதான் இப்பொழுது இருக்கிற சட்டத்திற்கும், கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவுக்கு இடையே உள்ள பெரிய மாறுதல்கள். நடப்பு அபிப்பிராயங்களுக்கும், இப்பொழுது இருக்கிற தேவைகளுக்கும் இது அத்தியாவசியமானது. இந்த மசோதாவைச் சட்டசபை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் பிரேரேபிக்கிறேன்.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Co-operative Societies Bill, 1961 (L.A. Bill No. 22 of 1961), as amended by the Select Committee, be taken into consideration."

Hon. Member Sri N. K. Palanisami will now initiate the discussion.

*SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதா, பல முற்போக்கான தீர்மானங்களைக் கொண்டதாக இருக்கிறது. குறிப்பாக, வோட்டை பாலட், யாரையும் சேர்த்துக்கொள்வது, போன்ற முறையில் திருத்தப்பட்டிருப்பது பற்றி நாம் எல்லோரும் சந்தோஷப்பட வேண்டும். 10-30 a.m.

(Sri B. K. Linga Gowder in the Chair.)

ஆனாலும், இதிலே சேர்க்க வேண்டிய முக்கியமான திருத்தம், செலக்ட் கமிட்டியில் தோற்கடிக்கப்பட்டதைப் பற்றி வருந்தாமல் இருக்க முடியாது. சர்க்காரே கொண்டு வருவது அதை செலக் கமிட்டியில் அவர்கள் கட்சிக்காரர்களே தோற்கடிப்பது என்ற நிலையில் பல பில்களைப்பார்க்கிறோம், அப்படியென்றால், சர்க்கார் ஏன் இதைக் கொண்டு வரவேண்டும் ? சர்க்காரின் கொள்கைதான் என்ன ? அடிப்படையாக சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டும், பொதுத் துறையை மேலும் மேலும் பலப்படுத்த வேண்டும் என்கிற சர்க்கார், பல கன்ஸ்யூமர் கூட்டுறவு சொஸைடிகள் இன்னும் பல சொஸைட்டிகள் மூலம் மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும், அதற்கு மக்களின் ஆதரவு தேட வேண்டும் என்ற முறையில் பில்லைப் போட்டுவிட்டு, அதிலே உள்ள முக்கியமான தீர்மானத்தைக் கைவிட்டுவிடுவது என்றால், வருந்தாமல் இருக்க முடியாது. பூர்ணமாக சந்தோஷப்பட முடியாது. Operation was successful the patient died என்ற முறையில்தான் இது இருக்கிறது. உண்மையில் அடிப்படையான நோக்கமே தோற்கடிக்கப்பட்டுவிட்டது. லார்ட் மெக்காலே காலத்தில் கிரிமினல் ப்ரொஸீஜர் கோட், 100 வருஷங்களுக்கு முன்னால் போடப்பட்டது. அதற்கு மாற்றமே செய்யக்கூடாது என்கிறது போல, இன்றைக்கு கூட்டுறவுச் சட்டங்கள் 30 வருஷ காலமாக இருந்து வருகின்றன. ஆகவே அதையும் இன்றைக்கு மாற்ற வேண்டாம் என்பது பலருடைய எண்ணம். அப்படிச் சொல்லும்போது, அது குறிப்பிட்டவர்களுக்குத்தான் பல சௌகரியங்களைச் செய்வதாக இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்றால், அதற்கு ஒரு பெரிய எதிர்ப்பு.

இன்றைக்கு பிஷர்மென் கூட்டுறவு பெடரேஷனை எடுத்துக் கொண்டால், தூத்துக்குடி பெடரேஷனுக்கு ஒருவர், கன்னியாகுமரி பெடரேஷனுக்கு ஒருவர், இன்னும் தஞ்சை பெடரேஷனுக்கு ஒருவர் என்று அந்தச் சங்கங்களில் சிலரே பல காலமாக இருந்து வருகிறார்கள். அதேபோலத்தான் க்ரெடிட் சொஸைடிகள், சென்ட்ரல் பாங்குகள் எல்லாவற்றிலும் நடக்கிறது. இதிலெல்லாம் ஒரு குறிப்பிட்டவர்கள்தான், பரம்பரையாக இருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பொது ஜனங்கள் பணத்தைக் கொண்டு இன்றைக்கு பிஷர்மென் பெடரேஷன்கள் பாப்லோ போட்டுகளையும், நைலான் நெட்டுகளையும் கொடுக்கிறார்கள். பொது ஜனங்கள் பணத்திலிருந்து, யாருக்குச் சௌகரியங்கள் கிடைக்கின்றன ? சாதாரண பிஷர்மன்களுக்கு எந்த நன்மையும் கிடைப்பதில்லை. ஆனால், குறிப்பிட்ட சிலருக்குத்தான் கிடைக்கிறது. அங்குள்ள டைரக்டர்கள் தங்களுக்கு வேண்டிய

வர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள் ; கமிஷன் வாங்கிக் கொண்டும் சில ருக்குக் கொடுக்கிறார்கள். இந்த நிலையில்தான் இந்த சொஸைட்டிகள் பல நாட்களாக இருந்து வருகின்றன. அப்படி யிருக்கும் போது அம்மாதிரி யான தவறுதல்களைத் தீர்க்கக் கொண்டு வந்த தீர்மானத்தை செலக்ட்கமிட்டி தோற்கடித்ததிலிருந்து, மேலும் அம்மாதிரியான நிலைமையே தொடர்ந்து நடப்பதற்கான நிலையில் தான் அது அமைந்திருக்கிறது என்பதை வருத்தத் தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் கண்டிப்பாக சமுதாயத்தில் உள்ள நிலமை எப்படி யிருக்கிறது என்றால், சர்க்கார் தலையிட்டாலொழிய ஒன்றும் நடைபெறாது என்பதுதான். இன்றைக்கு இருக்கும் நிலைமை என்ன ? சர்க்கார் ஒவ் வொரு சொஸைட்டியிலும் போய் ஆடிட் பண்ணுவதைத் தவிர, நிர்வாகம் செய்யக்கூடிய முறையில் எலெக்ஷன் நடப்பதில், ஒன்றுமே செய்வதில்லை. ஒரு சொஸைடியில் ஜெனரல் பாடி மீட்டிங் என்றால், எல்லோரும் வாருங்கள் என்று சொல்லிவிட்டு, முன்னதாகவே கையெழுத்தெல்லாம் வாங்கிவிடுவார்கள். ப்ரெஸிடெண்ட், டைரக்டர்கள் எல்லாம் எலெக்ஷன் ஆகிவிடும். பழைய ப்ரெஸிடெண்டேதான் இருப்பார். வேறொருவரைப்போட வேண்டும் என்று யாராவது கேட்டால், அதெல்லாம் முடிந்து விட்டது என்பார்கள். அப்படித்தான் இன்றைக்கு எங்கு பார்த்தாலும் நடக்கிறது. இன்றைக்கு 15 சொஸைட்டிக்கு ஒரு சூப்ர்வைசர் என்ற முறையிலே போடு கிறார்கள். அதை மாற்றி 5 சொஸைட்டிக்கு ஒரு சூப்ர்வைசர் வீதம் போட்டு, அந்த சொஸைடிகள் பூராவையும் நிர்வாகத்தில் வைத்து, சம்பந்தப்பட்ட அந்த ஸி.எஸ். ஆரே நடத்திக் கொடுக்கும் முறையில் அமைக்கக் கூடாதா ? அப்படி சர்க்கார் கண்ட்ரோல் இருந்தால்தான், பொது மக்கள் பணம் நல்ல முறையில் எல்லோருக்கும் கிடைக்க வழிவகை ஏற்படும். மக்களுக்கு பரவலாக நன்மைகள் போய்ச்சேரும். அப்படிச் சர்க்கார் தலையீடு இல்லாமல் இருக்குமேயானால், குறிப்பிட்டவர்களுக்குத்தான் எல்லாப் பலனும் போய்ச் சேரும்.

முக்கியமாக இந்த மசோதாவில் இருப்பது ஏரியா ஆப் ஆபரேஷன். இதில் ஒரு குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்க்கவேண்டுமென்றால், ரெஜிஸ் ட்ரார் அனுமதியின் பேரில் சேர்க்கலாம். ஆனால் இதனால் பெரும்பாலான மக்களுக்கு நன்மை கிட்டாது என்பதுதான் என் எண்ணம். ஏரியா ஆப் ஆபரேஷன் என்ன என்று ரெஜிஸ்ட்ரார் முடிவு செய்யலாம் என்று இருப்பது சற்று "வேக்" ஆக இருக்கிறது. இதையே இத்தனை ஜனத் தொகை யிருந்தால் சேர்க்கவேண்டும், என்று டெபனட்டாகப் போட வேண்டும். அப்படி இல்லை யென்றால் பழையபடியேதான் இருக்கும். ஆகவே அதை ஸ்பெஸிபிக்காகப் போட வேண்டும் அதற்காக ஒரு ப்ரொ விஷன் சேர்க்க வேண்டும்.

பல சொஸைடிகளில் கையாடல்கள் நடக்கின்றன. அது ஒன்றும் புதி தல்ல. கையாடல் நடப்பது சகஜம். அப்படி நடக்கும் போது, பிரஸி டெண்ட் தனக்கு ஒன்றுமே தெரியாது என்பார். அது பற்றி சார்ஜ் ஷீட் பண்ணுவார்கள். ஆனால், அதற்குப்பல மாதங்கள் ஆகும். கடைசியில் அங்குள்ள கிளார்க்கு மேல் சார்ஜ்ஷீட் பண்ணுவார்கள். சார்ஜ்ஷீட் பண்ணும் மட்டும், யாரும் பேசமாட்டார்கள். ஆனால் சார்ஜ்ஷீட்டுக்குப் பிறகு, ப்ரே ஸிடெண்ட் " கிளார்க்கு எழுதி வைத்தார். எனக்கு ஒன்றும் தெரியாது " என்பார். கிளார்க்கு, ப்ரெசிடெண்டுக்குத்தான் தெரியும், தனக்கு ஒன்றும் தெரியாது என்பார். இது சம்பந்தமாகத் தீர்மானம் எடுக்க 3, 4, வருஷங் கள் ஆகும். அப்படிக் கடைசியில் குற்றம் சாட்டப்பட்டாலும், பணம் கை யாடப்பட்டிருந்தாலும், சரியான முறையில், பாக்கிக் குற்றங்களுக்குப் போல் இதிலேயும் தண்டனை ஏன் கொடுப்பதில்லை. எந்த சொஸைடியில் தவறு கள் நடந்தாலும், இன்றைக்கு வேண்டியவர்களுக்குப் பணம் கொடுத்து, யார் குற்றம் செய்கிறானோ அவன் தப்பித்துக் கொள்ளும் நிலைமைதான் இருக்கிறது. அதை நீக்க வேண்டும்.

ஆர்பிட்ரேஷன், டிக்ளரேஷன் விஷயங்களில், குறைந்த பட்சம் மேல் அதிகாரிகள் இரண்டொன்று கேஸ்களையாவது சரியாக இருக்கிறதா என்று டெஸ்ட் செய்து பார்க்க வேண்டும். இம்மாதிரிச் செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

21st August 1961] [Sri N. K. Palanisami]

மில்க் சொஸைடி பற்றிச் சொல்லும் போது, மாடு வாங்கப் பணம் கொடுக்கும் போது செக்யூரிடியாக இம்மூவபில் ப்ராபர்டீஸ் இருந்தால் தான் கிடைக்கும். அப்படிச் சட்டம் இருப்பதால், பெருவாரியான மக்க ளுக்கு அது பிரயோஜனப்படுவதில்லை. இதில் வேறுயாராவது அப்படி ஜாமீன் கொடுத்தாலும், கேட்பவர்களுக்குக் கொடுக்கும் நிலைமையை உண்டு பண்ண வேண்டும். இன்றைக்குப் பலப்பகுதிகளிலிருந்து சென்னைக்குப் பால் வருகிறது. அதற்கு வேண்டிய ஒரு மில்க் கமிஷனரையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதில் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். மாடுகள் வளர்ப் பது, அவற்றைப் பராமரிப்பது என்பதெல்லாம், அனிமல் ஹஸ்பண்டரி டிபார்ட்மெண்ட் தான் செய்கிறது. ஆனால் பால் விற்பனை செய்வது மட்டும் தனிப்பட்ட முறையில் ஏன் எற்பாடு செய்ய வேண்டும்? அதையும் ஏன் இந்த டிப்பார்ட்டுமெண்டில் செய்யக்கூடாது ?

இந்த மசோதாவில் அடிப்படையான திருத்தங்களையும் சேர்த்து, அதை யும் இந்தச் சபையில் கொண்டு வந்து அதையும் ஏற்றுக் கொண்டு, மக்களுக்கு நன்மைகள் பல பயக்கும் முறையில் இந்தச் சட்டத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடிக்கிறேன்.

*SRI A. MARIAPPAN : கனம் உதவித் தலைவர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, கூட்டுறவு மசோதா நல்ல முறை யிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. நண்பர் பேசினார், ஏதோ ஆங்காங்கே கமிஷன் வாங்கிக் கொண்டு தவறுகளை மறைக்கிறார்கள் என்று. எனக்குத் தெரிந்த வரையில் அம்மாதிரிக் கிடையாது. இருக்கலாம், ஏதோ ஓரிரண்டு சொஸைடிகளில் தவறுகள் செய்யலாம்.

சிறிய தவறுகளை இவ்வளவு பிரமாதப்படுத்திப் பேசுகிறார்கள். நமது ராஜ்யத்திலே எத்தனையோ சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் பெரும் பாலான சங்கங்களிலே எல்லாம் சரியாக நடந்து வருகிறது. எந்தெந்தச் சங்கங்களிலே என்னென்ன தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் புள்ளி விவரங்களோடு சொன்னால் அவைகளைப் புரிந்துகொண்டு ஏதாவது செய்வதற்கு உதவிகரமாக இருக்கும். உதாரணமாக, நம் நாட்டிலே தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் செய்யப்படு கின்ற தவறுகள்கூட கூட்டுறவுச் சங்கங்களிலே செய்யப்படுவதில்லை. தொழிற் சங்கத் தலைவர்கள் சிலர் கோரிக்கைகள் போட்டு முதலாளிகளிடம் பணம் வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

SRI A. GOVINDASAMY : On a point of order Sir. கனம் அங்கத் தினர் இப்பொழுது கூட்டுறவு மசோதாவின் மீது பேசுகிறார்களா அல்லது தொழில் இயக்கத்தைப்பற்றிப் பேசுகிறார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

TEMPORARY CHAIRMAN (SRI B. K. Linga Gowder) : The Hon. Member Sri Mariappan is correct.

SRI A. MARIAPPAN: நான் உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். நண்பர் கோவிந்தசாமி அவர்கள் சட்டசபையிலே நீண்டநாள் அனுபவம் பெற்றவர். என்னைப் போல குறைந்த அனுபவசாலியல்ல. அவர்கள் இங்கே பேசும்போது, இம்மாதிரிப் பல உதாரணங்களைக் கூறுகிறார்கள். ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்லும்பொழுது, சம்பந்தப்படாத பலவற்றைக் கூறு கிறார்கள். நிலைமையை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் இந்த உதாரணத்தைச் சொன்னேன்.

ஒரே நபர் பல சங்கங்களில் பொறுப்பு வகிப்பதைப்பற்றி பலமாக எதிர்த்து பேசப்படுகிறது. சர்க்கார்கூட இதைப் பரிசீலனை செய்து பார்க்க லாம். பல சங்கங்களிலே பொறுப்பு வகிக்கின்ற ஐந்து அல்லது ஆறு நபர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் நல்ல முறையில் அந்தந்த சங்கங்களிலே வேலை செய்கிறார்கள், சங்கத்தின் வளர்ச்சிக்காக வேலை செய்கிறார்கள் என்பது நன்கு தெரியவரும். பல சங்கங்களிலே பதவி

[Sri A. Mariappan] [21st August 1961

வகித்தாலும், அதே வேலையாக இருந்தால், பொறுப்புணர்ச்சியோடு இருந்தால், உண்மையாகவே நல்ல சேவை செய்ய முடியும். குயுக்தி எண்ணத்துடன் பணியாற்றுகிறவர்களைப்பற்றி நான் சொல்லவில்லை. பொது ஸ்தாபனங்களில் நல்லமுறையில் வேலை செய்து அந்த ஸ்தாபனங் கள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக செயலாற்றி வந்திருக்கிறார்கள் பலர் என்பதை மறுக்க முடியாது. நமது மாகாணத்தை எடுத்துக் கொண்டால் பல கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் நல்லகாரியங்களைச் செய்திருக் கிறார்கள். இது சர்க்காருக்கும் தெரியும். அம்மாதிரி அதிகமாக வேலை செய்தவர்களை சர்க்கார் இன்னும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். சர்க்காராலே ஆரம்பிக்கப்படும் புதிய சங்கங்களிலேகூட அவர்கள் இருந்தால் அந்தச் சங்கங்கள் நல்ல முறையில் வளர்ச்சியடையும் என்பதை சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களை சர்க்கார் நாமினேஷன் செய்யத் தயங்கியதில்லை. ஒருவரே பல சங்கங் களில் இருப்பதனால், அந்தச் சங்கங்களின் வளர்ச்சி குன்றிவிடும் என்பதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. அது ஆட்களைப் பொறுத்து இருக் கிறது. ஆகவே ஒருவர் பல சங்கங்களில் அங்கம் கிப்பது சரியல்ல என்று சொல்லுவதை ஒப்புக்கொள்ள முடியாது. ஏற்கனவே இந்த மசோதா சட்டசபையிலே விவாதத்திற்கு வந்தபொழுது நான் குறிப்பிட் டிருக்கிறேன். ஒருவர் பல சங்கங்களிலே இருந்தால்தான் ஒன்றோடு ஒன்று தொடர்பு இருக்கும் என்று நான் கூறியிருக்கிறேன். உதாரணமாக, ஒரு பிரதம நெசவாளர் சங்கத்தில் இருப்பவர், அகில இந்திய கைத்தறி போர்டில் அங்கம் வகிப்பதால், அங்கேயிருந்து நெசவாளர்களின் நலனுக் காகப் பணம் கிடைப்பதற்கு வழிவகை செய்யமுடிகிறது. சேலம் ஜில்லா கூட்டுறவு பாங்கியின் தலைவராக இருக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய கவுண்டர், சேலத்தில் நெசவாளர் சங்கத்தில் பொறுப்பு வகிக்காவிட்டாலும், தொடர்பு வைத்திருக்கிறார். அங்கே இருக்கக்கூடிய பெடரேஷனிலே அங்கம் வகிக்கிறார். அதன் காரணமாக நெசவாளர்களுக்கு இருக்கக் கூடிய சிரமங்களை மாகாண பேங்க் மூலமாகவும், அகில இந்திய ரீதி யிலே ரிசர்வ் பேங்க் மூலமாகவும் எடுத்துச் சொல்லி நெசவாளர் களுக்குப் பண உதவி செய்திருக்கிறார். அகில இந்திய கைத்தறி போர்டிலே அவர் இருப்பதனால் நீண்ட நாட்களாக சிக்கலாக இருந்த பிரச்னைகளை யெல்லாம் அவர் தீர்த்து வைத்திருக்கிறார். ஆகவே இந்த மாதிரிப் பல சங்கங்களிலே பதவி வகிப்பதன் காரணமாகத்தான் இம்மாதிரியான கஷ் டங்களைத் தீர்த்துவைக்க முடிகிறது என்பதை சர்க்கார் உணர வேண்டும். கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர வேண்டும் என்று சர்க்கார் நினைக்கிறார்கள். சர்க்கார் கொடுக்கும் உதவி மிகவும் பாராட்டத்தக்க முறையில் இருக்கிறது. அந்த உதவி நல்ல முறையிலே கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போய்ச் சேரவேண்டுமானால் இம்மாதிரி கட்டுத்திட் டங்கள் இருக்கக்கூடாது. சட்டசபை அங்கத்தினர்கள் எவ்வாறு தேர்ந் தெடுக்கப்படுகிறார்களோ அதே முறையிலே ரகசிய வோட்டு எடுக்கப்படு கிறது. பலர் சொல்லலாம், ஒருவர் ஒரு சங்கத்திலே ஒரு முறை தலைவராக இருந்துவிட்டால், அடுத்த முறை இருக்கக்கூடாது, அது டிஸ்குவாலிபிகே ஷன் என்று. முதல் தடவை ஒருவர் தலைவராக இருக்கும்பொழுது பல அங்கத்தினர்கள் அவரிடத்தில் பலவிதமான உதவிகளைக் கேட்டிருக்க லாம். சம்பந்தப்பட்ட தலைவரும் உதவி செய்யாமல் இருந்திருக்கலாம். ஆகவே சங்கம் சரியாக நடைபெறவில்லையென்றால் அவர் பாதிக்கப்படு கிறார். நல்ல முறையில் அவர் வேலை செய்திருந்தாரானால் அவரையே மக்கள் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகவே ஒருவர் செய்யும் சேவை அவருடைய வாழ்க்கையையே பாதிக்கிறது. இது ஒரு வாழ்க்கைப் பிரச்னையாக இருப்பதினால்தான் அரிய பணிகளைச் செய்தவர்களைத் திரும்ப திரும்ப தேர்ந்தெடுக்கிறார்கள். ஸ்ரீ சுப்பிரமணிய கவுண்டரைப் போல் இன்னும் பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். நண்பர் கோவிந்த சாமி அவர்கள் எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் இருக்கும்பொழுது பல இடங் களிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களைப் பார்த்திருக்கிறார்கள். எத்தனை சங்கங்களிலே தவறுகள் நடந்திருக்கின்றன, அவை என்னென்ன தவறுகள் என்று அவர்கள் புள்ளி விவரத்தோடு சொன்னால் அவற்றை நான் ஒப்புக்கொள்ள தயாராயிருக்கிறேன். ஆனால் வெறுமனே கூட்டுறவு

21st August 1961] [Sri A. Mariappan]

இயக்கத்திலே தவறுகள் நடக்கின்றன, சிலர் கமிஷன் எடுத்துக்கொள்ளு கிறார்கள் என்று பொதுவாகச் சொன்னால், பொதுநல சேவைக்கு வரக் கூடியவர்களும் இனிமேல் வரமாட்டார்கள்.

அடுத்தபடியாக சேமநிதிக்காக 25 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில சங்கங்களைப் பொறுத்த வரையில் 40 சத வீதமாக இருக்கலாம் என்று பை–லாவில் போடலாம் என்று சொல்லப்படுகிறது. கூட்டுறவு நேசவாளர் சங்கங்களைப் பொறுத்தவரையில் 25 சதவீதமே இருந்தால் போதும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு சர்க்கார் முயற்சி எடுத் துக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக மெம்பர்கள் சேர்ப்பதிலேகூட அநேகமாக விண் ணப்பங்கள் போட்டவர்களையெல்லாம் மெம்பர்களாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற விதி இருக்கிறது. இது அவ்வளவு சரியாக இருக்கிறது என்று நான் நினைக்கவில்லை. ஏன் என்றால் ஒரே சமயத்தில் 200 அல்லது 400 பேர்கள் விண்ணப்பங்கள் போட்டு தேர்தல் காலங் களிலே தொந்தரவு கொடுக்க முடியும். அம்மாதிரி தொந்தரவு கொடுத் தால் சங்கம் நல்ல முறையில் நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போகும். ஆனால், அவைகளைக்கூட நன்றாகப் பரிசீலிக்க வேண்டும்.

மெம்பராகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஒருவர் விண்ணப்பம் போட்டாலும், சங்கமானது மெம்பராகச் சேர்த்துக்கொள்ளவில்லையென்றால், அவர் டெபுடி ரிஜிஸ்திராருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; அதற்கு மேல் மாகாண ரிஜிஸ்திராருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம், மெம்பருக் குத்தான் உரிமை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. சங்கம் அப்பீல் செய்வதென்றால் அவர்களுக்கு இதே காரியமாகப் போய்விடும். இதற்காக சங்கம் பெரும்பாலான நேரத்தைச் செலவிட வேண்டிய நிலைமை ஏற்படும், பெரிய தொல்லையை விலைக்கு வாங்கிக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, இவைகளையும் பரிசீலனை செய்து, புதிதாக மெம்பர்கள் சேரவேண்டுமென்றால், அவர்களை அந்தச் சங்கம் சேர்த்துக்கொள்ள வில்லையென்றால், சரியான முகாந்திரங்களைக் காண்பித்து, மனுக்களைத் தள்ளிவிடுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அம்மாதிரி அங்கத்தினர், நிர்வாகத்தினர் தவறான முறையில் தள்ளப்பட்டால், அவர்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு உத்தரவிடுவதற்கு டெபுடி ரிஜிஸ்திராருக்கு அதிகாரம் இருக்கிறது. அவரும் தவறு செய்தால், மாகாண ரிஜிஸ்திரார் இருக்கி றார். அவர்கள் அவைகளைப் பரிசீலனை செய்வதற்கான சந்தர்ப்பம் இருக் கிறது. ஆகையால், ஒருவரை அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்வதற்கான உரிமை அந்தச் சங்கத்திற்கு ஓரளவு இருக்கவேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொண்டு, சர்க்கார் கொண்டுவந்திருக்கும் மசோதாவை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRIMATHI A. S. PONNAMMAL** : கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன்.

17–வது ஷரத்து ஒரு பெரிய பிரச்னையாக இருந்தது. அதாவது, ஒரு சிலர் தங்களுக்கு வேண்டியவர்களை மட்டும் சேர்த்துக்கொண்டு, மற்றவர்கள் அதில் அங்கத்தினராக வரமுடியாத சூழ்நிலை இருந்தது. இது எங்களுக்கு எல்லாம் ஒரு இம்சையாக இருந்தது. அதை மாற்றி, யார் யாரை அதில் சேர்த்துக்கொள்ள முடியுமோ அத்தனை பேரையும் சேர்த் துக்கொள்ளலாம் என்று திருத்தம் கொண்டுவந்ததை நான் முழுமன தோடு ஆதரிக்கிறேன்.

அந்த விதமாக, மானேஜ்மெண்ட் கமிட்டியில் மும்முறை ஒருவர் இருக்கலாம், அவர்கள் ஐந்து சொஸைட்டிகளிலே இருந்துகொள்ளலாம் என்று இருக்கிறது. ஐந்து சொஸைட்டிகளிலே ஒருவர் இருப்பதே ரொம்ப அதிகம்தான். ஒன்றிரண்டிலே இருந்தால் நன்றாக இருக்கும். திறமையாகப் பார்க்க முடியும். ஐந்து சொஸைட்டிகளிலே ஒருவர் இருந்

[Srimathi A. S. Ponnammal] [21st August 1961

தால், எதைப் பார்ப்பது, எதைப் பார்க்காமலிருப்பது என்பதிலே குழப்பம் வரலாம். அதையும் குறைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இருந்தாலும், குறைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது போல் இருக்கிறது. இந்தத் தடவை இல்லாவிட்டாலும்கூட, காலம் மாற மாற எல்லோருக்கும் பொறுப்பு கொடுக்க வேண்டும், என்ற நிலைமை வர வர, அதைக் கொஞ்சம் மாற்றி யமைக்கும் சூழ்நிலை வருமென்று கருதுகிறேன்.

மும்முறை என்று இருந்தாலும், அதையே செல்வாக்காக வைத்துக் கொண்டு, "பாலட்" முறை மூலம் ஒவ்வொரு சமயத்திலும் இருக்கும் சூழ்நிலை வருகிறது. இந்தச் சூழ்நிலையை அவசியமாக மாற்றவேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். ரொம்பத் திறமையானவர்கள், தங்களுக்குத்தான் சக்தி இருக்கிறது, தங்களுக்குத்தான் திறமை இருக்கிறது என்று காட்டிக் கொண்டு அவர்களே அதில் பல காலம் இருந்தால், மற்றவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மற்ற வர்களுக்கும் அந்த வாய்ப்பைக் கட்டாயமாகக் கொடுக்கவேண்டுமென்றுதான் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மும்முறை இருப்பதென்றாலும், புதிதாக வருகிறவர்களுக்கு அவ்வளவாக "சான்ஸ்" இல்லாமல் போகும். ஒரு சிலரே 90 வயது வரையில் இருந்து கொண்டிருப்பதென்றால், அது நல்லதல்ல. அதையும் மறு பரிசீலனை செய்து மாற்றினால் நன்றாக இருக்கும்.

எங்கள் கிராமத்தில் ஒரு க்ரெடிட் சொஸைட்டி இருக்கிறது. அதில் ஒரு லட்சம் ரூபாய் வரையில் ட்ரான்ஸாக்ஷன் நடக்கிறது. இதிலே இருந்தும் பணம் வருகிறது. சின்ன சொஸைட்டியாக இருந்தாலும் லாபம் கிடைக்கிறது. நிறையப் பணம் வரும்போது, அதைப் பல வழிகளுக்குச் செலவிடுகிறது. கல்விக்காகவும் இன்னும் சில துறைகளுக்கும் நிதியிலிருந்து பணம் கொடுக்கிறார்கள் என்றால், அப்படிக் கொடுக்கும், அதிகாரம் ப்ரஸிடெண்டுக்கோ, காரியதரிசிக்கோ மட்டும் இருந்துவிடக்கூடாது. அப்படி இருந்தால் என்ன ஆகிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். எங்கள் பகுதியில் வெள்ளம் வந்து 240 வீடுகள் அடித்துக் கொண்டுபோகப்பட்டன. பாதிக்கப்பட்டவர்கள் ஹரிஜனங்கள் மட்டுமல்ல ; அநேக தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்தார்கள். அங்கு ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை உதவலாமென்றால், அதற்கு ப்ரெஸிடெண்ட் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே, வெள்ளம் வரும் சமயத்தில், அல்லது தீ விபத்துக்கள் ஏற்படும் சமயத்தில், இன்னும் இதுபோன்ற சந்தர்ப்பத்தில் இம்மாதிரிப் பணத்திலிருந்து ரிஜிஸ்திரார் நேரடியாகக் கொடுக்கும் வாய்ப்பு இருக்கவேண்டும். ப்ரெஸிடெண்டையோ மற்ற அதிகாரிகளையோ அணுகிக் கேட்க முடியாதிருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்கும் அளவிலே, அம்மாதிரி ரிஜிஸ்திரார் சில சமயங்களில் அவருடைய அதிகாரத்தில் கொடுக்கலாம் என்று திருத்தம் கொண்டுவந்தால் ரொம்ப நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். அதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

நில அடமான பாங்கிலிருந்து கடன் வாங்க வேண்டுமென்றால் இன்னும் பழைய முறைதான் இருக்கிறது. வீடு கட்ட கடன் கேட்டாலும், 13 வருஷ வில்லங்க சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. வெள்ளைக்கார ஆட்சியிலிருந்த சட்டம் அப்படியே இருக்கிறது. இன்னும் மாறவில்லை. 13, 20 ஆண்டு வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்கவேண்டுமென்றால், ஏழை எளிய மக்களுக்கு முடியாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நில அடமான பாங்கியிலிருந்து ஏதாவது பணம் வாங்கவேண்டுமென்றால், அந்த நிலம் அவருடைய அனுபோகத்தில் இருக்கிறதா, அதன்மீது நோட் எழுதி வேறெங்கும் கடன் வாங்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து, குறைந்த பட்சம் மூன்றிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கடன் கிடைக்கக்கூடிய அளவில் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும்.

இரு போக சாகுபடியுள்ள நஞ்சைப் பகுதியில் தான் ஏக்கருக்கு ரூ. 700, ரூ. 1,000 கடன் கொடுக்கலாம் மற்ற இடங்களுக்கு ரூ. 200, ரூ. 300 என்று மதிப்பு போடவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கக் கூடாது

21st August 1911] [Srimathi A. S. Ponnammal]

என்று நான் சொல்கிறேன். உதாரணமாக, எங்கள் கிராமங்களில் பார்த்தால், நெல், திராட்சை, கரும்பு இம்மாதிரி பயிரிடக்கூடிய தோட்டக் கால் நிலங்களுக்கு ரூ. 200, ரூ. 300, என்று மதிப்பு போடுகிறார்கள். நெல், கரும்பு, திராட்சை இவைகள் பயிரிடக்கூடிய நிலங்களுக்கும் நஞ்சைக்குக் கொடுக்கும் மதிப்பு கொடுத்தால் நன்றாக இருக்கும். அதை கனம் அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுப் பண்ணைகள். அநேக ஏழை எளிய மக்கள் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கவேண்டுமென்றால், இரண்டாயிரம் ரூபாய்க்கு நோட்டு எழுதிக் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஒரு மாதத்திற்கு நூற்றுக்கு இரண்டுமுதல் மூன்று ரூபாய் வரை வட்டி கொடுத்து நிலத்தை அடமானம் வைத்துவிடுகிறார்கள். இதை மாற்ற வேண்டுமானால், அநேக இடங்களில் கோவாபரேடிவ் ஜாயின்ட் பாமிங் முறையில் விவசாயம் செய்ய ஜனங்கள் முன்வருகிறார்கள் என்றாலும், அவர்கள் சொஸைட்டி "ஆர்கனைஸ்" செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. கோவாபரேடிட்வ் ஸப் ரிஜிஸ்ட்ரார்கள் ஒவ்வொரு ப்ளாக்கிலும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இருக்கிறார்கள். அவர்கள் வருஷமொன்றுக்குக் குறைந்த பட்சமாக குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சொஸைட்டிகள் ஆர்கனைஸ் செய்ய வேண்டுமென்ற நிபந்தனை இருந்தால்கூட நல்லது. அம்மாதிரி இருந்தால், எல்லா இடங்களிலும் உற்பத்தி பெருகுவதோடு ஏழை, நடுத்தர விவசாயிகள், நிலமில்லாத விவசாயிகள் பலன் அடையக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

நிலமில்லாவிட்டாலும், குத்தகை விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. என்றாலும், சர்க்கார் பணத்தை வாரி இறைத்து விடுவதா என்று கேட்கிறார்கள் தலைவரும், காரியதரிசியும். இந்தச் சூழ்நிலை மாறவேண்டும். சிறிய நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்கிற அத்தனை பேருக்கும் ரூ. 200, ரூ. 300 அளவுக்கு பர்ஸனல் செக்யூரிடி பேரில் கடன் கொடுக்க முடியாத நிலை இன்றைக்கு இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கண்காணித்து, இதற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

லாண்டு காலனைஸேஷன் ஸ்கீமில் வீடு கட்டுவதற்கு மிகக் குறைந்த பணம் கொடுக்கப்படுகிறது. வீடு கட்டுவதென்றால் சிமெண்டு, இரும்பு இவற்றின் விலை அதிகமாகப் போய்விட்டது ; மரம் மட்டைகளின் விலையும் அதிகமாகிவிட்டது. ஆனால், பழைய திட்டப்படி ரூ. 200, ரூ. 500 என்று இருந்துகொண்டிருப்பது நன்றாக இல்லை. குறைந்தது ரூ. 1,500 வீதம் வீடு கட்டக் கடன் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு முறையில் ஆட்டுப் பண்ணையை ஏற்படுத்துகிறோம். ஆறு மாதம் கழித்தாவது என்னுடைய தொகுதியில் ஒரு பண்ணை வந்துவிட்டது. பணம் கேட்டு டிபுடி ரிஜிஸ்ட்ராருக்கு எழுதினாலும், அங்கிருந்து ரிஜிஸ்திராருக்குப் பேப்பர் போவதில் கால தாமதம் இருக்கிறது. நம்முடைய கூட்டுறவு அமைச்சர் இலாகாவில் இதுமாதிரிக் கால தாமதம் இருக்கிறது. இதையெல்லாம் துருவிப் பார்த்து, ஒரு சொஸைட்டி ஆரம்பிக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டால், குறைந்தது மூன்று அல்லது ஆறு மாதங்களுக்குள் அனுமதி வந்துவிடவேண்டு மென்று கண்டிப்பு இருந்தால் நன்றாக இருக்குமென்று கூறிக்கொண்டு, இந்த மசோதாவை மறு முறையும் முழு மனதோடு ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

11 a.m.

* SRI R. KRISHNASAMI NAIDU : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தச் சபை முன் வைத்திருப்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். இந்தப் புதிய சட்டமானது பழைய கூட்டுறவுச் சட்டத்தைவிடப் பலவிதங்களில் முன்னேற்றமானது என்பதற்குப் பல ஆதாரங்களைக் கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கடந்த காலங்களிலே கூட்டுறவுச் சங்கங்களிலே

[Sri R. Krishnasami Naidu] [21st August 1961

அங்கம் வகிப்பது போன்ற நடைமுறைக் கஷ்டங்கள் என்னென்ன இருக்கின்றன என்பதைப் பல மெம்பர்கள் அனுபவபூர்வமாகச் சொன்னவற்றையெல்லாம் கூட்டுறவாளர்களும் மற்ற மெம்பர்களும் கவனித்து வந்திருக்கிறோம். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்திலே அந்தக் குறைபாடுகளுக்கு எல்லாம் இடம் இல்லாத நிலையில் அமைத்திருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அம்சங்களையே திரும்பச் சொல்லவேண்டியது இல்லையென்று நினைக்கிறேன். அவற்றைக் கனம் அங்கத்தினர்கள் அனைவரும் உணருவார்கள். முக்கியமாக இந்தச் சட்டம் தீவிரமாக, புரட்சிகரமாக உணர்ச்சிவசப்பட்டு ஆதரிக்கும் முறையிலோ, பேசும் வகையிலோ அமையவில்லையென்ற குறைபாடுகள் சிலர் வாயிலாக வருகின்றன. அவ்வாறு முதலில் இந்த விவாதத்தில் பங்கு எடுத்துக்கொண்ட சக அங்கத்தினர்களே, சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதற்கான முயற்சிகள் இருந்துகொண்டிருக்கும்போது, அத்தகைய நடவடிக்கைகள் எல்லாம் உருவாகிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலே, சர்க்கார் தரப்பைச் சேர்ந்தவர்களே அவர்கள் மனதில் உள்ளவற்றை உள்ளபடியாக பிரதிபலிக்கும்படி இந்தச் சட்டத்தில் இல்லாத ஒரு நிலையில், இந்தச் சட்டத்தில் எதிர்பார்த்த அளவு இல்லாமல் சில மாறுதல்களோடு கொண்டு வந்திருக்கிறார்கள் என்றார்கள். சோஷலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதிலே யாருக்கும் நாங்கள் பின் தங்கியவர்கள் அல்ல. சோஷலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்கு அவசியமாக இப்போது நாம் செய்யும் ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட காலத்திலேயே அதன் கொள்கைகளை விளக்கக்கூடிய வகையில் அமையுமானால் நல்ல வகையில் அது உருவாகிக்கொண்டு வருவதற்கு நாம் எல்லாம் பாதுகாப்புச் செய்தவர்களாக இருப்போம். சோஷலிசம் சமுதாய அமைப்புக்கு அடித்தளம் போடும் வகையிலேயே அமைக்கப்பட்டு வருவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதை மனதில் கொண்டு இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றன. அத்தகைய எண்ணங்களையே இவர்களுடைய மனதில் கொண்டு சில பேர் தீவிரமாக இந்தச் சட்டத்தில் மாறுதல்கள் காணவேண்டுமென்று சொன்னதை அநுபவபூர்வமாக உணர்ந்து இப்போது செய்யக்கூடிய மாறுதல்கள் எதுவும் சோஷலிஸ சமுதாய அமைப்புக்குப் பாதகம் இல்லாத வகையில் செய்வதற்கு நாம் முயன்றிருக்கிறோம். அதை அவர்கள் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். பொறுக்கு கமிட்டியில் இருந்த நாங்கள் எல்லோரும் அந்த அடிப்படையிலேயே செயல்பட்டிருக்கிறோம். சோஷலிஸ சமுதாய அமைப்பை நடைமுறையில் கொண்டுவருவதற்கு முடியாதபடி இதிலுள்ள கருத்துக்கள் அமைந்திருக்கின்றன என்று சொல்லுவது அர்த்தமற்றது. அது வாதத்திற்கும் நிற்காது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் தான் இந்தச் சட்டமானது உருவாகிவருவதற்கு நாங்கள் துணைபுரிந்திருக்கிறோம். இந்தச் சட்டத்திலேயே இன்னும் கூடச் சில அம்சங்கள் இருந்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. மகா சபைக்குப் பிரதிநிதி கோஷ்டிகள் என்று ஏற்படுத்த வேண்டும். பெரிய மகாசபையை மாகாணம் பூராவிலும் உள்ள அல்லது ஐந்தாயிரம் , பதினைந்தாயிரம் அங்கத்தினர்கள் உள்ள இடங்களில் அமைப்பதற்குச் சில வழிவகைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதில் என்னுடைய அனுபவத்தில் ஐந்தாயிரம் அங்கத்தினர்களில் ஆயிரம் அங்கத்தினர்களுக்கு அதிகமாக இருக்கக்கூடிய சங்கங்களில்கூட இந்த முறையைக் கையாள்வது மிகமிகப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தச் சங்கத்தினுடைய விவகார எல்லையில் அந்தச் சங்கத்தினுடைய பைலாவில் குறிப்பிட்டிருக்கிற ஒவ்வொரு பிராந்தியத்தில் இருந்தும் ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்ட வேண்டுமென்ற நியதியை உண்டுபண்ணிவிட்டால் பிரதிநிதித்துவ கமிட்டி முறை ஆயிரம் அங்கத்தினர்கள் கொண்ட சங்கங்களிலே இருக்குமானால் லகுவாக இந்த பாலட் முறை அமுலுக்கு வரும்போது தேர்தல் மிகவும் சுலபமாக இருக்கும். ஆகவே இந்த முறையை அமுலுக்குக் கொண்டுவருவது அவசியம் என்று நான் கருதுகிறேன். எல்லாச் சங்கங்களிலும் தொடர்ந்து மூன்று வருஷம் பணியாற்றியவர்கள் பின்பு ரிடயர் ஆவார்கள் என்ற நியதியைச் சேர்த்திருக்கிறோம். இது கிராம சங்கங்கள் சம்பந்தப்பட்ட அளவில் அவ்வளவு உபயோகமாக இருக்கும் என்று என்

21st August 1961] [Sri R. Krishnasami Naidu]

அபிப்பிராயத்தில் படவில்லை. ஏதோ நன்மை செய்யவேண்டுமென்று நினைக்கிறோம். அது பலன் அளிக்குமானால் அப்படியே இருக்கட்டும். இல்லாவிட்டால் பின்னால் கூட மாற்றலாம். என்னுடைய அநுபவத்தில் கிராம சங்கங்களில் பதவி வகிப்பவர்களுக்கு ஒரு சிலரைத் தவிர யாருமே முன்வருவதில்லை. "எனக்கு வேலை இருக்கிறது, உனக்கு வேலை இருக்கிறது," என்று ஓடுகிறார்களே தவிர யாரும் முன் வருவதில்லை. வேண்டுமானால் என் தொகுதிக்குச் சென்று பார்க்கலாம். எதுவும் என் வார்த்தையில் சந்தேகம் உள்ளவர்கள் அவசியம் சென்று பார்க்கவேண்டும். உண்மையில் என் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். பலரும் அந்த நிர்வாகத்தில் பங்கு கொள்ள முன்வருவதற்குப் பின்தங்குகிறார்கள். இப்போது ஐந்தாண்டு திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு—அவற்றின் வெற்றிக்கு கூட்டுறவு சங்கங்கள் பல துறைகளில் பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் லேவாதேவி முறையை விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. பல இனங்களின்கீழ் கடன் உதவி அளிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு சிறிய சங்கமும் கூட சரியான முறையில் செயல்படவேண்டியதாக இருக்கிறது. இப்போது யார் வேண்டுமானாலும் அங்கத்தினர்களாக ஆகலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு சில பேர்களுக்குக் கடன் கொடுத்துவிட்டு பாக்கிப் பேர்களுக்கு இல்லையென்று சொல்லும் நிலையில் நாம் இல்லை. அது நம்முடைய நோக்கமும் அல்ல. இப்படிப் பல வகையில் சிறப்பாகப் பணிபுரியவேண்டியிருப்பதால் எல்லோரும் அத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன் வருவதில்லை.

பெரிய சங்கங்கள் சம்பந்தப்பட்டமட்டில், அங்கு ஸ்தானங்களுக்கு நான், நீ என்று வரவேண்டுமென்ற போட்டி எண்ணம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, கிராம சங்கங்களைப் பொறுத்தமட்டில் இது அவசியமா என்று போகப் போக அனுபவத்தில்தான் பார்க்கவேண்டும். சூபர் சீட் செய்வது என்பதில் சில சிரமங்கள் இருக்கின்றன. ஒரு கூட்டுறவுச் சங்கம் சரியாகச் செயல்படவில்லையென்றால், கூட்டுறவு தத்துவங்களுக்கு அல்லது விதிகளுக்கு மாறாக அங்குக் காரியங்கள் நடக்கும்போது அந்தச் சங்கம் மீது நடவடிக்கை எடுக்கும்போது ஒன்றைக் கவனிக்க வேண்டும். இதை ஆலோசனை செய்து வைத்துக்கொள்வதினால் எதிர்காலத்தில் நமக்கு நன்மை கிடைக்கும். அது அனுகூலமாக இருக்கும். ஒரு ஸீனியர் இன்ஸ்பெக்டர் அல்லது ஒரு ஸி.எஸ்.ஆர். ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் காரியதரிசியாக இருக்கும்போது இத்தகைய ஒரு நிலை அந்தச் சங்கத்திற்கு ஏற்படுமானால், அதாவது அதை ஸுப்பர்ஸீட் செய்யவேண்டிய நிலை ஏற்படுமானால் அந்த இலாகா அதிகாரி அங்கு காரியதரிசி என்ற ஹோதாவில் பணியாற்றும்போது இந்நிலை வரக் காரணமென்ன ? கூட்டுறவுச் சங்கத்திற்குப் புறம்பாக அந்த நிர்வாக சபை சொன்னால் மேல் அதிகாரிகளுக்கு நிர்வாகம் இவ்வாறு செய்யப்பட்டு வருகிறது என்று சொல்ல அந்த அதிகாரி கடமைப்பட்டவரா இல்லையா ? என்று யோசிக்க வேண்டும். ஆகவே, இலாகா அதிகாரி ஒருவர் ஒரு சங்கத்தின் காரியதரிசியாக இருக்கும்போது இத்தகைய நிலை வரக் காரணமென்ன என்று ஆலோசிக்க வேண்டும். அரசாங்கம், அதிகாரிகள், கூட்டுறவாளர்கள் எல்லோரும் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. என்று விதிகளில் ஏற்பாடு செய்தால் இத்தகைய நிலைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆளாகவேண்டிய சந்தர்ப்பம் குறைவாக இருக்கும். கூட்டுறவு தத்துவத்தை அமுல் படுத்தும் முறையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. மார்கட்டிங் போன்ற துறைகளில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நடைமுறையில் பார்க்கும்போது விவசாயிகளாகயிருந்தாலும் சரி அல்லது உற்பத்தி செய்பவர்களாயிருந்தாலும் சரி, இந்தக் கூட்டுறவு தத்துவம் உடனடியாக இல்லாவிடினும் காலம் தாழ்ந்தாவது நல்ல நிரந்தரமான பலனை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும், சமுதாயத்திற்கும் அளிக்கும் என்பதை யோசித்துப் புரிந்துகொள்ளும் நிலையில் இன்று பலர் இல்லை. அவர்களிடம் இந்த எண்ணத்தைப் பரப்புவது கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டுக்கொள்ளும்படி அவர்களை தயார் செய்யவேண்டும்.

[Sri R. Krishnasami Naidu] [21st August 1961]

கூட்டுறவு தத்துவங்களின் அடிப்படைக்குப் பாதகம் அளிக்காத வகையிலும், இந்தத் தத்துவங்களை வளர்த்துக்கொடுத்து காரியங்களை நிறைவேற்றிக் கொண்டு போகிற முறையிலும் அனுபவத்தோடு ஒட்டிய முறையில் கூட்டுறவுத் தத்துவத்தைப் பிரத்தியட்ச நிலையோடு நினைத்துச் செய்ய வேண்டும். நடைமுறையில், ஸ்தலத்தில் இருக்கக்கூடிய கஷ்டங்களைப் பொருட்படுத்தாது இருக்கக்கூடாது. நடைமுறையிலுள்ள கஷ்டங்களையும் உணர்ந்து மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய விதத்தில் இந்தக் கூட்டுறவு தத்துவத்தைக் கொண்டு செல்லவேண்டும். கூட்டுறவு அட்வைசரி கமிட்டீஸ் கூட்டுறவு இலாகா அதிகாரிகள், அமைச்சர்கள், நாம் எல்லோரும் இதில் உள்ள கஷ்டங்களை அறிந்து ஆலோசனை செய்து நல்லதொரு முடிவு எடுக்கவேண்டும். வெறும் தத்துவத்தோடு நில்லாது சூழ்நிலைக்கேற்ப சில மாறுதல்கள் செய்யவேண்டும். ஆனால் இந்த நடைமுறைகள் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்று நான் கூறவில்லை. மார்க்கட்டிங் முதலியவைகள் வரும்போது, சில சக்திகள் கூட்டுறவுத் துறைக்கு எதிராகப் பணி புரிகின்றன. கண்ட்ரோல் கிரெடிட் என்ற முறை இருக்கிறது. மகசூல் எடுக்கும் முன்பே கடன் கொடுக்கிறோம். ஒவ்வொரு மகசூலிலும் எந்தளவு பலன் அளிக்கும் என்று பார்த்து ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஏகர் ஒன்றுக்கு இவ்வளவு ரூபாய் என்று சாகுபடி செய்வதற்கு முன்பே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்கப்படுகின்றன. இது சிறந்த முறைதான, விவசாயிகளுக்கு இது மிகவும் அனுகூலம் அளிக்கும் முறைதான். கண்ட்ரோல் கிரெடிட், மூலம் கொடுக்கப்படும் கடன்கள், உற்பத்தி செய்யும் பொருள்களை கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் விற்பனை செய்யவேண்டுமென்ற விதிகளின்கீழ் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த மகசூல் அவ்வளவையும் இங்கு கொண்டு வருவதில்லை. பத்து மூட்டை கிடைத்தால் இரண்டு மூட்டையைக் கொண்டுவந்து எட்டை வெளியே விற்றுவிடுகிறார்கள். சில சமயம் பத்தையும் வெளியே விற்று விடுகிறார்கள். கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்வதால் விலை குறைத்து விற்கப்படுகிறது என்று சொன்னால், அதற்கு அர்த்தமுண்டு. அனுபவத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் வருவதை நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்க முடிகிறது. விவசாயிகளுக்கு, மகசூல் சாகுபடிக்கு என்று ஒரே தடவையில் கொடுத்து விடுகிறோம். அப்படிக் கொடுப்பதினால் அவர்களுக்கு தற்காலிகமாக ஒரு அபிமானம் இருக்கிறதே தவிர தனியார்கள் ஒவ்வொரு சமயங்களில் ஐந்து அல்லது பத்து ரூபாய் என்று கொடுக்கும்போது அவர்களைத்தான் கற்பகத் தருக்களாக நினைக்கிறார்களே தவிர கூட்டுறவு சங்கங்கள் கொடுக்கும் உதவியை அவர்கள் மறந்து விடுகிறார்கள். வியாபாரிகளின்மேல் தான் அவர்களுக்கு மதிப்பு இருக்கிறது. ஆகவே, கண்ட்ரோல் க்ரெடிட் மூலம் கடன் வாங்கி உற்பத்தி செய்யக்கூடிய விவசாய விளை பொருள்களைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம்தான் அந்த விளை பொருள்களை விற்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்துவதோடு, விற்பனை சங்கங்கள் மூலம் அல்லாது வாங்குவதற்கு அல்லது கொடுப்பதற்கு தடை விதிக்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாட்டை விதிமுறைகளில் செய்யவேண்டும். உதாரணமாக பருத்தியை எடுத்துக்கொள்ளுங்கள். பருத்தி வியாபாரம் செய்ய லைசென்ஸ் எடுக்கவேண்டும். அவர்கள் கூட்டுறவு முறைக்கு மாறாக நம் அனுமதியின்றி பருத்தி வாங்குவது அல்லது மார்க்கட்டிங் சொஸைட்டிக்கு வரவேண்டிய விளை பொருள்களை வாங்குவது, அல்லது அவைகளை விற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்வது என்றிருந்தால் அவர்கள் லைசென்ஸ்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்று விதியிருக்க வேண்டும். லைசென்ஸ் கொடுக்கும்போதே இதற்கான ஒரு நிபந்தனை இருக்க வேண்டும். ஆக, விசாரணைகளை அனுகூலமான வழியில் அழைத்துச் செல்லும்போது சில சக்திகள் இதற்குக் குறுக்கே நுழைந்து அந்த அனுகூலங்களைக் கெடுத்துவிடுகின்றன. ஆகவே, இந்தக் கொள்கைக்கு இடையூறு இழைக்கும் விதத்தில் காரியங்கள் நடவாத வகையில் ஏதாவது செய்வது மிகவும் அவசியம். அப்படிச் செய்வது தகாத முறையில் அல்ல. அதிகார முறையில் அல்ல, நியாயமான வழியில் தான் செய்கிறோம். அதைச் செயல்படுத்தும் காலத்தில் அதற்கு எதிராக வரும் சக்திகளைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். ஆகவே, கூட்டுற

21st August 1961] [Sri R. Krishnasami Naidu]

வாளர்கள், அதிகாரிகள், கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பவர்கள் இதைக் கவனிக்க வேண்டியது அவசியம். குயவனுக்கு ஒருநாள் வேலை, தடிக்கம்புக்காரனுக்கு ஒரு நிமிட வேலை என்று சொல்வது போல் ஆகிவிடக் கூடாது. ஆகவே, மக்களுக்கு ஏற்படும் அனுகூலங்களை பாழ்படுத்தும் சக்திகளை தலையெடுத்து செயல்படும்படி விட்டுக்கொண்டிருந் தால் இந்த முறையை வளர்த்துக்கொண்டு போவது கஷ்டமாக இருக்கும். கூட்டுறவுப் பண்ணைகளில் நிலம் கொடுக்கவேண்டுமென்றால் குறைந்தது ஐந்து வருடங்களுக்கு என்றாவது கொடுக்க வேண்டும் என்று இப்போது சொல்லியிருக்கிறோம். இதைப் 10 வருடங்கள் என்று ஆக்கினால் நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் இவ்விதம் கொடுப்பவர்கள் பின் வாங்குவோர்களோ என்று நான் நினைக்கிறேன். இவ்விதம் கூட்டுப் பண்ணையில் கொடுத்த பின்னால் அதில் கிணறுகள் முதலியவை வெட்டி விருத்தி செய்த பின்னால் அவர்கள் நல்ல பலன் பெறப்போகிறார்கள், ஆகவே ஏன் இதை 10 வருடத்திற்கு என்று வைத்திருக்கக்கூடாது ? அல்லது, இரண்டு வகையாக இதைப் பிரிக்கலாம். சீர்திருத்தம் செய்ய வேண்டிய நிலங்கள் என்று பிரித்து அதை 10 வருடங்களுக்கு என்றும், சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியமில்லாத நிலங்கள் ஐந்து வருடங் களுக்கு என்றும் தீர்மானிக்கலாம். இவ்விதமில்லையென்றால் சரியான பலன் ஏற்படுமா என்பது சந்தேகமே, இதன் மூலம் எவ்வளவு தூரத் திற்கு பலன் ஏற்படும் என்பதை நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அடுத்ததாக, கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புறங்களில் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்பதற்காக நாம் மான்யம் கொடுக்கிறோம். கிளார்க்குகளை வைத்துக்கொள்ள உதவி செய்கிறோம். இதற்கு சென்ட்ரல் பாங்கிலிருந்து மான்யம் கிடைக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் அநேக கிளார்க்குகளை வைத் திருக்கிறோம். ஒரு மாதத்தில் மட்டும் அவர்களுக்கு என்று 1,400 அல்லது 1,500 ரூபாய் சம்பளம் என்ற முறையில் வருடத்தில் சுமார் 20 ஆயிரம் ரூபாய் வரையில் கொடுத்து வருகிறோம். இம்மாதிரி வேலை செய்கின்ற கிளார்க்குகள் நல்ல விஷயம் தெரிந்தவர்களாக இருந்தால் அந்தச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கும். நான் முன்னால் குறிப் பிட்டது போன்று கிராமச் சங்கங்களில் ஈடுபட்டிருக்கின்ற ஒரு சிலருக்கு சங்கத்தில் வேலை செய்வதற்கு நேரம் இல்லாமல் இருக்கலாம், சிலருக்கு சில வேலைகள் செய்ய வராது என்ற காரணத்தால் சங்கத்தில் முக்கியமான வேலைகள் தடைபடுகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் நாம் நியமிக்கும் குமஸ்தாக்கள் விவரம் தெரிந்தவர்களாக இருந்தால் நல்ல பலன் ஏற்படும். நாம் இம்மாதிரிப்பட்ட கிளார்க்குகளை புதிதாக படித்துவந்த வாலிபர்களை எடுத்துக்கொள்கிறோம். அவர்களுக்கு எந்தவிதமான பயிற்சியுமில்லாமல் அவர்களை நியமித்து விடுகிறோம். நான் சொல்ல விரும்புவது, அவர்களை நியமித்த பிறகாவது, சிறிது காலத்திற்கு அவர் களுக்கு குறைந்தபட்ச விவரங்கள் தெரியக்கூடிய அளவில் பயிற்சிக் கொடுக்கவேண்டும் என்பதுதான். மாகாண கூட்டுறவு யூனியன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்வது நலம். ஜில்லாக் கூட்டுறவு பாங்குகள் இதைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டும். எங்கள் பகுதியிலுள்ளவர்களுக்கு குறைந் தது இரண்டு நாட்களுக்காவது கல்வி பிரச்சாரம் செய்யும் நோக்கத்துடன் இந்த விவரங்களைத் தெரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் இரண்டு நாட்கள் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க அனுமதிக்கவேண்டும் என்று மத்திய மாகாண கூட்டுறவு யூனியனை கேட்டிருக்கிறோம். மத்திய பாங்கிடம் இவர் களுக்கு தினப்படி 2 ரூபாய் வீதம் குறைந்து 300 ரூபாய் சப்ஸிடி வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இதுவரையிலும் பதில் வரவில்லை. இவ்விதம் எந்த விதமான பயிற்சியும் கொடுக்காமல் இவர்களினால் விசேஷமான பலன் கிடைக்குமா என்பதை நாம் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். புதிதாக படித்து வருகின்ற இவ்வாலிபர்கள் இதில் குமஸ்தாக்களாக வந்த பிறகு சங்கங்களில் எவ்வாறு கணக்குகள் எழுதுவது, ஜில்லா பாங்குகளிலுள்ள பாரங்களை எவ்விதம் பூர்த்தி செய்வது என்பதெல்லாம் இவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். ஆகவே இவர்கள் ஒவ் வொருவருக்கும் இரண்டு மூன்று தினங்கள் பயிற்சி கொடுப்பது உபயோக கரமாக இருக்கும் என்றும், இந்த முறை மாகாணம் முழுதும் இருக்க வேண்டும் என்றும் நான் கருதுகிறேன்.

இவ்வாறு, இன்னும் நம்முடைய மாகாணத்திலுள்ள மார்க்கட்டிங் சொஸைட்டி, ரைஸ் மில்கள், எக்ஸ்பெல்லர்கள், பருத்தி அரைக்கும் ஜின்னிங் பாக்டரிகள் இவைகள் எல்லாம் கூட்டுறவு முறையில் நடந்து வருகின்றன. இவைகள் எல்லாம் கூட்டுறவு முறையில் நல்லபடியாக நடக்கவேண்டும் என்று முயற்சிக்கின்ற நேரத்தில், கூட்டுறவு விதிகளின் காரணமாக அனுபவ ரீதியாக சில மோதல்கள், கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்தக் கஷ்டங்கள் எல்லாம் இல்லாத வகையில் எல்லாம் ஒத்துப்போகக் கூடிய வகையில், ஏற்கெனவே இருந்து வரும் சில சிரமங்களை எல்லாம் மாற்றக்கூடிய வகையில் சில திட்டங்களைக் கொண்டுவருவதற்கு ஆலோசனை செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்பதை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இதில் அங்கத்தினர்களாக சேருவதுபற்றியும், நிர்வாகத்தில் இருந்து வந்த பல சங்கடங்கள்பற்றியும் பல மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவு முறையில் நம்முடைய ராஜ்யத்தில் செய்யவேண்டிய பல பணிகளையும் நல்ல முறையில் செயலாற்ற முடியும் என்ற அளவில் அமைந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை இந்த வகையில் வரவேற்பதோடு, இதற்காக நல்ல ஆலோசனைகள் கூறின கூட்டுறவு இலாகா அதிகாரிகளையும், கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

Sri J. MATHA GOWDER: கனம் சபைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு என்பது நம்முடைய நாட்டினுடைய முதுகெலும்பு போன்றது. கூட்டுறவு இயக்கத்தினால்தான் பின்னடைந்திருக்கும் ஒரு நாடு முன்னேறுவதற்கு முடியும் என்ற சான்றை பல நிபுணர்கள் நமக்கு பல கருத்துக்கள் மூலமாக தெரிவித்திருக்கிறார்கள். திட்ட காலத்திலே திட்டம் போடும்பொழுது கூட்டுறவு இயக்கத்தை ஒரு திட்டமாக வைத்து, அதன்மூலமாக மக்களுக்கு பல நன்மைகளை செய்து கொடுக்க முடியும் என்ற முறையில் பல திட்டங்களை வகுத்து திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். அந்த நிலையில் பார்க்கும்போது, திட்ட காலத்திற்குள் பல வேலைகளை செய்து முடிப்பதற்கு கூட்டுறவு இயக்கத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்த பின்னால்தான் நமது அமைச்சர் அவர்கள் இந்த திருத்த மசோதாவை கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தச் சட்டம் முதலாவதாக இந்தச் சட்ட மன்றத்திலே கொண்டுவந்து விவாதிக்கப்பட்டது. பின்னால் பொறுக்குக் கமிட்டிக்கு சென்று, பொறுக்கு கமிட்டியில் நன்றாக இதைப்பற்றி ஆலோசனை செய்து, பல திருத்தங்களையும் செய்து பின்னால் இப்போது நம் முன்னால் சட்டமாக வந்திருக்கிறது. இதைப்பற்றி பொதுமக்களுடைய எண்ணம் என்ன என்பதையும் இந்தப் பொறுக்கு கமிட்டியினர் கேட்டிருக்கிறார்கள். எல்லோரும் அவரவர்கள் அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லியிருக்கும் நேரத்தில் யாரும் கூட்டுறவு இயக்கம் தேவையில்லை, இந்த நாட்டுக்கு அது பயன்படாது என்று யாரும் சொல்லவில்லை. இந்த இயக்கத்திலுள்ள பல சிக்கல்களை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அந்த நிலையில் பார்க்குபோது, கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டுக்கு மிகவும் அவசியம் என்பதை நாம் எல்லோரும் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறோம.

இப்படியிருக்கும்போது, இந்த நாட்டில் அரசியல் வாதத்திற்காக மட்டும் ஒருவர்தான் பதவியில் இருக்கும்போது கூட்டுறவு இயக்கம் வேண்டும் என்றும் பதவியிலிருந்து வெளியில் போன பின்னால் கூட்டுறவு இயக்கம் தேவையில்லை, இதனால் நாடு சீர்கெட்டுவிடும் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்று சொன்னால் உண்மையிலேயே அது நாட்டுக்காகச் சொல்லவில்லை, ஏதோ அரசியல் காரணத்தின் பேரில்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டிலுள்ள மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதிர்ஷ்ட வசமாக இவ்விதம் சொல்லக்

21st August 1961] [Sri J. Matha Gowder]

கூடியவர்களின் கட்சி இந்த சபையில் இல்லை என்று நினைக்கிறேன். ஆகவே கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டுக்குத் தேவை என்று சொல்லும் போது நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதில் எந்த விதமான தவறும் இல்லை. அந்தக் கருத்துக்களைச் சொல்லும் நிலையில், நம்முடைய தமிழ்நாட்டை மட்டும் எடுத்துக்கொண்டால், எந்தத் துறையை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் நாம் கூட்டுறவு இயக்கத்திலே செயல்பட்டுக்கொண்டு வருகிறோம். உதாரணமாக எடுத்துக்கொண்டால் பண்டைய காலத்திலே கிராம நாணய சங்கம் ஒன்றுதான் இருந்தது. அதற்குப் பிறகு இப்போது பார்த்தால் நில அடமான பாங்குகள், தொழில் கூட்டுறவு, தொழிலாளர் கூட்டுறவு, வீடு கட்டும் கூட்டுறவு, கூட்டுறவுப் பண்ணை, பால் பண்ணை என்று இப்படி பரவலாக எந்த ஒரு துறையிலும் கூட்டுறவுமூலமாக நடத்து கிறோம். மக்கள் கேட்டால் உடனடியாக அதற்கு ஆவன செய்வதற்கு இந்த இலாகா தயங்குவதில்லை. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், இன்றைக்கு நம் நாட்டிலே பல்வேறு துறைகளில் நாம் தொழில், கூட்டுறவை அமைப்பதின் முனைந்திருக்கிறோம். முன்பெல்லாம் கிராம நாணய சங்கத்தின் வேலை கடன் கொடுத்து, கடனைத் திரும்பப் பெற்றுக் கொள்வது ஆகிய இரண்டும்தான். இன்றைக்கு கடன் கொடுப்பதால் மாத்திரம் முன்னேறிவிட முடியாது, அதே நேரத்தில் தொழில் கூட்டுறவை அதிகமாக்கவேண்டும் என்று இன்றைக்கு பல கூட்டுறவுகளை அமைத்துக்கொண்டுவருகிறோம். இப்படி எந்தத் துறையிலும் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொண்டு வரும் நேரத்தில் நாணய சங்கங்களுக்கும், பாங்குகள் போன்று இருப்பவைகளுக்கும் ஜில்லா அடிப்படையில் டெபுடி ரிஜிஸ்டிரார் வைத்துச் செயல்படும்போது, தொழில் கூட்டுறவுக்குச் சம்பந்தமே இல்லாமல் பிரித்துவிடவேண்டும் என்று சொல்ல விரும்பு கிறேன். தொழில் கூட்டுறவு அதிகமாக ஏற்படவேண்டும் என்று பரவிக் கொண்டிருக்கும்போது இந்த இலாகாவைப் பிரித்து தொழில் துறைக்குத் தனியான ஒரு இலாகாவை மாவட்டவாரியாக அமைத்துவிட்டால் நம் நாட்டிலே சிறு தொழில்கள் கூட்டுறவுமூலமாக இயங்க முக்கிய சந்தர்ப்பம் இருக்கின்றது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிலே பல கூட்டுறவுகள் இன்றைக்கு நன்றாகச் செயல் பட்டுக்கொண்டிருந்தபோதிலும் ஒவ்வொரு கூட்டுறவுகள் அந்த விதத்தில் செயல்பட முடியாதிருப்பதையும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நில அடமான பாங்க் என்று நாம் பெயரளவில் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால் நில அடமான பாங்குகள்மூலமாக மாவட்டவாரியாக எத்தனை பேர்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கு எடுத்தால் மிக மிக மிகக் குறைவாக இருக்கும், அது ஒன்றுதான் நன்றாகச் செயல்படவில்லை என்ற குறையை எடுத்துச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு நில அடமான பாங்கிலிருந்து நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்குவதில் பல தொல்லைகள் இருக்கின்றன. மாவட்டத்திலே ஒரு அலுவலகத்தை வைத்துக் கொண்டு, அந்த மாவட்ட தலைநகரில் இருக்கக் கூடியவர்கள் அந்த நிலத்தை பார்வையிடுவதற்காக ஒரு விண்ணப்பம் போட்டால் ஒரு வருஷத்திற்குப் பிறகு வருகிறார்கள். சூபர்வைஸர், பார்வையிட்டு திருப்பி விண்ணப்பத்தை பாங்குக்கு அனுப்பிய பிறகு மூன்று மாதம் அல்லது ஆறு மாதம் பாங்கில் இருந்து, அதற்குப் பிறகு எவ்வளவு கொடுக்கலாம் என்பதைப்பற்றியும் என்னென்ன வில்லங்க சர்ட்டிபிகேட்டுகள் வாங்கப்பட்டிருக்கிறது என்று அதற்குப் பிறகு பார்க்கிறார்கள். அதையெல்லாம் பார்த்து அவர்கள் சிபாரிசு செய்து மாகாணத்திற்கு அனுப்பி மாகாண ஆபீஸ் ஸாங்ஷன் செய்து கொடுக்க கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்குக் குறைவில்லாமல் பிடித்துவிடுகிறது. ஒருவர் தன் நிலத்தை அடமானம் வைத்து நிலத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பணம் தேவை என்று அவசரப்பட்டுக்கொண்டிருக்கும்போது நில அடமான பாங்க்மூலமாகக் கடனைப் பெற மூன்று ஆண்டுகள் பிடிக்கின்றன என்று பார்க்கிறோம். கடன் ஸாங்ஷன் ஆகும்போது, பணமே வேண்டாம் என்று விட்டுவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் சற்று விறுவிறுப்பாக, சுறுசுறுப்பாக எவ்வளவு சீக் கிரத்தில் மக்களுக்குக் கொடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொடுக்க

11-30 a.m.

வழிவகை செய்யவேண்டும். அதற்காக அதிகமான உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும். ஜில்லா அளவில் இல்லாமல் இதை வட்டார அளவில் ஏற்படுத்துவதாக சொல்லியிருக்கிறார்கள். வட்டார அளவுக்கு ஏற்படுத்துவதானால் அதை உடனடியாக ஏற்படுத்திவிடுவது நலம் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு நில அடமான பாங்க்கை ஏற்படுத்தி அதை மத்திய பாங்கோடு இணைப்பு செய்து, மத்திய பாங்க்கை மாகாண பாங்கோடு இணைப்பு செய்தால் நலமாக இருக்கும். வட்டார பாங்குகள் ஆரம்ப வேலைகளை எல்லாம் செய்து முடித்துவிடுவார்கள். மாவட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் சிபாரிசு செய்தவுடன் உடனடியாகப் பணம் கிடைக்கும் நிலை ஏற்படும் என்று நினைக்கிறேன். இந்த நிலையில் நாம் இதை உடனடியாக கவனித்து, இந்தச் சட்டத்தின்கீழ் ரூல்ஸ் பிரேம் செய்யும்போது அமைச்சர் அவர்கள் இதற்குக் தனியாக ரூல்ஸ் போட்டுவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக இந்த கூட்டுறவிலே அதிகமான அங்கத்தினர்களைச் சேர்க்கவெண்டும் என்று முன்பே திட்டம் போட்டிருக்கிறது. அதிலேகூட அந்தத் துறையிலே இருக்கக்கூடியவர்கள், சொஸைடி தலைவர்கள், இஷ்டப்பட்டால்தான் சேரலாம் என்று இருப்பதற்குப் பதில் அவராக சேர்ந்து கொள்ளும் உரிமை கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுத்திருப்பதோடு அதிக அங்கத்தினர்கள் சேராமல் இருந்தால் அப்போது அதற்கான காரணங்கள் என்ன என்றும் சிந்திக்கவேண்டும். அதிலும் தொழில் துறையில் சங்கங்களை ஆரம்பிக்கும்போது சாதாரணமாக மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், முதலீடு செய்தால் என்ன பிரதிபலன் கிடைக்கும் என்ற கண்ணோட்டத்தோடு சேர்கிறார்கள். கூட்டுறவிற்கு முதலீடு செய்கிறோம் என்று யாரும் முன்வரமாட்டார்கள். வில்லேஜ் கிரெடிட் சொஸைட்டீஸ் சம்பந்தப்பட்ட மட்டில் டிவிடெண்ட் சதவீதம் $6\frac{1}{4}$ வரை இருக்கலாம் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதோடு எந்தச் சொஸைட்டியை எடுத்துக்கொண்டாலும் $6\frac{1}{4}$ சதவீதத்துக்கு மேல் கூடாது என்று சொல்லும்போது கிராமப்புறங்களிலும், வேறு துறைகளிலும் முதலீடு செய்பவர்கள் கூட்டுறவு இயக்கத்திற்கு வர தயக்கம் ஏற்படுகிறது. காரணம் வெளியில் $6\frac{1}{4}$ சதவீதத்துக்கு பதில் 25 சத விகிதம் வரையில் லாபம் கிடைக்கிறது. அதை அனுசரித்து முதலீடு செய்வார்களா அல்லது கூட்டுறவு இயக்கத்திற்கு நன்மை ஏற்படுகிறது என்று முதலீடு செய்வார்களா என்று பார்க்கும்போது, கூட்டுறவு இயக்கத்திற்காக முதலீடு செய்யவே முன் வரமாட்டார்கள். இந்த நிலையை மாற்றவேண்டும். ரிஸர்வ் பண்டுக்கு 25 சதவீதம் வேண்டுமென்று சொல்லுகிறோம். அது தேவைதான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இதற்கு 25 சத விகிதம் க்ஷேம நிதிக்கு இவ்வளவு என்று ஒதுக்கி வைத்திருக்கும்போது இதிலே சில சதவீதத்தைக் குறைத்து டிவிடெண்ட் கொடுப்பதைச் சற்று அதிகரித்தால், குறைந்தது 10 சதவீதம் $12\frac{1}{2}$ சத வீதம் என்று உயர்த்தினால் தொழில் துறையில் மக்கள் கூட்டுறவு இயக்கத்தில் முதலீடு செய்வார்களேயல்லாது, பழைய எட்டை வைத்துப் புரட்டிக்கொண்டிருந்தால் தொழில் அதிகரிக்காது, அதிக முதலீடு செய்ய மாட்டார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இதையும் தயவுசெய்து பரிசீலிக்கவேண்டும். இன்னும் போனஸ் கொடுக்கிறோம் என்று சொல்லலாம். யாருக்கு போனஸ் கொடுக்கிறோம்? சாதாரணமாக கூட்டுறவுத் தொழில் ஏற்படும் இடத்திலே பொருளை உற்பத்தி செய்து கொடுக்கிறார்களே அவர்களுக்கு கொடுக்கிறோமேயல்லாது பணத்தை மாத்திரம் முதலீடு செய்பவர்களுக்குக் கொடுப்பது கிடையாது. டிவிடெண்ட் ஒன்றையே நம்பிக் கொண்டிருக்கின்றவர்கள், டிவிடெண்ட் அதிகரிக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே சிறு தேயிலைத் தோட்டக்காரர்களுக்கு சர்க்கார் ஒரு திட்டம் போட்டு $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்—ஒரு பாக்டரி ஏற்படுத்துவதற்காக கொடுத்திருக்கிறார்கள். அதைக் கண்டு நான் பெருமையடைகின்றேன். சிறு தேயிலை தோட்டக்காரர்களிடத்திலே ஷேர் கேட்கும்போது அவர்கள் கொடுக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு போனஸ் கிடைக்கிறது. வேறு தொழிலில் முதலீடு செய்பவர்களிடத்தில் நீங்களும் முதலீடு செய்யுங்கள் என்று கேட்டால்—ஷேர்

21st August 1961] [Sri J. Matha Gowder]

காப்பிட்டலே அதிகரிக்கவேண்டுமென்பதற்காக அவர்களிடம் கேட்டோம். சர்க்கார் ரூ. 56,000 வேண்டுமென்று கேட்டாலும், சுமார் 5 லட்சம் ரூபாயாவது வாங்கலாம் என்று அவர்களிடம் கேட்கும்போது—இதே குறையைத்தான் சொல்லுகிறார்கள். 6¼ சதவீதத்திற்கு எப்படி கொடுப்பது என்று கேட்கிறார்கள். இதை இன்னும் சற்று அதிகரித்தால் தொழில் துறையில் இருக்கும் சொஸைட்டிகள் முன்னுக்கு வர வாய்ப்பு இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தது சப்ளை அண்டு மார்க்கெட்டிங் சொஸைட்டீஸ். அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. அவர்கள் நமக்கு உரம் போன்றவைகளை சப்ளை செய்து நம் பொருள்களை மார்க்கெட்டிங் செய்கிறார்கள். இன்றைய தினம் உரத்தை எடுத்துக்கொண்டால் உரம் இல்லாமல் விவசாயிகள் விவசாயத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. உரம் இருந்தால்தான் விவசாயம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அந்த நிலையில் பார்க்கும்போது உர வினியோகம் எப்படி இருக்கிறது என்றால் கூட்டுறவுக்குக் கிடைத்திருப்பது மிக மிகக் குறைவு. தனியார் துறைக்கு அதிகமான சல்பேட் உரம் வழங்கப்படுவதால், அவர்கள் விளையக்கூடிய பொருள்களை மார்க்கெட்டிங் சொஸைடிக்கு கொண்டு வரமுடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. கூட்டுறவு சொஸைடிகளுக்குத் தேவையான அளவுக்கு இந்த சல்பேட் உரம் வழங்கப்பட்டால், அப்போது விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை மார்க்கட்டிங் சொஸைடிக்கு கொண்டுவருவதற்கு முடியும். காரணம், நாம்தான் அவர்களுக்குப் போதுமான சல்பேட் உரத்தை கூட்டுறவு சொஸைடிகள்மூலம் அவர்களுக்குக் கொடுக்கக் முடியவில்லையே ? ஆகவே இந்த சல்பேட் உரத்தை தனியார் துறைக்குக் கொடுக்கக்கூடாது, வேண்டுமானால், சொஸைடிகளுக்கு கொடுத்து, அவர்கள் தேவைக்கு மேலுள்ளதைத் தனியார் துறைக்கு கொடுத்து உதவுங்கள். அப்போதுதான் நாம் விளைபொருள்களை மார்க்கட்டிங் சொஸைடிக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய முடியும். அதுவரை தனியார் துறைக்கு சல்பேட் உரம் கொடுத்து ஊக்குவிக்கவேகூடாது என்று நான் கண்டிப்பாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி கொடுத்தால்தான், அவர்கள் கூட்டுறவு நாணயச் சங்கத்திலே வாங்கக்கூடிய கடன்களையெல்லாம்கூட, விளைபொருள்களை, சங்கத்திற்கு கொண்டுவரச்செய்து, அதன்மூலம் சரி செய்துகொள்ளக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்த முடியும். இப்போதுள்ள நிலைமையில் கூட்டுறவு சொஸைட்டிகள் விவசாயிகளுக்கு எப்படி உதவுகின்றன என்றால், அவர்களுடைய விவசாயத்திற்கு 50 மூட்டை சல்பேட் உரம் வேண்டுமென்றால், நாம் அவர்களுக்குக் கூட்டுறவு சங்கங்கள்மூலம் கொடுப்பதோ 5 மூட்டைகள் தான். பாக்கி 45 மூட்டைகளை அவர்கள் தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து வாங்கவேண்டியிருக்கிறது. இப்படி அவர்கள் தங்கள் தேவைக்குத் தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டு, விவசாயம் செய்யும்போது அவர்களை எப்படி அரசாங்கம் தங்கள் விளைபொருள்களை கூட்டுறவு சொஸைடிக்கு கொண்டுவந்து கொடுக்கும்படி நிர்ப்பந்திக்க முடியும் ? ஆகவே அவர்கள் இஷ்டப்படி வெளியில் விற்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேண்டிய உரங்களை சர்க்கார் கூட்டுறவு சொஸைடிமூலம் கொடுக்கிறோம், அதை அவர்கள் வாங்கிக்கொண்டு, தங்கள் விளைபொருள்களை கூட்டுறவு சொஸைடிக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், அதன்படி சட்டம் செய்தால்கூட அப்போது பரவாயில்லை. அதை விட்டுவிட்டு, இந்தச் சபையில் ஒரு நண்பர் கூறியதுபோல், அவர்களை கூட்டுறவு சொஸைடிக்குத்தான் கட்டாயம் தங்கள் விளைபொருள்களை கொண்டுவரும்படி சட்டம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அது எப்படிப் பொருந்தும் என்பதை அவர் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, இப்போது ஆங்காங்கு நில அடமான பாங்குகள் இருக்கின்றன. அதேபோல் அவுஸ் மார்ட்கேஜ் பாங்குகளும் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டுவருகிறது. இவைகள் எவ்வித யோசனையும் இல்லாமல் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன என்று நான் நினைக்கிறேன். ஓரிரண்டு

[Sri J. Matha Gowder] [21st August 1961

நாட்களுக்குமுன் நமது நிதி அமைச்சர் அவர்கள் கீழ்ப்பாக்கத்தில் இது சம்பந்தமான ஒரு மகாநாடு ஆரம்பித்திருக்கிறார் என்றும் நான் பார்த்தேன். இது எதற்காக என்றே எனக்கு புரியவில்லை. என்னுடைய ஜில்லாவை எடுத்துக்கொண்டால், இந்த அவுசிங் மார்ட்கேஜ் பாங்கு இது வரை அங்கு ஒன்றுகூட ஏற்படுத்தப்படவில்லை. இதற்கு உற்சாகம் கொடுக்கக்கூடியவர்கள் நகரத்தில்தான் இருக்கிறார்கள் என்று நகரத்தில் தான் இது அதிகமாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதும் எனக்குப் புரியவில்லை. அப்படி வைப்பதாக இருந்தாலும், இந்த பாங்குகளை பரவலாக எல்லா நகரங்களிலும் வைக்கவேண்டும். ஏதோ ஒரு சில இடங்களில் வைத்தால் போதும், மற்ற இடங்களில்தான் ரூரல் அவுசிங் பாங்கு இருக்கிறதே, மற்றும் பல கூட்டுறவு பாங்குகள் இருக்கின்றனவே என்று இருக்கக்கூடாது. கூட்டுறவு பாங்கில்கூட, வீட்டின்மேல் எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் கொடுக்கப்படுவதில்லை. ஒரு வீட்டிற்கு 7,500-க்கு மேல் கொடுக்கக்கூடாது என்று இருந்தது. அதை இப்போது 10,000-க்கு மேல் கொடுக்கக்கூடாது என்று உயர்த்தி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் கூடாது. எப்படி நில அடமான பாங்குகளில் நிலத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கிறதோ, அந்த அளவுக்கு பணம் கொடுக்கப்படுகிறதோ, அதேபோல் இந்த அவுசிங் பாங்குகளிலும் வீட்டின் மதிப்பு எவ்வளவு இருக்கிறதோ, அதற்கு எந்த சதவிகிதத்தில் பணம் கொடுக்கலாமோ, அந்த விதத்தில் கணக்கிட்டுப் பணம் கொடுக்கவேண்டும். வீட்டின் மதிப்பு ஒரு லட்சமாக இருந்தாலும், அந்த அடிப்படையில் பணம் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கப்படும் பணத்தை 20 வருஷத் தவணையில் வாங்கிக்கொள்ளக்கூடிய முறையில் அமைக்கவேண்டும். அப்போதுதான் நகரங்களிலே இருக்கக்கூடிய சிறு சிறு கூரை வீடுகள் எல்லாம் நல்ல முறையில் பெரிய வீடுகளாகக் கட்டுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். இந்த முறையில் இதை திருத்தியமைத்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன். புது வீடுகள் கட்டிக்கொள்வதற்காகத்தான் பில்டிங் சொஸைடிகள் இருக்கின்றனவே என்று நினைக்கக்கூடாது. புதிதாக வீடுகள் கட்டிக் கொள்வதற்காகத்தான் பில்டிங் சொஸைடிகள் பயன்படும். ஒருவன் தனக்கு பரம்பரை பரம்பரையாக வந்துள்ள ஒரு சொத்தை அதாவது வீட்டை நல்ல முறையில் புதுப்பிக்க வேண்டுமென்று நினைத்தால், அதற்கு இந்த பில்டிங் சொஸைடி பயன்படாது. தவிர, எங்கு பார்த்தாலும் நகரத்தில் முன்பிருந்ததைப்போன்ற ஓட்டு வீடுகளையும், சிறு சிறு வீடுகளையும்தான் எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். காரணம், அதை திருத்தி ரி மாடல் செய்வதற்கான பண வசதி அவனிடம் இல்லாததே ஆகும். ஆகவே இம்மாதிரியான பாங்குகளை நகரங்களிலே பரவலாக ஏற்படுத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவுப் பண்ணைகளை எடுத்துக்கொண்டால், அதிலே ஒன்று தனியார் வைத்திருக்கக்கூடிய நிலங்களை எல்லாம் அதாவது 5 ஏக்கர் அல்லது அதற்கு மேல் இருந்தாலும் அவர்களை ஒன்றுசேர்த்து இப்போது நாம் கூட்டுறவு சொஸைடிகள் அமைத்திருக்கிறோம். அப்படி சொந்த நிலங்களை வைத்துக்கொண்டு இந்த சொஸைடியில் சேர்கிறவர்கள், ஐந்து வருஷத்திற்கு அதை விட்டுப் போகக்கூடாது என்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அது நல்ல சட்டம். ஆனால் அதே நேரத்தில், இந்த சர்க்கார் நிலம் கொடுத்து, அந்த நிலத்தை வாங்கி, இந்த நிலத்திலே கூட்டுறவு பண்ணை ஏற்படுத்தி இருக்கக் கூடியவர்களுக்கு ஒருசில விதிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது என்றால், பாரஸ்ட் இலாகா போடக்கூடிய நிபந்தனையாக இருக்கிறது. பெரும்பாலும் இப்போது இதற்கான நிலங்களையெல்லாம் பாரஸ்ட் டிபார்ட்மெண்டார்தான் கொடுக்கிறார்கள். அப்படி பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டார் கொடுத்த நிலத்தை கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாகப் பாடுபட்டு, கல்லம்பாளையம் கூட்டுறவு பண்ணை என்ற ஒரு சொஸைடியை நான் ஏற்படுத்தினேன். அது ஏற்பட்டு ரிஜிஸ்தரும் ஆகி ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இப்போது ஒரு ஜி.ஓ. சர்க்காரிலிருந்து பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதிலே

21st August 1961] [Sri J. Matha Gowder]

என்ன குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், இந்த கூட்டுறவு பண்ணையிலே யார் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் மலைவாசிகளுக்குத்தான் அதனுடைய பலன்கள் கொடுக்கப்படும். என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மீதி இருக்ககூடியவர்களுக்கு எந்தவித பலனும் கிடையாது என்று சொன்னால், அதிலே அவர்கள் எப்படி தங்கள் அக்கறையை செலுத்த முடியும் என்பதைச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். மலைவாசி களுக்கு இதன் பலன் கொடுக்கவேண்டுமென்று சொல்வது என்னமோ சிறந்ததாக இருக்கலாம். ஆனால் மற்ற அங்கத்தினர்களுக்கு இதிலே எவ்வித பலனும் இல்லை என்று சொன்னால், கூட்டுறவு பண்ணை எப்படி நடக்குமென்பதைச் சற்று கவனிக்கவேண்டும். ஆகவே இது சாத்தியப் படுமா என்று கவனிக்கவேண்டும். நடைமுறையில் இது சாத்தியப்படவே முடியாது. ஆகவே இதிலே 25 சதவிகிதமாவது யார் வேண்டுமானாலும் சேரலாம். அப்படிச் சேரக் கூடியவர்களுக்கும் இதன் பலன் உண்டு என்று சொன்னால், அது நடைமுறையில் சாத்தியப்படும், இப்படிப் போட்டால் என்ன கெட்டுப்போகும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு பலனும் உங்களுக்குக் கிடையாது, ஆனால் நீங்கள் பண்ணையை நடத்துங்கள் என்று சொன்னால் யார்தான் முன்னுக்கு வருவார்கள். யாரும் வர மாட்டார்கள். ஆகவே இந்த பண்ணை ரிஜிஸ்ஸ்தர் செய்யப்பட்டு ஒரு ஆண்டு காலமாகியும் அது செயல்படாமல் தூங்கிக்கொண்டு வருகிறது. இந்த உத் திரவை கூட்டுறவு இலாகா போடுவதில்லை. பாரஸ்ட் டிபார்ட்மெண்டு தான் போட்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்த நிலங்களை நாங்கள் மலைவாசிகளுக்கு கொடுக்கிறோம், ஆகவே அவர்கள் தான் அதன் பலனை அடையவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே தான் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு உத்திரவை எழுதியிருக்கிறார்கள். இந்த பாரஸ்ட் இலாகா தாங்கள் நிலங்களை கொடுப்பதோடு மட்டும் நின்றுவிட வேண்டும். அதற்குமேல் கூட்டுறவு சட்டத்திலே எல்லாம் அவர்கள் தலையிடக் கூடாது என்று நான் நினைக்கிறேன். அது சம்பந்தப்பட்ட உத்திரவுகளை எல் லாம் டிப்டி ரிஜிஸ்திரார், அங்குள்ள கலெக்டர் அவர்கள் மூலம் தீர்க்கப்பட்டு, மாகாண ரிஜிஸ்திராரின் அங்கீகாரம் பெற்று அவர்கள் ஒப்புகொண்ட அளவிலே சட்டங்கள் செய்யப்பட வேண்டும். வேறு துறையினர் இதிலே குறுக்கிடவே கூடாது. ஆகவே இந்த கஷ்டங்களை எல்லாம் புரிந்துகொண்டு, அதற்கான முறையில் கூட்டுறவு இலாகாவினர் ஒரு ஜி. ஓ. தவறுகளை நீக்கி வெளியிடும்படி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கங்கள் என்னும்போது நாம் அதற்காக முதலில் டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். இதிலே எனது சொந்தக் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். கூட்டுறவு சொஸைடிகள் என்று சொல்லும் போது, வில்லேஜ் கிரேடிட் சொஸைடிகள் போன்ற சிறிய சொஸைடிகளை விட்டுவிட்டு, ஜில்லா அளவிலே உள்ள அல்லது இண்டஸ்ட்ரியல் கூட்டுறவு சொஸைடி போன்ற பெரிய அளவில் உள்ள சொஸைடிகளை எடுத்துக் கொண்டால், அதற்கான டைரக்டர்களை பாலட் வைத்து தேர்ந்தெடுத்தாலும் கூட, குறைந்தது சில சதவிகிதத்திற்கு அல்லது 2 டைரக்டர்களை சர்க்காரே நாமினேட் செய்யக்கூடிய முறையில் சர்க்கார் தங்களிடத்தில் அதிகாரத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். அதாவது ஒரு சொஸைடிக்கு, 11 டைரக்டர்கள் இருக்கவேண்டுமென்று இருந்தால், 9 டைரக்டர்கள் தேர்தல் மூலமாகவும், மற்ற இரண்டு டைரக்டர்களை நாமினேஷன் மூலமாகவும் தேர்ந்தேடுக்கப்பட வேண்டும். இந்த 2 டைரக்டர்கள் சர்க்காரின் பிரதிநிதிகளாக இருந்து, அந்த சொஸைடியில் மற்ற டைரக்டர்களால் மறைமுகமாக ஏதாவது செய்யப்பட்டால், அதுபற்றிய ரிப்போர்ட்டை அவர்கள் சர்க்காருக்குச் சமர்ப்பிப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே இப்படி 2 டைரக்டர்களை சர்க்கார் நாமினேட் பண்ணுவது அவசிய மென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்போது தான் மக்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்படும் இவ்வித சொஸைடிகள், இப்படி நியமிக்கப்படும் இருவரால் நல்லமுறையில் கண்காணிக்கப்பட்டு, நாம் நினைகக் கூடிய நல்ல நோக்கத்தோடு செயல்பட முடியும். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் அவசியம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்

[Sri J. Matha Gowder] [21st August 1961

கொள்கிறேன். கடன் கொடுக்கும்பொழுது கூட்டுறவு இலாகாவில் நாம் ஒரு சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறோம். எல்லா கடன்களையும் ஜுன் 30-ம் தேதி திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது அசந்தர்ப்பம் ஏற்பட்டால், உதாரணமாக ஒரு பகுதியில் பஞ்சம் ஏற்பட்டால், அல்லது வேறு ஏதாவது காரணத்தினால் சேதம் ஏற்பட்டால், அந்தக் காலத்தில் கூட என்ன சொல்லுகிறார்கள் என்று சொன்னால், எக்கேடு கெட்டாலும் ஜுன் 30-ம் தேதியன்று சென்டிரல் பாங்கு கடனை தீர்த்துவிடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இருக்கிறார்கள். ஜில்லா அளவிலே மாவட்ட பாங்குகளை கடனை அடைக்க முடியாத நிலை இருக்கிறதே என்று கேட்டால், அவர்கள் ஏ கிளாஸ் பாங்கிலிருந்து பி கிளாஸ், ஸி கிளாஸ், டி கிளாஸ், பாங்காக ஆகிவிடுமே என்கிறார்கள். எப்படியும் ஏ கிளாஸ் பாங்காக இருக்கவேண்டுமென்று ஒரே நோக்கத்தோடு இருக்கிறார்கள். உதாரணமாக நீலகிரியில் ஜுன் மாதம் எந்த வருஷத்திலும் எல்லாக் கடன்களையும் தீர்த்து விட்டிருக்கிறோம். ஆனால், இந்த வருஷம் உருளைக் கிழங்குக்கு நோய் வந்துவிட்டதால், அவர்கள் சாப்பிடுவதற்குக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் இந்த வருஷத்தில் அவர்கள் எப்படி ஜுன் மாதத்தில் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியும்? இந்த வருஷம் கொடுக்க முடியாது என்ற நிலையை அமைச்சர் அவர்களிடத்தில் தனியாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். அந்தக் கடன்களை 3 வருஷக் கடனாகவோ அல்லது 5 வருஷக் கடனாகவோ, அதாவது "ஷார்ட் டேர்ம் லோனை" "இன்டரிம் டெர்ம் லோனாகவோ" அல்லது "லாங் டேர்ம் லோனாகவோ" கன்வெர்ட்டு செய்வதற்கு எந்த விதத்திலும் தயக்கம் இல்லை என்று சொல்லியிருக்கிறோம். இதனால் ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அசந்தர்ப்பமான காலங்களில் கூட ஜுன் மாதம் 30-ம் தேதிக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவது மிகவும் சங்கடமான நிலையை உண்டாக்குகிறது. ரிசர்வ் பாங்கு அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள். எப்படியும் 30-ம் தேதி கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு சட்டத்தின் நிலையையே நோக்கமாகக் கொண்டிருந்தால் என்ன செய்வது? மக்களுடைய நிலையை எப்படி ரிசர்வ் பாங்கு அறிவதற்கு முடியும்? ஒரு வட்டாரத்தில், ஒரு ஜில்லாவில் இம்மாதிரி ஏதாவது அசந்தர்ப்பமான காரணங்களினால் மக்கள் ஜுன் மாத இறுதிக்குள் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாவிட்டால், பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து வசூலை நிறுத்திவைக்க முடியும் என்று சொல்லுவதற்கு ரிசர்வ் பாங்கு தயங்குகிறார்கள் என்பது மிக வருந்தக்கூடிய விஷயம். அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி சற்று யோசிக்கவேண்டும். வேறு துறைகளில் அவசியமானபோது கடன் வசூலை நிறுத்திவிடுகிறார்கள். கடன் நிவாரண சட்டத்தை இந்த சட்டமன்றம் இயற்றியிருக்கிறது. வெளியிலிருந்து வாங்கிய கடனை வசூல் செய்வதை நிறுத்தி வைக்கும்போது, சர்க்கார் கடன் வசூலை மாத்திரம் இம்மாதிரி அசந்தர்ப்பமான காலத்தில் நிறுத்தி வைப்பதில் என்ன தயக்கம்? இதனால் கூட்டுறவு முறையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ரிசர்வ் பாங்கு ஒரே நோக்கத்தோடு இருக்கிறது. இந்த சிக்கலை தீர்த்துவைப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகைகள் காணவேண்டும். சர்க்கார் ரிசர்வ் பாங்கோடு இது பற்றி பரிசீலனை செய்து எந்த மாவட்டத்திலும் அசந்தர்ப்பமான காலத்தில்கூட கடன்களை ஜுன் மாதம் 30-ம் தேதிக்குள் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை நீக்கி, அம்மாதிரி கடன் வசூலை நிறுத்திவைப்பதற்கு என்ன வழிவகைகள் உண்டோ அவைகளைச் செய்து, இந்த ஒரு சிக்கலை தீர்த்து வைக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*SRI M. SELVARAJ : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மசோதாவைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மசோதா கொண்டுவருகிற பொழுது, இந்த மசோதாவினுடைய நோக்கத்தை விளக்கி அமைச்சர் அவர்கள் வெகு அழகாக பேசினார்கள். முக்கியமாக நாம் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்

டிருந்தது போன்று, பொது மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போன்று பெரிய திருத்தம் ஒன்று இந்த மசோதாவில் கொண்டுவரப் படவில்லை. அதன் காரணமாக ஏழை எளியவர்கள், தொண்டு உள்ளம் படைத்தவர்கள் கூட்டுறவு சங்கங்களில் ஈடுபடுவதற்கு வேண்டிய வாய்ப்புகள், வசதிகள் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். இந்த மசோதா பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்குப் போகும்பொழுது இந்த மாமன்றத்தில் இந்த மசோதாவை எதிர்த்து பேசியவர்களுக்கு தக்க பதிலையும், விளக்கத்தையும் கொடுத்து எப்படியும் இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்றுவது உறுதி என்ற முறையில் அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள், அன்றையதினம். ஆனால், இன்றைய தினம் பார்க்கும் பொழுது அந்தப் பிரிவு நீக்கப்பட்டு இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்பொழுது கூட்டுறவு முறையில் கூட்டுறவு சங்கங்களிலும் கூட்டுறவு பாங்குகளிலும் யார் யார் இன்றைய தினம் பரம்பரையாக சர்வாதிகாரம் செலுத்திக்கொண்டு வருகிறார்களோ அவர்கள் மேலும் தங்களுடைய சர்வாதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்வதற்கு வேண்டி இந்த மசோதா இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. இதனுடைய உள்நோக்கம் வர இருக்கிற தேர்தலை ஒட்டித்தான் ஓரளவுக்கு இந்த மசோதா இங்கே ஒப்புக்கொள்ளப்பட்டதோ என்று நாம் சந்தேகப்படவேண்டிய நிலையில் இருக்கிறது. அழுத்தம் திருத்தமாக இந்த இலாக்கா அமைச்சர் இந்தப் பிரிவு இருக்கவேண்டும் என்று சொல்லி, அதை எடுக்கவேண்டுமென்ற விருப்பத்திற்கு அன்றைய தினம் இணங்கவில்லை. இதுபற்றி காரசாரமான விவாதம் நடந்தது. அப்படியிருக்கையில் இறுதியாக எப்படி மனது வந்து இந்தப் பிரிவை நீக்கிவிட அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. எதற்காக நாம் இந்த மசோதாவை கொண்டுவந்திருக்கிறோம் என்றால், பழைய காலம் தொட்டு இருக்கிற கூட்டுறவு சட்டத்தை திருத்தி பரவலாக எல்லோரும் கூட்டுறவு சங்கங்களில் தொடர்பு கொண்டு நல்ல முறையில் பணியாற்றவேண்டும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்திய துணைக் கண்டம் பூராவும் கூட்டுறவு முறையில், கூட்டுறவு சங்கங்களில் ஒவ்வொரு கிராமவாசியும் பங்குகொண்டு அதன் பலனை அடையவேண்டும் என்ற நோக்கத்தில்தான். அதற்காக நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சில் போன்ற பெரிய அரங்குகளிலெல்லாம் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால், எப்படி பல கிராமங்கள் இதிலே பங்குகொள்ள முடியும் என்ற அச்சத்தை நாம் இன்றையதினம் பார்க்கிறோம். இந்த முக்கியமான பிரிவு நீக்கப்பட்டு இந்த மசோதா இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற நிலையில் இருக்கிறோம். அதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இறுதியாக இந்த மசோதா சட்டம் ஆக்கப்படும்போதாவது இந்த 28(1)(ஜி) பிரிவை மறுபடியும் இதில் சேர்க்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், ஏற்கனவே இருக்கிற சட்டத்தில் பரவலாக அங்கத்தினர்கள் சேர்க்கின்ற முறையிலே பல குறைபாடுகள் இருந்ததை ஓரளவுக்கு இந்த மசோதாவில் நீக்கியிருந்தாலும், விண்ணப்பங்களின்மேல் மேற்கொண்டு அப்பீல்கள் ஏற்படுத்துவதால், அதிகாரிகளுக்கு மேலும் மேலும் வேலை இருக்குமே ஒழிய, யார் யார் அந்த சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து பணியாற்றவேண்டும் என்ற நிலைமைக்கு இடம் கொடுக்காமல் இருக்கும் நிலைமையை நாம் பார்க்கிறோம். அதை மறுபரிசீலனை செய்து அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், இன்றையதினம் இருக்கிற கூட்டுறவு நில அடமான பாங்குகள் நிலங்களின் கிரயத்தை நிர்ணயம் செய்யும்பொழுது, "வால்யுவேஷன்" "பிக்ஸ்" செய்கிறபொழுது, 10, 15 வருஷங்களுக்கு முன்னால் இருந்த கிரயத்தை வைத்துத்தான் கடன் கொடுக்கிறார்கள். ஆனால், சர்க்கார் நில ஆர்ஜித சட்டப்படி நிலம் எடுத்தால், நிலம் எடுக்கிற தினத்தில் உள்ள நிலவரத்தை ஒட்டி அந்த கிரயத்திற்கு நிலம் எடுக்கும்

[Sri M. Selvaraj] [21st August 1961

நிலைமையைப்போல், நில அடமான பாங்குகளும் செய்யவேண்டும். கடன் கொடுக்கிற தேதியன்று இருக்கிற விலை நிலவரப்படி, அதற்குத் தகுந்தபடி எந்த அளவுக்கு கடன் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு "நில அடமான பாங்குகள் கடன் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது கிராமங்களிலுள்ள சில கூட்டுறவு சங்கங்களுக்கு உர விநியோகத்தை சில மாவட்டங்களில் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு உரங்களை நேரடியாக விநியோகிப்பதற்கு வேண்டிய வழிவகை கிடையாது. ரெவின்யூ அதிகாரியிடத்தில் நெருங்கி, அவரிடமிருந்து ஒரு பெர்மிட் வாங்கி, அதற்குப் பிறகுதான் கொடுக்கவேண்டுமென்ற நிலைமை வைத்திருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் இருக்கிற கூட்டுறவு சங்கத்தில் உள்ளவர்கள் அந்த கிராமத்தில் யாருக்கு நிலங்கள் இருக்கின்றன, அவர்களுக்கு உரம் தேவை தானா, அது நல்ல முறையிலே பயன்படுத்தப்படுமா என்று அவர்கள் ஓரளவுக்குப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள்.

(Deputy Speaker in the chair.)

ரெவின்யூ அதிகாரிகளிடத்தில் விவசாயிகள் செல்லவேண்டியிருப்பதின் காரணமாக, ரெவின்யூ அதிகாரிகள் தாலூகாக்களில் சுற்றுப் பிரயாணம் வரும்பொழுது அவர்களை அணுகவேண்டியிருக்கிறது. ஒருவருக்கு 10 படி அமோனியா வேண்டுமென்றால், 2, 3 நாட்களுக்குப் பிறகுதான் கிடைக்கிறது. அந்த அளவுக்கு விவசாயிக்கு செலவும் அலைச்சலும் ஏற்படுகிறது. இதை மாற்றி அமைக்க வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி, அதாவது மானேஜிங் கமிட்டியில் தொடர்ந்து 2 தடவைகள் இருந்தவர்கள் மேற்கொண்டு அதில் அங்கம் வகிக்க முடியாத நிலைமைக்கு இந்த மசோதாவை இறுதியாக திருத்தி அமைக்கவேண்டுமென்று மறுமுறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

12 noon.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு மசோதா மிகப் புரட்சிகரமாக, சோஷலிச சமுதாயத்திற்கு ஏற்ற முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. அதைப் பாராட்ட வேண்டும். மூன்றாவது திட்டத்திலே, கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், கூட்டுறவு இயக்கம் எவ்வளவுக்கெவ்வளவு முன்னேற்றம் அடையலாமோ அவ்வளவு முன்னேற்றத்திற்கு அடிகோலும் முறையில், சாதாரண மக்களும் பங்கு கொண்டு, பொறுப்பு வகிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் இது வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் கூட்டுறவு இயக்கத்திற்கென்று கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா அவசியம் மாத்திரமல்ல, அவசரமும்கூட என்று சொல்லலாம். இந்த மசோதாவில், அமைச்சரவர்களும் புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டு வந்து, பொறுக்குக் கமிட்டியும் தீவிரமான கவனம் செலுத்தி, செய்திருக்கும் பகுதிகளைப் பார்க்கும்போது, அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் வேண்டிய கவனம் செலுத்தியிருக்கிறார்கள், தங்களால் இயன்ற அளவு அதைத் திருத்தியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த மசோதாவில் அவ்வளவு கவனம் செலுத்தியும், எவ்வளவுக் கெவ்வளவு உத்தியோகப் பற்றற்றவர்களைப் போடவேண்டும் என்று முயற்சிகள் எடுக்கப்பட்டன என்ற அடிப்படையில் நோக்கும்போது, ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அது சரியா என்ற சந்தேகம் எழத்தான் செய்கிறது. ஒருவன் விவசாயியா, இல்லையா, ஒருவனுக்கு மெம்பர்ஷிப் கொடுக்கலாமா, கூடாதா, அவரைச் சேர்க்கலாமா, சேர்க்கக்கூடாதா, இன்னும் அதேபோன்று, பை-லாவி

21st August 1961] [Srimathi T. N. Anandanayaki]

அமெண்மெண்ட் செய்யவேண்டுமா அல்லது செய்ய வேண்டாமா என்பதையெல்லாம் தீர்மானிப்பதையும், அப்படியே அமெண்மெண்ட் வேண்டுமென்றால், அவரே ஒரு உத்தரவு போட்டு அதைச் சேர்க்கலாம் என்பதையெல்லாம் பார்த்தால், ரெஜிஸ்ட்ராருக்கு ஓரளவுக்கு அதிகமாகவே அதிகாரம் கொடுத்துவிடக்கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது. நல்ல ரெஜிஸ்ட்ராராக அமைந்து விட்டால் கட்டாயம் அவையெல்லாம் நல்ல முறையிலே நடைபெறும் என்பதில் சந்தேகம் இல்லை. பத்துப் பேர்கள் சேர்ந்து செய்வதைக் காட்டிலும், ஒருவர் செய்வது துரிதமாகவும் செவ்வையாகவும் நடக்கும் என்பது உண்மைதான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, ஒரு கெட்ட ரெஜிஸ்ட்ரார் வந்து விட்டால், அவரோடு முட்டிக்கொண்டு காரியங்கள் செய்வதென்பது இயலாததாக முடியும். அதன் மூலம் கூட்டுறவு இயக்கமே கெட்டுப்போய்விடும் என்பது நிச்சயம். ஆகவே அதிகாரியின் தன்மையைப் பொறுத்திருக்கிறது இயக்கம் நல்ல முறையில் நடக்குமா, நடக்காதா என்பது. நல்ல எண்ணத்தோடு, மக்கள் பிரதிநிதிகள் கஷ்டங்களை அறிந்து, ஊரில் இருப்பவர்களின், பொது மக்களின் நோக்கத்தை தெரிந்துகொண்டு சீர்திருத்தங்கள் செய்பவராக இருந்தால், கூட்டுறவு இயக்கம் நல்ல முறையிலே நடக்கும். இன்றைக்கு அதிகாரிகளை வைத்துச் சொல்லவில்லை. ஒரு சமயத்தில் கெட்டவர்களாக வந்துவிட்டால், இயக்கமே பாதிக்கப்படும் என்பதை நாம் மறக்கக் கூடாது. சில அதிகாரிகள் சிற்சில சமயங்களில், வேண்டுமென்றே, அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே தாங்கலை ஏற்படுத்தவென்று, கெட்ட பெயரை சர்க்காருக்கு வாங்கித்தர வேண்டுமென்று காரியங்களைச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரியாக வந்து விட்டால், இவ்வளவு அதிகாரத்தையும் கையில் வைத்துக் கொண்டு, என்ன என்ன செய்வார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அப்படி அவர்கள் நல்லபடியாகச் செய்யமாட்டார்கள் என்ற நிலையில் இவ்வளவு அதிகாரத்தையும் அவர்களிடம் கொடுக்காமல் இருப்பது வரவேற்கத்தக்கதா என்று சிந்திக்க வேண்டும்.

இன்னும் இதே போன்று உத்தியோகப் பற்றற்றவர்கள் இந்த இயக்கத்தில் இருப்பதில், ஒரு சிலர் அதைத் தங்கள் சொந்த பொறுப்பாக மாற்றி, தங்கள் சொந்த ப்ராபர்ட்டியாக நினைத்து ஒரு குட்டி அரசாங்கமே நடத்துகிறார்கள். ஆகவே, இந்த மசோதாவில், யாரும் ஐந்து சங்கங்களுக்கு மேற்பட்ட சங்கங்களில் அதிகாரம் உள்ளவர்களாக இருக்கக் கூடாது என்ற வரையறை மிக மிக வரவேற்கத் தக்கது. என் போன்ற இளைஞர்கள் இதுவரை இந்த கூட்டுறவு இயக்கத்திலேயே காலைக்கூட வைத்துப் பார்க்காதவர்களும் உள்ளே புக ஒரு வாய்ப்பு இருக்கும் என்று அதை நான் வரவேற்கிறேன். மேலும், இன்று வரை இந்த கூட்டுறவு இயக்கத்தில் பெண்கள் அதிகம் இல்லை. அர்பன் சொசைடிகள், மாவட்ட சொசைடிகள் போன்றவைகளில் பெண்களையும் கோ-ஆப்ட் செய்ய அதிகாரம் கொடுக்கப்படுமேயானால் அது ரொம்ப வரவேற்கத் தக்கதாக இருக்கும். ஆண்களைக் காட்டிலும், பெண்கள் அதிகமாக உண்மையாக உழைப்பார்கள். அவர்களுக்கு நேரமும் அதிகமாக இருக்கிறது. ஐந்து சங்கங்களுக்கு மேற்பட்ட சங்கங்களில் அதிகாரம் வகிக்கக்கூடாது என்று சொல்லும்போதே, பெண்களுக்கும் சம வாய்ப்பு இருக்க வேண்டும் என்று செய்தால் நலமாக இருக்கும். வோட்டுப் பெற்று பெண்களும் உள்ளே வருவது என்பது இன்னும் வெகுநாளைக்கு முடியாத காரியம். ஆகவே. அரசாங்கமே அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களிலும், ஆண்களைப் போல் பெண்களையும் சம எண்ணிக்கையில் கோ-ஆப்ட் செய்துகொள்ளக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினால், அது மிக மிக வரவேற்கத்தக்கதாக இருக்கும்; அதற்காகப் பெண் குலத்தின் சார்பாக இப்பொழுதே நான் நன்றி செலுத்துகிறேன்.

ஐந்து சொசைடிகள் என்று வரையறுத்த அதே சமயத்தில், கிளாஸ் 28 (1) (ஜி) யிருந்ததை எடுத்ததற்காக "டிஸ்ஸெண்டிங்" நோட்ஸைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது. அங்கத்தினர்கள் திரும்பத்

[Srimathi T. N. Anandanayaki] [21st August 1961

திரும்ப அப்படிப்பட்டவர்களை வெளியேற்ற வேண்டும் என்று சொல்வது அவ்வளவு சரியா என்று சிந்திக்க வேண்டும். பரீட்சார்த்தமாக, புரட்சிகரமாகச் செய்யப்படும்போது பொருத்துத்தான் செய்ய வேண்டும். பொறுக்குக் கமிட்டியும் அதை நன்ருக ஆலோசித்துத்தான் செய்திருக்கிறது என்று நினைக்கிறேன். எடுத்த அந்த கிளாசுக்குப் பதிலாக, ஒரு சிறு திருத்தமும் செய்திருக்கிருர்கள். மூன்றிலே ஒரு பங்கு வருஷா வருஷம் ரிடைர் ஆகவேண்டும் என்பதுதான் அது. அதை என் நான் சுட்டிக் காட்டுகிறேன் என்ருல், கூட்டுறவு இயக்கத்தில் புகுந்து, அமுல் நடத்தி, அனுபவம் பெற்றவர்கள் திறமையான நிர்வாகத்தை நடத்தியவர்கள், இரண்டு டர்ம்ஸ்க்கு மேலே மூன்ரும் தரம் வரக்கூடாது, வீட்டுக்குப் போகவேண்டும் என்பது, அனுபவம் பெற்றவர்களை இழப்பதாக முடியும். சாதாரணமாக அனுபவம் பெறமுடியாது, அனுபவம் பெறுவது கஷ்டம். அவர்கள் இரண்டு தடவை இருக்கும் போது, சிக்கல்களைப் புரிந்துகொண்டு, அமுல் நடத்தவே இரண்டு ஆண்டுகள் ஆகிவிடும். அதற்குமேல் அவருடைய திருத்தங்களை அமுல் நடத்த அவருக்குச் சிலகாலம் ஆகும். அப்படியில்லாமல், அவரை வீட்டுக்கு அனுப்பி விடுங்கள் என்ருல், அது காசைப் போட்டு ராஜாவா, பூவா என்று பார்ப்பதுபோல், இன்றைக்கு நீ, நாளைக்கு நான் என்று சொல்லி, அப்படி சட்டத்தை அமைக்கவேண்டும்; அப்படியில்லாததால், இந்த மசோதா உதவாக்கரைச் சட்டம் என்று "டிஸ்ஸெண்டிங்" நோட்ஸ் கொடுத்திருக்கிருர்கள். நான் நினைக்கிறேன், அப்படிக் கொடுத்திருப்பவர்கள், கூட்டுறவு இயக்கத்தில் இவ்வளவு காலமும் அங்கம் வகித்திருந்தால், அவர்களுடைய எண்ணமும் மாறியிருக்கும் என்று நினைக்கிறேன். அனுபவம் பெற்றவர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்; ஏனெனில் அவர்களுக்கு நல்ல நிர்வாகப் பயிற்சி இருக்கிறது, நல்ல திறமை இருக்கிறது. ஆகவே, அவர்கள் இரண்டு மூன்று இருந்தாகி விட்டது, மூன்ருவது முறை அவர்கள் அனுபவம், திறமை எல்லாம் தேவையில்லை என்பது, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், அவர்களுக்காக உழைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்ததாகாது. அப்படி அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது, அந்த ஷரத்தை எடுத்துவிட்டதால், இந்த மசோதா உதவாக்கரை என்று சொல்வது நல்லதல்ல. நிர்வாகத்தில் அடிபட்டவர்களுக்குத்தான் தெரியும் அனுபவமும், திறமையும் எவ்வளவு தேவை என்று. ஆகவே, கனம் அமைச்சரவர்களும், பொறுக்குக் கமிட்டியும் நல்ல சூழ்நிலையையே ஏற்படுத்தி இருக்கிருர்கள்; அது மிகவும் வரவேற்கத்தக்கது. அதற்குப் பதிலாக, மூன்றில் ஒரு பங்கு ரிடையர் ஆகவேண்டும் என்ற விதியையும் போட்டிருக்கிருர்கள். ஒருவர் இரண்டு வருஷங்கள் ஒரு சொசைடியில் இருந்திருக்கிருர் என்ருல், அவருக்குச் செல்வாக்கும், அனுபவமும் வந்திருக்கிற அவரை வீட்டுக்குப் போக வேண்டும், அவரது திறமை வேண்டியது இல்லை என்பது மக்கள் மேல் உள்ள நல்ல எண்ணம் என்று சொல்ல முடியாது. ஆகவே, அமைச்சரவர்களும், பொறுக்குக் கமிட்டியும் கொண்டு வந்துள்ள இந்த திருத்தம் மிக்க வரவேற்கத்தக்கது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒரு வரவேற்கத்தக்க அம்சம் இதில் என்னவென்ருல், கூட்டுறவு ட்ரைப்யூனல்கள். இதில் நிறையத் தொந்தரவுகள் இருக்கும், சொசைடிகள் சம்பந்தமாக காரியங்கள் மிக்க சிக்கல் உள்ளவை. ஆகவே, "not below the rank of a Sub-Registrar" என்று போட்டிருப்பது, ஓரளவுக்குச் சட்டம் தெரிந்தவர்கள், சட்ட நுணுக்கங்களைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் ட்ரைப்யூனல் தலைமை இடத்திற்கு வருவது மிகவும் வரவேற்கத்தக்கது. இதைச் சட்டபூர்வமாக அமுல் நடத்துவதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது; ஆகவே, அந்த வகையில் ட்ரைப்யூனல்கள் கொண்டு வந்திருப்பது மிகச் சிறந்த அம்சம். ட்ரைப்யூனல் இருப்பதுதான் பல சிக்கல்களைத் தீர்க்க நல்ல மருந்தாக இருக்கும். கூட்டுறவு சட்டத்தில் பல சிக்கல்கள் ஏற்படும். ரெஜிஸ்ட்ராருக்குப் போகவேண்டும், கவர்ன்மெண்டுக்குப் போகவேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. இவற்றையெல்லாம் சட்டபூர்வமாக அமுல்

21st August 1961] [Srimathi T. N. Anandanayaki]

நடத்த பல கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும். கடன் தொகைகள் கொடுப்பதில், எலெக்ஷன் நடப்பது போன்றவைகளில் எத்தனேயோ சிக்கல்கள் ஏற்படக் காரணங்கள் இருக்கின்றன. அப்படிச் சிக்கல்கள் பல ஏற்படுகின்றன. அதற்கெல்லாம் ட்ரைப்யூனல்களைப் போட்டு, அதன் தலைமைக்கு ஒரு சட்ட நிபுணரையும் போடுவது, சட்டத்தை அமுல் நடத்துவதில் நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தும். அந்த அம்சம் மிகவும் வரவேற்கத்தக்கது.

அதே சமயத்தில், கிளாஸ் 7-ல் ஒரு மனிதன் விவசாயியா அல்லது இல்லையா, அவன் அந்த ஊர்க்காரனா இல்லையா என்பது போன்றவை களில் ரெஜிஸ்ட்ராரே முடிவு செய்யலாம் என்றிருந்தால் நலமாக இருக் குமா என்று சிந்திக்க வேண்டும். இல்லாமல், இம்மாதிரியான சின்ன விஷயங்களுக்குக்கூட அப்பீல் என்று வைத்தால், ட்ரைப்யூனலில் வேலை அதிகரிக்கும், வேதனையும் ஏற்படும். ட்ரைப்யூனலுக்குப் போய், வக்கீல் வைத்து, விவசாயியா, இல்லையா என்று முடிவு காணவேண்டுமென்றால், அவர்களுக்கு அனாவசியச் செலவும் சங்கடமும்தான் ஏற்படும். அதை யெல்லாம் ரெஜிஸ்ட்ராரோடு நிறுத்துவதுதான் நல்லது. இதெல்லாம் சின்ன விஷயங்கள் "agriculturist or non-agriculturist" என்று தீர்மானிப்பது. ஆகவே, அவற்றையெல்லாம் அப்பீலுக்குக் கொண்டுவரா மல், கிளாஸ் 7-ல், "The Registrar's decision shall be final" என்று போட்டுவிட்டால் மிக்கச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்தபடியாக, விதிகளைப் போடுவதற்கான அதிகாரம் சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டத்துக்குள்ளேயே இவைகளையெல்லாம் கொண்டுவந்துவிட்டால் நன்றாக இருக்கும். 119-வது கிளாசிலே (a) முதல் (h) வரையிலும் உட்பிரிவுகள் இருக்கின்றன. இவ்வளவு ரூல்களையும் அரசாங்கமே கையில் வைத்துக்கொண்டு, இஷ்டப்படி ரூல்கள் செய்து அதன்படி நடக்க வேண்டும் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. இன்னும் சில முக்கியமான அம்சங்களைச் சட்டத்தின் அடிப்படையிலேயே கொண்டுவந்து, ரூல்கள் போடும் அதிகாரத்தை சர்க்கார் குறைந்த அள விலே வைத்திருந்தார்களேயானால், இந்த மசோதா மிகச் சிறந்ததாக இருக்கும். சில உதாரணங்களைக் கொடுக்க விரும்புகிறேன். 119-வது கிளாசில் (g)-ல் உள்ள அதிகாரத்தை சட்டத்திலேயே கொண்டுவந்து இருக்கலாம். இவைகளுக்கெல்லாம் ரூல்கள் போடுவதற்கு எவ்வளவோ நாட்களாகும். எத்தனேயோ சட்டங்களுக்கு இன்னும் ரூல்கள் வரக் காணோம். மோட்டார் வெகிக்கிள் சட்டத்திற்கு இன்னும் ரூல்கள் வரவில்லை. இருக்கிற சட்டங்களுக்கே ரூல்கள் போடுவதற்கு தாமதம் ஏற்படும்பொழுது, வருகிற சட்டங்களுக்கும் ரூல் போடுகிற அதிகாரத்தை சர்க்கார் வைத்துக் கொண்டு இஷ்டப்படி தாமதம் செய்வார்களேயானால், கூட்டுறவு இயக்கத் தில் இருப்பவர்களுக்கு கஷ்டம் ஏற்படும். அந்த வகையிலே சில வேண் டாத அம்சங்களையும் இன்னும் பெற்றிருக்கிறது இந்தச் சட்டம். நடைமுறை யில் தொல்லைகள் அதிகரிக்குமேயானால், அப்போதைக்கப்போது திருத்திக் கொள்ளலாமென்று சர்க்கார் நினைத்திருக்கிறார்களோ என்னமோ, மொத் தத்திலே இத்தகைய சட்டம் வரவேற்கத் தக்கது. கூட்டுறவு இயக்கம் அதிகமாகப் பரவவேண்டும் என்று ஆசைப்படுகிற நாம் அதற்கு வேண்டிய சட்ட திட்டக் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிப்பது அவசியம். சட்ட திட்டக் கட்டுப்பாடுகளை மக்கள் புரிந்துகொள்வதும் அவசியம். இந்த முறையிலே நான் இந்தக் கூட்டுறவு மசோதாவை மனமார வரவேற்கிறேன். இன்னும் சிறு சிறு திருத்தங்களை—பொறுக்குக் கமிட்டியிலே எவ்வளவு ஜன நாயக மனப்பான்மையோடு தாராளமாக திருத்தங்களுக்கு இடமளித்தார் களோ, இதே போன்று ஜனநாயக மனப்பான்மையோடு—ஏற்றுக்கொள் வார்களேயானால், குறைந்த அளவுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சட்டத்தை நாம் இயற்றிய பெருமைக்கு ஆளாவோம் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI A. GOVINDASAMY : உதவி தலைவர் அவர்களே, இந்த மசோதா ஆரம்பத்திலே இந்த சபைக்கு வந்த நேரத்திலே ஒரு புரட்சி கரமான மசோதாவாக, நாம் எல்லோரும் வரவேற்க கூடிய

நிலைமையிலே இருந்தது. ஆனால் இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு போய் வந்த பிறகு உயிரிழந்த பிணமாகத்தான் இந்த சபைமுன் மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. முக்கியமாக ஏற்கனவே கொண்டு வரப்பட்ட மசோதாவில் இருந்த கிளாஸ் 28 (1) (g) அவசியம் இருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியில் இருந்த நாங்கள் எல்லோரும் வலி யுறுத்திக் கூறினோம். ஆளும் கட்சியைச் சேர்ந்த பொறுக்குக் கமிட்டி யில் உள்ள பல உறுப்பினர்களும், கூட்டுறவு இயக்கத்திலே தொடர்ந்து பொறுப்பு வகிப்பவர்களும்கூட இந்த ஷரத்து அவசியம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் முடிவு எடுக்கின்ற நேரத் திலே அவர்களும் தங்களுடைய நிலைமையை மாற்றிக்கொள்வதற்குக் கார ணம் கட்சிக் கட்டுப்பாடுதான் என்பதை இந்த சபையில் உள்ளவர்கள் நன்றாக அறிவார்கள். இந்த மசோதாவை இந்த நேரத்தில் கொண்டு வந்தது சரியான நேரமல்ல. தேர்தலுக்குப் பின்னால் வந்திருந்தால் முதலிலே கொண்டுவரப்பட்ட ஷரத்துக்களோடு நிறைவேறியிருக்கும். தேர் தல் காலக் கட்டத்தில் இந்த மசோதா வந்ததால், கூட்டுறவு ஸ்தாபனங் களில் நீண்ட காலமாக பொறுப்பில் இருக்கிறவர்கள் தங்கள் எதிர்ப்பைப் பரவலாகத் தெரிவித்தார்கள். அந்த எதிர்ப்பு ஒரு வேளை தேர்தலைப் பாதிக்குமோ என அஞ்சியதன் விளைவாகவேதான் இந்த ஷரத்து கைவிடப் பட்டது. நமது அமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு இந்த மசோ தாவை முதலிலே கொண்டுவந்த நேரத்தில் இருந்த உற்சாகம் இன்றைய தினம் பேசும்பொழுது அவ்வளவு தெளிவாகக் காணப்படவில்லை. அவர் களுடைய கையும் கட்டுப்படுத்தப்பட்டது என்றுதான் நாங்கள் நினைக்க வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு இருந்த நல்ல எண்ணம் ஏன் கைவிடப்பட்டது என்று பரிசீலிக்கிறபொழுது அதிலே உள்ள நிலைமை நன்கு வெளிப்படும். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கூட, கூட்டுறவு ஸ்தாபனங்களில் தொடர்ந்து இருப்பவர்கள், இந்த ஷரத்தை எதிர்க்கிற வர்கள், இது இருந்தால் மீண்டும் பொறுப்பு வகிக்க முடியாது, அதனாலே அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்தை மறைமுகமாக ஒத்துக் கொண்டு பேசினார்கள். நண்பர் பழனிசாமி பேசிய பிறகு ஸ்ரீ மாரியப்பன் பேசும்பொழுது ஏதோ மேலெழுந்தவாரியாக ஊழல்கள் இருக்கின்றன என்று சொன்னால் பிரயோசனமில்லை, அதற்கு வேண்டிய ஆதாரங்கள் கொடுக்க வேண்டும், அப்படிக் கொடுக்கத் தயாரா என்று கேட் டார்கள். எனக்குத் தெரிந்த வரையில், கடலூர் வீடு கட்டும் சொஸைடி யிலே ரூபாய் 20,000 கையாளப்பட்டது. இது அதிகாரிகளுக்கும் நன்றா கத் தெரியும். அமைச்சருக்குக்கூடத் தெரிந்திருக்கலாம். ஒரு குமாஸ்தா கையாடியதனால் தலைவர் தண்டிக்கப்பட்டு, செயலாளருக்கு எந்த விதமான தண்டனையும் இல்லாத நிலைமை ஏற்பட்டது. இது மட்டுமல்ல. தென் ஆற்காடு ஜில்லாவிலே கடலூர், சிதம்பரம் பண்டகசாலைகளிலே பல தவறு கள் நடந்திருக்கின்றன. வழக்குகளும் போடப்பட்டிருக்கின்றன. அதன் விளைவாக திராவிட கழகத்தைச் சேர்ந்த ஒரு நிர்வாகி பாதுகாப்புக்காக காங்கிரசிலே சேர்ந்தார். உதாரணங்கள் வேண்டுமென்றால் எவ்வளவோ சொல்லலாம். ஆகவே ஜில்லாவாரியாகப் பார்த்தால், இது ஒரு குடும்ப சொத்தாக மாறியிருக்கிறது. இல்லையென்று யாரும் மறுக்க முடியாது. இந்த ஷரத்தை முதலிலே கொண்டுவந்த நோக்கம் என்ன, கூட்டுறவு ஸ்தாபனங்களிலே பல புதிய மெம்பர்கள் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும், தவறுகள் ஏற்படக் கூடாது என்ற நோக்கத்தோடுதான். அதற்கு எதிர்ப்பு வந்ததும் அதைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எங்களுக்கு எண்ணிக்கை குறைந்து இருந்த காரணத்தினாலே பொறுக்குக் கமிட்டியில் ஓட்டு பலம் இல்லாமல் போய்விட்டது. இந்த மன்றத்திலேயும் ஆளும் கட்சியிலேயே உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத் தினாலே, எங்களுடைய கருத்து புறக்கணிக்கப்படலாம். முதலிலே இந்த மசோதாவை கொண்டுவந்தபொழுது பத்திரிகைகளிலே பாராட்டி எழுதிய வர்களும் கண்டித்து எழுதியவர்களும் யார் என்பது அமைச்சருக்குத் தெரியும். இந்த ஷரத்து நீக்கப்பட்டதும், இந்த நீக்கத்திற்குக் காரண மாக இருந்தவர்களை எவ்வளவு பாராட்டுகிறார்கள் என்பதும் தெரியும். மன வேதனையோடுதான் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை தர்ம சங்கடமான நிலைமையிலே இந்த சபைமுன் கொண்டுவந்திருக்கிறார்கள்.

21st August 1961] [Sri A. Govindasamy]

ஆளும் கட்சிக்குச் சாதகமாக இந்த திருத்த மசோதா அமைந்திருக்கிறது. கடலூரிலே காந்தி மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றிருக்கிறது. ஆனால், மீனவர் முன்னேற்றச் சங்கம் என்று ஒரு சங்கம் வைக்க வேண்டுமென்று கேட்டபொழுது அதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. காந்தியார் பெயரை வைத்ததினாலேயே அந்தச் சங்கத்திற்கு அனுமதி கொடுக்கப் பட்டது. கூட்டுறவிலே அரசியல் எப்படிப் புகுத்தப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவசியப்படுகிறவர்களுக்கு உதவி கிடைக்காமல் இருப்பதை பல இடங்களிலே பார்த்து வருகிறோம். இப்பொழுது நிர்வாகப் பொறுப்பில் இருந்துகொண்டு, தங்களை அசைக்க முடியாது என்று சொல்லக்கூடியவர்களை இந்தச் சட்டம் மாற்றியமைக்கும் என்ற ஷரத்து எடுபட்டுவிட்ட காரணத்தால், அந்தத் தவறு தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. அனுபவம் பெற்ற ஒரு சிலராவது தேவை இல்லையா, அவர்களுடைய அனுபவத்தைக் கொண்டு சொஸைட்டியை நல்ல முறையில் நடத்தக் கூடாதா என்று கேட்கிறார்கள். அனுபவம் நல்ல முறையில் பயன்பட்டால் அதை நானும் வரவேற்கத் தயாராய் இருக்கிறேன். அனுபவம் தவறான முறையில் இழுத்துச் செல்வதற்குப் பயன்படுமானால், அதை நாங்கள் கண்டிக்கிறோம் என்ற கருத்திலே இந்த மறுப்புக் கொடுத்திருக்கிறோம். இப்பொழுது சட்டமாக நிறைவேற்றிவிட்டாலும், தேர்தலுக்குப் பிறகாவது தக்க திருத் தம் கொண்டுவந்து அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: தேர்தலுக்குப் பிறகு நாங்கள்தான் இங்கு நிச்சயமாக இருப்போம் என்று கனம் அங்கத்தினர் தீர்மானம் பண்ணிவிட்டார்கள்.

***SRI A. GOVINDASAMY**: இந்த மசோதா கொண்டு வந்த நேரம் சரியில்லை. தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன் கொண்டு வந்தால் நிச்சயமாக நடக்காது. தேர்தலுக்குப் பின்னால் கொண்டுவந்தால் இந்த மசோதாவின் நோக்கம் நிறைவேறும்படியாக இருக்கும். தேர்த லுக்கு முன்னால் மாறுதல் செய்ததால் இந்த ஆட்சிக்கு ஆபத்து வந்தது என்று சொல்லாமலிருப்பதற்காகத்தான் பிறகு கொண்டுவரலாம் என்றேன். இதிலே முக்கியமான ஷரத்து இதுதான். நான் சொல்லும் போது ஒரு சில குறிப்பிட்ட கனம் அங்கத்தினர்களுடைய முகபாவனை எப்படி இருக்கிறது, அவர்களுடைய உள்ளத்தைத் தொடுகிறது என்று தெரிந்துகொண்டுதான், குறிப்பிட்ட சிலரைத்தான் பாதிக்கும் என்ற கார ணத்தால், அவர்களுடைய சக்தியைச் சமாளிக்க முடியாத காரணத்தால் தான் இந்தத் திருத்தம் ஏற்பட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித் துக்கொண்டு, அமைச்சர் அவர்கள் தேர்தலுக்குப் பிறகாவது திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாட்டு நிர்வாகத்தை நாம் இரண்டு மூன்று வகையிலே நடத்தி வருகின்றோம். மக்களுடைய வோட்டுப் பெற்று, இந்த சட்டசபையிலே பிரதி நிதிகளாக அங்கம் வகித்து அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அது போலவே, அரசாங்கத்துக்கு உட்பட்டு சில சிறிய காரியங்களை ஸ்தல ஸ்தாபனங்கள் என்று சொல்லக்கூடிய பஞ்சாயத்து, ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, கார்ப்பரேஷன் போன்றவைகளிடத்திலே விட்டு, அங்கேயும் சில காரியங்களைக் கவனித்து வருகிறோம். அது போலவே, கூட்டுறவு இயக்கங்கள் மூலமாகவும் இந்த நாட்டுக்கு வேண்டிய பல காரியங்களை நாம் கவனித்து வருகின்றோம்.

இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் உண்டு. பெரும் விஷயங்களைக் கவனிக்க பொறுப்புள்ள ஒரு பொதுவான ஸ்தாபனம் இருக்க வேண்டும் என்பது தெரிந்த விஷயம். ஸ்தல ஸ்தாபனங்கள் ஆங்காங்கே உள்ள நிலைமைகளை அனுசரித்து நிர்வாகத்திலே பங்கெடுத்துக்கொள்ளத் தங்களைத் தயார் செய்துகொள்வதற்கு சில பொறுப்புகளை நிறைவேற்றி வேலை செய்கின்றன. அந்த இடங்களில் வரி போட்டு, அதன் மூலம் வரும்

[Sri S. Nagaraja Monigar] [21st August 1961

பணங்களைக் கொண்டு ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற வகையில் ஏற்பட்டிருக்கிறது. அந்த விதமாக ஒவ்வொரு துறையிலும் கூட்டுறவு இயக்கத்தைப் புகுத்தி வருகிறோம். அது நம் நாட்டில் மட்டுமல்லாது உலக நாடுகளிலேயே பெரிய பங்கு வகிக்கின்றது. இந்தியாவிலேயே நம்முடைய மாகாணம் இந்தத் துறையில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது என்ற பெருமை நமக்கு உண்டு. கூட்டுறவு சம்பந்தமாக ஏற்கனவே இருந்த சட்டத்தைத் திருத்தி, புரட்சிகரமான அல்லது தேவையான என்று சொல்லக்கூடிய சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

இதிலே கருத்துக்கள் பேசப்படுகின்றன. இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, அதனுடைய கருத்துக்களையும் கேட்டு இன்று அதை நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் இதை முழுமையும் வரவேற்று விவாதத்தைத் துவக்கிய கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசினார்கள். ஒரு ஷரத்து பற்றி மாத்திரம் அபிப்பிராயம் வேறாக இருந்தது. அந்த ஷரத்து என்னவென்றால், சொஸைட்டியில் தலைவராகவோ, டைரக்டர்களாகவோ இருப்பவர்கள் தொடர்ந்து பல காலம் இருக்கக்கூடாது என்ற ஷரத்து மசோதா வந்த காலத்தில் இருந்தது. இப்பொழுது அது இல்லாமலிருக்கிறது என்பதாகும். இது ஒரு பெரும் குறையாகப்படலாம். ஆனால், அதற்கு வேறு மாறுதல் திருத்த மசோதாவிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதையும் அன்பர்கள் அறிவார்கள். இத்தகைய மாறுதல் பொறுக்குக் கமிட்டியிலே ஏற்பட்டுவிட்டது என்பதற்காகவே யாரும் விசனப்பட வேண்டியதில்லை. சில சமயங்களில் பேசுகின்றார்கள், "பெரிய மெஜாரிடியை வைத்துக்கொண்டு அரசாங்கம் நடத்துகிறார்கள், மந்திரிமார்கள் சொன்னதற்கு கை தூக்குவதற்கு காங்கிரசோ அல்லது ஆளும் கட்சி அங்கத்தினர்களோ இருக்கிறார்கள்" என்று தாக்கி தங்களுடைய மனதிற்குத் திருப்தியாகப் பேசி விடுகிறார்கள். அவர்கள் இன்று சொன்ன சில கருத்துக்கள் இவ்வாறு அவர்கள் வழக்கமாகச் சொல்வதற்கு மாறாக இருக்கிறது. அவர்கள் வாயாலேயே இப்படிச் சொல்கிற சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த கூட்டுறவு இலாகாவின் முக்கியத்துவம் என்னவென்றால், ஆட்சியில் உள்ளவர்கள் வரி போட்டு, இன்னும் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்டு செயலாற்றும்போது, சர்க்காருடைய பணம் கூட்டுறவு சங்கம் மூலமாக மக்களுக்குப் பல காரியங்களுக்கு வழங்கப்படுகிறது. சர்க்கார் கொடுக்கும் பணத்தைக் கூட்டுறவு சங்க டைரக்டரோ, போர்டாரோ தவறான காரியங்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள்; பயன்படுத்திவிடுகிறார்கள். கடன் கொடுக்கும் சங்கங்கள் மட்டுமல்ல; எத்தனையோ தொழில்களை நடத்தி பொருள்களை உற்பத்தி செய்து லாபத்தைக் கண்டுபிடிக்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த வேலையையும் அவர்கள் செய்து வருகிறார்கள். இங்கெல்லாம் பொறுப்பு வாய்ந்தவர்கள் இருந்தால்தான் சங்கங்கள் நன்றாக நடக்கமுடியும்.

இந்த மாகாணம் இந்தியாவிலேயே முதன்மையில் இருக்கிறது என்ற பெயரை நாம் அனேக துறைகளில் பெற்று, இந்த மாகாணம் நல்ல முறையில் முன்னேறி வருகிறது என்று திட்டவட்டமாகத் தெரியும். தெரிந்தும் அதை மறுக்க வேண்டுமென்ற எண்ணத்தாலோ என்னவோ மறுத்துக்கொண்டு வருகிறார்கள். மனச்சாட்சிக்குக் விரோதமாகக்கூட மறுக்கிறார்களோ என்னவோ, உள் ஒன்று வைத்து புறம் ஒன்று சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இங்குள்ள ஆளும் கட்சியைவிட சர்க்கார் இன்னும் தீவிரமாகச் சென்றதோ அல்லது இலாகா தீவிரமாகச் சென்றதோ தெரியவில்லை. ஜனநாயக ரீதியில் பெரும்பாலான கனம் அங்கத்தினர்களுடைய கருத்தைத் தெரிந்து, எடுத்த முடிவை யாரோ தடை செய்து வற்புறுத்தி இருக்கிறார் என்று நினைக்கிறேன். அப்படியிருக்கும்போது, ஆட்டுமந்தை போல் உள்ள வலுவை வைத்து காரியங்கள் செய்கிறார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. அனுபவத்தைக்கொண்டு போகப்போக, தேவையை ஒட்டி மாறுதல் செய்துகொள்ளலாம். இன்னும் கொஞ்ச நாளில் இதையும் அவசியம் இருந்தால் கவனிக்கலாம்.

21st August 1961] [Sri S. Nagaraja Monigar]

அங்கத்தினராக யார் வந்தாலும் சேர்த்துக்கொள்வது என்ற ஷரத்து இருக்கிறது. சேர்த்துவிட்ட பின்னர்தான் அப்பீல் இருக்கிறது. புரட்சி இங்குதான் இருக்கிறது. இதற்கு முந்தி டிபுடி ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அப்பீல் செய்து கொள்ளவேண்டும், ஒருவரைச் சேர்க்காவிட்டால். அப் பொழுது போர்டார்தான் அப்பீல் செய்து கொள்ளவேண்டும் என்று இருக்கும்போது, எந்த அளவு யாருடைய சர்வாதிகாரம் இருக்கும் என்பதை யோசிக்க வேண்டும். சர்வாதிகாரம் என்பது இருக்காது. ஜனநாயகம் இருக்கும் என்பதைப் பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை.

இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே இருக்கும் போட்டி சர்க்கார் பணம் காரணமாக வருகிறது. சர்க்கார் பணத்தைக் கொடுக்கும் வகையில் கூட் டுறவு சங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஜனநாயக முறையில் நடத்தப் படவேண்டியது மிகவும் அவசியம். இதில் இலாகாக்களும் சற்று நன்றாக மேற்பார்வையிடவேண்டும். கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசியபோது பல நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளில் பெரும்பாலானவற்றை நான் ஆமோதிக்கிறேன். சில சொஸைட்டிகள் தவறு செய்தால் அதற்குத் தக்க சூபர்விஷன் வேண்டும். சூபர்விஷன் சரியாக இல்லையென்றால், கூட்டுறவு இயக்கம் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியாது. தற்போது சூபர்விஷன் அவ்வளவு சரியாக இல்லை. அதை இன்னும் தீவிரமாக்க வேண்டும். கடலூரில் பெரிய தவறு நடந்ததற்கு நான்–அபிஷியல்ஸ் காரணமாக இருந்தார்கள் என்று குறிப்பிட்டார் ஒரு கனம் அங்கத்தினர். அதில் ஆபீசர் களும் உடந்தையாக இருந்தார்கள் என்பதைச் சொல்ல மறந்துவிட்டார் போலும். எந்த ஒரு சட்டத்தை இயற்றினாலும், அதிகாரிகளும் அதை அமுல் நடத்துவதில் சற்று சுதந்திர உணர்ச்சியோடு தைரியமாக வேலை செய்யவேண்டும். அந்த சுதந்திரத்தை அமைச்சர்களும் சர்க்காரும் அதி காரிகளுக்குக் கொடுக்க வேண்டும். இனி புதிதாக அனேக அதிகாரிகள் வேலைக்கு வருவார்கள். அவர்களும் தைரியமாக வேலை செய்யும் அளவுக்கு தக்க அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களும் தேச முன்னேற்றத்திற்கு பாடுபடும் வகை யில் செயலாற்றவேண்டும். அதற்கும் கூட இன்னும் பல வருஷங்கள் செல்லும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் நமது சகோதர அதிகா ரிகள் " நம் நாட்டுக்கு வேலை செய்கிறோம் " என்கின்ற எண்ணத்திலே தைரியமாகப் பல புதுபுதுக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி தங்களுக்கே உரிய பங்கை எடுத்துச் செய்யவேண்டும். இதுதான் தலைமை அதிகாரிகள் பெரும் பணியாக இருக்க வேண்டும்.

12-3 p.m.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம் டிவிடெண்ட் பற்றியது. கூட்டுறவு சங்கங்களில் லாபத்தைப் பகிர்ந்தளிப்பதில் இப்போது செய்திருக்கும் முறையானது மிகவும் இடைஞ்சலாக இருக்கும் என்பது என் அபிப் பிராயம். அதை முன்பே பலர் சொல்லிவிட்டார்கள். கூட்டுறவு மூலமாக எல்லாத் தொழில்களும் நடக்கவேண்டுமானால் அதில் அங்கத்தினர் களுக்குச் சிறிதாவது லாபம் இருந்தால்தான் எல்லோரும் ஆர்வத்துடன் வந்து சேருவார்கள். கூட்டுறவு இயக்கத்தின் கீழ் தானே வருகிறவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும். அப்போது தான் அந்த இயக்கமும் முழுவெற்றி பெற்றதாக ஆகும். அப்போது பல நெசவாளர்கள் இப்போது தனித்திருப்பது போல இருக்கமாட்டார்கள். ஆகவே கொஞ்சம் டிவிடெண்டு அதிகமாகக் கிடைக்கும்படியாக இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம். சர்க்கரை ஆலை, நூல் ஆலை இதுபற்றிய விஷயம் வேறாக இருக்கலாம். நேற்று அமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் சொன்ன பதில் அங்கே எல்லாம் ஏராளமானபேர் தானே கூட்டுறவு இயக்கத்தில் வந்து சேர்ந்து நன்றாக நடத்துகிறார்கள் என்பதும், உண்மையாக இருக்க லாம். ஆனால் மற்ற சங்கங்களை எடுத்துக்கொண்டால் இது பொருந்தாது. அதுவும் சிறிய லாபங்களைக் கூடக் காணாமல் அவை ஊசலாடிக் கொண் டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது அங்கத்தினர்களுக்கு அதில் ஒரு கவர்ச்சி இருக்கவேண்டுமானால் மொத்த லாபத்தை ரிசர்வ் பண்டுக்கு 25 பர் செண்ட், இன்னும் அந்த பண்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்கிவிட்டு

ஆறு, ஆறறை சதவிகிதம் கூட டிவிடெண்டாக பிரித்துக்கொடுக்க முடியாதபடி செய்தால் கவர்ச்சி இருக்காது. அதுவும் நெசவாளர்களுடைய சங்க அங்கத்தினர்களுக்கு ரிபேட்டைத் தவிர வேறு இனத்தில் லாபம் வருவதற்கே இடமில்லை. இப்படி 6¼ பர் செண்ட் என்று இருப்பதை மற்ற இனங்களில் கொஞ்சம் குறைத்துக்கொண்டாவது பத்து, பதினைந்து சத விகிதத்தில் கொடுத்துதவுவது மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கொடுக்கிறபோதே மிகக் குறைவாகத்தான் கிடைக்கும். காரணம் கிடைக்கிற லாபமே பல சொஸைடிகளில் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது.

மேலும் பொதுத் துறையில் பணி செய்வதற்கு தானே முன்வருகிற ஆட்கள் மிகவும் குறைவு என்று கனம் அங்கத்தினர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். அது உண்மை. ஒரு ஊரிலே ஒரு பொதுக்காரியத்தை எடுத்து நடத்துவதற்கு முன் வருபவர்கள் எப்போதுமே ஒருசிலராகத்தான் இருக்கிறார்கள். அதுவும் மக்கள் ஒரு சிலரைத் தான் நம்பவும் செய்கிறார்கள். ஆகவே நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சின்ன சொஸைடிகள் நான்கைந்தைச் சேர்த்து ஒரு யூனிட்டாக வைத்தால் ஆட்கள் கிடைக்காத குறையை நிவர்த்தி செய்ய முடியும். நல்ல அனுபவம் உடையவர்கள் சேவை கிடைப்பதற்கும் வசதியாக இருக்கும்.

இன்னொன்று, மார்க்கெட்டிங் சொஸைடிகளில் விவசாய மெம்பர்களுடைய விளைபொருள்களை வாங்கிக்கொள்கிறபோது அவர்களுக்குச் சிறிது லாபம் கிடைக்கும்படியாக இருக்கவேண்டும். அது இல்லாத காரணத்தினால் அவை சரியாக நடைபெறுவதில்லை. கனம் அங்கத்தினர் சொன்னது போல ஓரளவு விலை கட்டுபடியாகக் கூடிய நிலைமையில் மார்க்கெட்டிங் சொஸைடி அதற்கு வழி செய்யவேண்டும். அவை நன்றாக நடக்கவில்லை என்பதற்குக் காரணம் அங்குள்ள நிர்வாகஸ்தர்களுடைய திறமைக்குறைவு என்று சொல்லலாம். அதில் ஓரளவு உண்மை இருக்கும் என்றாலும் ஒன்றிரண்டு இடங்களில் நன்றாக நடக்கலாம். ஆனால் பொதுவாக விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய முறையில் இவை இயங்க வழிவகை செய்தால்தான் எல்லாவிடங்களிலும் இவை சிறப்பாக இயங்க வசதி ஏற்படும். எங்கு பார்த்தாலும் விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்திவிடலாம் என்பதும் சுலபமல்ல. ரஷ்யா மாதிரியாகப் போய்விட்டது என்று சொல்வதற்கும் இடமில்லாமல் ஓரளவு முதல்படியாக குத்தகைக்காவது அவற்றை எடுத்துக்கொண்டு நடத்த யோசிக்கலாம். பாலட் முறையில் வோட்டுப்போடச் செய்திருப்பது வரவேற்கத் தக்கது. இது மிகவும் புரட்சிகரமானதாகும். இன்னும் மற்ற பல சீர்திருத்தங்களும் கொண்டு வந்திருக்கிறோம். இப்படி பலவகையில் பலவிதமான—அவசியமான திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த மசோதாவை இந்தச் சபை ஏற்றுக் கொண்டு இச்சட்டம் வெற்றிகரமாக இயங்க அதிகாரிகளும், மற்றவர்களும் ஒத்துழைக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்வதோடு இந்த மசோதாவை முழுமனதுடன் ஆதரிக்கின்றேன்.

SRI V. SUBBIAH: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 30 ஆண்டுகளுக்கு பின்னால் காந்தி அடிகள் கூட்டுறவு ராஜ்யம் வேண்டுமென்று கனவு கண்ட நிலையில் இன்று நல்ல அம்சங்கள் அடங்கிய பல க்ளாஸ்கள் கொண்ட ஒரு புதிய பில்லாக இதை தயாரித்திருக்கிறார்கள். ஆயினும் பல திருத்தங்கள் இதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் வரும்போது, அவைகள் பற்றி பேசலாமென்று நினைக்கிறேன். அதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது பல அதிகாரங்கள் சபைக்கு இருந்ததைவிட அதிக அதிகாரம் ரெஜிஸ்ட்ராருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் குறை சொல்வதற்கில்லை. அந்தளவு அதிகாரத்தை ஜனநாயக அமைப்பில் ஒரு ஸ்தாபனத்திற்கு கொடுத்தால் அது செயலில் எப்படியிருக்கும் என்று நினைக்கவே முடியவில்லை. அம்மையார் அவர்கள் சர்வாதிகாரி மாதிரி ஒரு ரெஜிஸ்ட்ரார் இந்த இலாகாவிற்கு கிடைத்து விட்டால் நிலை எப்படியிருக்கும் என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். கடன் கொடுக்கக் கூடிய

21st August 1961] [Sri V. Subbiah]

சொஸைட்டியிலிருந்து, ஜில்லா அளவில், ராஜ்ய அளவிலே இப்படி ஒருவர் இருப்பது என்பது பொருத்தமான அமைப்பு என்றுதான் சொல்ல முடியும். சில பகுதிகளில் நாம் பார்க்கிறோம், ஒருவர் விவசாயியா என்று நிர்ணயிப்பதற்குக் கூட, ரெஜிஸ்ட்ரார்தான் நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ட்ரிப்யூனலுக்கு போவதற்கு மூன்று மாத காலம் வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு மாதமாக கொடுத்தால் வேகமாக துரிதமாக காரியங்கள் நடக்க உதவியாகயிருக்கும். நான் நிறைய அமெண்ட்மெண்ட்ஸ் கொடுத்திருக்கிறேன்; அதை ஆமோதித்து பேசக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அப்பொழுது விரிவாக பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு பொதுவாக இந்த பில்லை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா கூட்டுறவு இயக்கம் வளர்வதற்கு ஓரளவிற்காவது உதவி செய்ய வேண்டுமென்பதற்காக சில முக்கியமான திருத்தங்கள் செய்ய முயற்சிக்கிறது. பெரியதொரு புரட்சியை பண்ணிவிடுவதாகவோ அல்லது சோஷியலிஸத்தை அமைத்து விடக்கூடிய மசோதா என்றோ கூறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் கூட்டுறவு இயக்கம் வளர பல முட்டுக்கட்டைகள் இருந்து வந்திருக்கின்றன; அந்த முட்டுக் கட்டைகளை சமாளிக்க ஓரளவாவது உதவி செய்யும் இந்த மசோதா. அந்த அர்த்தத்தில் இதை நான் வரவேற்கிறேன். முக்கியமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கிராம விவசாயிகளை கூட்டுறவு சங்கங்களில் கொண்டு வருவதற்கும் கைத்தறி நெசவாளர்களை முடிந்தால் 100-க்கு 100 கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் கொண்டு வருவதற்கும் முயற்சிக்க வேண்டுமென்று இருக்கிறது. இன்னும் உபயோகப் பொருள்களை விநியோகம் செய்வதில் பண்டகசாலைகளை அதிகப்படுத்தவேண்டும் லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டிகளை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதற்காக கணிசமான தொகையும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த நோக்கங்கள் நிறைவேறவேண்டுமென்றால் அதற்குரிய முறையில் சட்டங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும். அதில் முக்கியமானது, அங்கத்தினர்களைச் சேர்ப்பது. இன்றும் அங்கத்தினர்களைச் சேர்ப்பது என்பதில், கிராமங்களில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக நாம் கருதினாலும் கூட இன்னும் கஷ்டங்கள் தான் அதிகமாகயிருக்கின்றன. பெரும்பாலான கிராமங்களில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இவர்கள் கூட்டுறவு சங்கத்தினால் ஏற்படக்கூடிய பலன்களை அனுபவிக்க முடியாமல் இருக்கும் நிலைதான் இருந்து வருகிறது. சொத்து உடையவர்கள் கையில்தான் ஆதிக்கம் இருக்கிறது. கிராமக் கூட்டுறவு சொஸைட்டிகள் சம்பந்தப்பட்ட மட்டில் லிமிட்டெட் லயபிலிட்டி, அன்லிமிட்டெட் லயபிலிட்டி என்று இருப்பதால் சொத்து உடையவர்கள் கையில் சொஸைட்டி இருந்தால்தான் சௌகரியமாகயிருக்கும், கொடுத்த கடனை வசூல் செய்யவோ அல்லது நஷ்டம் ஏற்பட்டால் வசூல் செய்யவோ அவர்களால்தான், முடியு மென்பதால் அவர்கள் ஆதிக்கத்தில் இருக்கிறது. ஆக சொத்துடையவர்களுக்குத் தான் கடன் கொடுக்கவேண்டுமென்பது மேலோங்கி நிற்கிறதே தவிர சொத்து இல்லாதவர்களுக்கும் கடன் தேவைப்படுகிறது. அவர்கள் தங்கள் விவசாயத்தைப் பெருக்கிக்கொள்ள, தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக்கூடிய அம்சம் இன்னும் பலஹீனமாகத்தான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்வார்கள். லிமிட்டெட்டா, அன்லிமிட்டெட்டா என்று இல்லாது, எல்லாம் லிமிட்டெட் லயபிலிட்டி என்று இருக்க வேண்டுமென்ற கருத்து இருந்தது. இப்பொழுது அதை சொஸைட்டியின் பொறுப்பிலேயே விட்டு வைத்திருப்பது, அந்தளவு முன்னேற்றந்தான். கிராமக் கூட்டுறவு சொஸைட்டிகள் கூட, அவர்கள் மெஜாரிட்டி பார்த்து வரையறுக்கப்பட்ட பொறுப்பா வரையறுக்கப்படாத பொறுப்பா என்று மாற்றிக்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த முக்கிய மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னொன்று, அங்கத்தினர்களாக சேர விரும்புகிறவர்கள் குறிப்பிட்ட பாரத்தில் மனு செய்தால் அதை நிராகரிக்கக் கூடிய எல்லையற்ற அதிகாரம் இருந்து வந்தது.

[Sri M. Kalyanasundaram] [21st August 1961

நிர்வாகக் கமிட்டியார், காரணம் காட்டாமலேயே அங்கத்தினராக சேருவதை நிராகரிக்கலாம். அது போய் காரணம் காட்டவேண்டும், அதற்கு மேல் ரெஜிஸ்டிராருக்கு அப்பீல் செய்து கொள்ளவேண்டுமென்ற திருத்தத்தை அரசாங்கம் செய்திருக்கிறது. இப்பொழுது இந்த மசோதாவில் அங்கத்தினர்களாக சேர விரும்புகிறவர்களை சேர்க்க மறுப்பது நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு அவ்வளவு சுலபமல்ல. மறுக்க வேண்டுமென்றால், இன்னின்ன காரணங்களுக்காக மறுக்க வேண்டியிருக்கிறது என்று ரெஜிஸ்டிராருக்கு எழுதி அவர் அனுமதி பெற்று அதை மறுக்கவேண்டும் என்ற முறையில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. சிலர் சொல்லலாம் எல்லா அதிகாரங்களையும் ரெஜிஸ்டிராருக்கே கொடுத்து விடுகிறோமே என்று. எந்தப் பகுதியில் வசிக்கிறார், என்ன தொழில் செய்கிறார் என்று எல்லாப் பொறுப்புகளையும் கொடுத்து விடுகிறார்களே என்று கேட்கலாம். என்ன செய்ய ? கூட்டுறவு இயக்கம் வளர வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு பொது மனிதன் இருந்தாவது முடிவு செய்ய வேண்டுமென்பதுதான். கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களைச் சேர்ப்பதில், சொத்து இல்லாதவர்களையும் சேர்க்கவேண்டும். என் அனுபவத்தில் நான் ஒன்று சொல்கிறேன். என்னை ஒரு கூட்டுறவு சொஸைட்டியில் சேர்த்துக்கொள்ள மறுத்தார்கள். ஆனால் அந்த புத்திசாலிகள் என்ன செய்தார்கள் என்றால் காரணம் காட்டி மறுத்தார்கள். அதனால் சிக்கிக்கொண்டார்கள். ஆக, இதுபோன்ற அதிகாரங்கள் ரெஜிஸ்ட்ராரிடமாவது இருக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டியிருக்கிறது. தனிப்பட்ட ஒரு அதிகாரியிடம் அதிகாரங்களைக் குவித்திருப்பதில் எனக்கு சந்தோஷம் கிடையாது. ஒருவரை சேர்க்க மறுப்பதாகயிருந்தால் காரணங்கள் காட்டி ரெஜிஸ்ட்ரார் அனுமதியின் பேரிலே தான் மறுக்கலாம் என்ற ஷரத்து இருக்கிறது. அவரும் இன்னன்ன காரணங்களால் அனுமதிக்கலாமா, கூடாதா என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ரெஜிஸ்ட்ராருக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவைகளை எப்படி உபயோகிக்க வேண்டுமென்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திற்கு அப்பாற்பட்டு சர்வாதிகாரி போல் நடந்து கொள்ளும் அளவிற்கு அதிகாரம் கொடுக்கவில்லை. அரசியல் காரணமாக சண்டை போட்டால் அவர் ஒரு பஞ்சாயத்தார் மாதிரி இருந்துகொண்டு நடக்கும் விதத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது, அரசியல் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நடந்துகொள்ள முடியாத நிலையைப் பார்க்கிறோம். ஆகவே ரெஜிஸ்ட்ராருக்கு இந்த அதிகாரம் இருக்கத்தான் வேண்டும். அவரும் நம் நாட்டில் பிறந்தவர்தான். அவர் அதிகாரத்தை சரியாக உபயோகப்படுத்துகிறாரா இல்லையா என்று பார்ப்பதில் தவறில்லை. அப்படி ரெஜிஸ்ட்ரார் தவறு பண்ணினால் அதற்கு எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. அவரை இந்தப் பதவியிலிருந்து வேறு பதவிக்கு மாற்றலாம். அதற்குள்ள அதிகாரம் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. ஆகவே ரெஜிஸ்ட்ராரின் கையில் இந்த அதிகாரம் இருந்தால் இந்த இயக்கம் வளருவதற்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன். தனிப்பட்ட முறையில் ரெஜிஸ்டிரார் நல்லவரா அல்லது கெட்டவரா என்பது பிரச்னை அல்ல. அவருடைய அதிகாரத்தையும் மீறி தவறு செய்வார்களேயானால் அதை கவனித்துக்கொள்வதற்கு இந்த சபை இருக்கிறது. ரெஜிஸ்டிராருக்கு மேல் அப்பீல் செய்வதற்கு அரசாங்கம் இருக்கிறது. அந்த முறையில் ரெஜிஸ்டிராருக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த மசோதாவில் முக்கியமான ஒரு திருத்தம் செலக்ட் கமிட்டியில் ஆரம்பத்தில் வந்தது. அதாவது ஒரு சொஸைட்டியில் ஆறு ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் நிர்வாகப் பொறுப்பில் இருக்கக்கூடாது என்கிற ஒரு திருத்தம் ஆரம்பத்தில் செலக்ட் கமிட்டியில் வந்தது. அமைச்சர் அவர்களும் அதை ஆரம்பத்தில் ஒத்துக்கொண்டார்கள் என்று நினைக்கிறேன். பிறகு இந்த திருத்தம் மெஜாரிட்டியின் காரணமாக கைவிடப்பட்டது. அந்தத் திருத்தம் அவசியம் என்று இப்போதும் நான் கருதுகிறேன். பல இடங்களிலும் இப்பொது இளைஞர்கள் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் சமூகவேலைகளில் வேலை செய்ய முன் வருகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்புகொடுக்க வேண்டியது அவசியம். பழைய காலத்தில் கூட்டுறவு சொஸைட்டிகளை

21st August 1961] [Sri M. Kalyanasundaram]

தமது சொந்த குடும்பச் சொத்து என்ற முறையில் சொந்த செல்வாக்குக் காவும், அரசியல் செல்வாக்குக்குமாக வைத்திருந்தார்கள். இப்போதும் அப்படியே வைத்திருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் தான் இந்தத் திருத்தத்தை ஆட்சேபிப்பார்கள். இதில் யார் இருந்தால் என்ன? பதவியில் இருந்தால் தான் ஆலோசனைகளை சொல்லலாம் என்றில்லை. வெளியில் இருந்தாலும் நல்ல ஆலோசனைகளை சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தது உண்மையிலேயே வருந்தத்தக்கது. அதோடு அந்தத் திருத்தத்தை என்னுல் வலியுறுத்தா மலும் இருக்க முடியவில்லை. இதை அப்போதே ஒப்புக்கொண்டிருந்தால் இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்றிருப்பேன். இந்த ஒரு திருத்தத்தை விட்டதின் காரணமாகத் தான் நான் இதில் ஆட்சேபனைக் குறிப்பு கொடுக்க வேண்டிவந்தது. மற்ற முறையில் இந்த மசோதா வானது அனேகமாக வரவேற்கக்கூடிய முறையில் தான் அமைந்திருக் கிறது. மேலும் இதில் டிரிபூனல் எதற்கு என்று சிலர் ஆட்சேபித்தார் கள். சொத்து சம்பந்தமாக தகராறுகள் வந்தால் டிரிபூனலுக்குப்போக வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிர்வாக சம்பந்தமாகவோ அல்லது தேர்தல் சம்பந்தமாகவோ எந்தப் பிரச்னை வந்தாலும் அதை தீர்த்து வைக்க டிரிபூனலுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இதற் கெல்லாம் ரெஜிஸ்டிராருக்குத்தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்யவும் அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. டிரிபூனலுக்கு கொடுத்திருக்கின்ற அதிகாரம் குறைவா னது தான். இன்னும் எந்தெந்த அளவுக்கு அதிகாரம் கொடுக்கலாம் என்பதைப்பற்றி போகப் போகத்தான் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே அதை திருத்தமாக நான் வலியுறுத்த விரும்பவில்லை. மேலும் இதில் ஓரளவுக்கு கட்டாயம் இருப்பதாக சிலர் சொல்லுகிறார்கள் இந்தக் கூட்டுறவு இயக்கம், ஓரளவுக்கு கட்டாயம் இருந்தால்தான், அதிலும் விவசாயத்துறையில் வளர்ச்சி அடைய முடியும். சமுதாயத்தில் ஒட்டுமொத்தமாக தனிப்பட்ட உரிமையை ஓரளவுக்கு கட்டுப்படுத்தினுல் தான் நன்மையை காண முடியும். கூட்டுறவுப் பண்ணை இருக்கிறது; அதில் ஒருவர் சேர்ந்துவிட்டால், அவர் பின்னுல் விலகிப்போகும்போது நிலத்தை விட்டுவிட்டு போகட்டும் என்று தான் சொல்லியிருக்கிறோம். அதற்காக நஷ்ட ஈடும் கொடுக்கலாம் என்றும், அல்லது வேறு இடம் கொடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறோம். இந்தத் திருத்தத்தை செலக்ட் கமிட்டி மிகவும் ஆலோசித்துத் தான் செய்திருக்கிறது. முக்கிய மாக 28-வது பிரிவில் ஆறு வருடத்திற்கு பின்னுல் ஒருவர் தொடர்ந்து பதவி வகிக்கக்கூடாது என்று திருத்தவேண்டும் என்று சொல்லிருந்ததை—அதிலும் இந்த சட்டம் அமலுக்கு வந்த தேதியிலிருந்தாவது—இதை அமல் செய்யக்கூடிய முறையில் திருத்தி அமைத்திருந்தால் இந்த மசோ தா பரிபூரணமாக வரவேற்கக் கூடியதாக இருந்திருக்கும் என்பதை தெரிவித்துகொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவுக்கு பொதுவாக டிசென்டிங் மினிட் இல்லை என்றே சொல்லலாம். எல்லா டிசென்டிங் மினிட்டிலும் ஒரே ஒரு ஷரத்துக்குத்தான் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் டிசென்டிங் மினிட்டுக்குப் பதிலாக ஆதரவு மினிட் தான் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். ஆகையினுல், பெரிய அளவுக்கு எல்லாதரப் பினரும் எந்தெந்த அளவுக்கு திருத்தம் செய்தால் மக்களுக்கு உதவிகரமாய் இருக்கும் என்று நினைக்கிறார்களோ, அந்த அளவுக்கு திருத்தம் செய்து அமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த மசோதா ஒரு சான்றாகும். இதில் சொல்லப்பட்ட குறைப்பாடுகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று சட்ட சம்பந்தமான குறைபாடு; இரண்டாவது கூட்டுறவு இயக்கத்திலுள்ள குறைப்பாடு. கூட்டுறவு இயக்கத்திலுள்ள குறைப்பாடு களை சாதாரணமாக இதற்கான டிமான்ட் வரும்போது விவாதிப்பது வழக்கம். ஆனுல் சட்டம் வருகின்ற பொழுது சட்ட சம்பந்தமான குறை பாடுகளை தான் நாம் கவனிக்க முடியும். ஆகவே இயக்கம் சம்பந்தமான

[Sri R. Venkataraman] [21st August 1961

குறைபாடுகளைச் சொன்னதற்கு நான் இப்போது பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இதன் பேரில் சொல்லப்பட்ட குறைகளை எல்லாம் சர்க்கார் ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவுதான் இதன் மீது இப்போது சொல்லமுடியும் பொதுவாக குறைப்பாடு இல்லாத நிர்வாகம் தான் நடந்து கொண்டிருக்கிறது என்று யாரும் சொல்ல மாட்டார்கள். நிர்வாகத்தில் பல குறைப்பாடுகள் இருக்கத் தான் செய்யும். அதைப் போக்குவதற்குத்தான் சர்க்கார் இருக்கிறது. குறைபாடுகளே இல்லை என்றால் சர்க்காரே அவசியமில்லை. அந்த முறையில் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய குறைபாடுகளை போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக காலதாமதம் ஆகிறது, லான்ட் மார்ட்கேஜ் பாங்கில் சொத்துக்குப் போதிய அளவு மதிப்பு தருவதில்லை என்ற குறைபாடுகளை தெரிவிக்கிறார்கள். இவைகள் எல்லாம் உண்மையான குறைபாடுகள்தான். இந்த மாதிரி எல்லா இடங்களிலும் காலதாமதம் ஆகிறது என்று சொல்ல முடியாது. சில இடங்களில் தான் காலதாமதம் ஆகிறது. அதற்கான காரணங்களும் இருக்கின்றன. கடன் வசதி கிடைப்பதிலும் காலதாமதம் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. இவைகளை எல்லாம் சர்க்கார் ஓரளவுக்கு போக்கிக்கொண்டிருக்கிறது. இதில் மேலும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளிலும் சர்க்கார் ஈடுபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டசம்பந்தமான குறைபாடுகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். ரெஜிஸ்டிராருக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இயக்கம் மக்களுக்கு நல்ல முறையில் உதவ வேண்டும், இதனால் மக்களுக்கு பல நன்மைகள் கிடைக்கவேண்டும் என்று சொன்னால் இதை நல்ல முறையில் கண்காணிப்பதற்கு ஒரு மத்தியஸ்தர் வேண்டும். சொஸைடியை நடத்துகின்றவர்கள் இருக்கிறார்கள்—அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதில் சிலருக்குத்தான் சலுகைகள் கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள், சிலருக்கு எந்தவிதமான சலுகையும் கொடுப்பதில்லை என்னும் புகார்கள் வருகின்றன. அதோடு மெம்பர்களைச் சேர்ப்பதிலும் பல புகார்கள் வருகின்றன. நான் எந்த கட்சி என்று குறிப்பிட்டு பேசவில்லை. கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள் சில குறைகளைப்பற்றி ; ஏதோ காங்கிரஸ்காரர்கள் இருக்கும் சொஸைடிகளில். மற்றவர்களை அங்கத்தினர்களாக சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்று. அதே போல் கம்யூனிஸ்டுகள் அதிகமாக இருக்கும் சொஸைட்டியிலும் மற்றவர்களை சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்றும் புகார்கள் வருகின்றன. ஆகவே இதில் எந்தக் கட்சி என்று பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. எந்தவிதத்திலும் ஒரு மத்தியஸ்தர் இருந்தாக வேண்டும். அதற்கு யார் என்று பார்த்தால், அரசாங்கத்தில் இருக்கக்கூடிய ஓர் உயர்தர அதிகாரியாக இருக்கவேண்டும். அதல்லாமல் இந்த அதிகாரத்தை கோர்ட்டில் விட்டுவிட்டால் ஒன்றுமே நடக்காது. கோர்ட்டால் இதில் ஒன்றும் செய்ய முடியாது. சட்டம் ஏதாவது இருந்தால் அதை "என்ஃபோர்ஸ்" செய்யவில்லை என்றால் அதை "என்ஃபோர்ஸ்" செய்வதற்கு கோர்ட் நடவடிக்கை எடுக்கும். நிர்வாகத்திலுள்ள குறை பாடுகளை உடனுக்குடன் பார்த்து அவைகளை நிவர்த்திக்க வேண்டு மென்றால் நிர்வாக அதிகாரி ஒருவர் தான் இதற்கு மத்தியஸ்தராக இருக்கவேண்டும். அந்த முறையில்தான் ரெஜிஸ்டிராருக்கு இந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனக்குப் பல புகார்கள் வந்திருக்கின்றன. "நாங்கள் கடன் அப்ளிகேஷன் போட்டோம் இந்த சொஸைட்டியிலே கொடுக்கவில்லை" என்று சொல்லுகிறார்கள். "என் கொடுக்கவில்லை" என்று கேட்டால், போன தடவை ஓட் போடவில்லை, அதற்காகக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். மந்திரியாக இருந்து கொண்டு ஒரு சொஸைட்டியில் என்ன நடந்தது என்று விசாரிக்க முடியாது. அதற்காக சட்டத்தில் என்ன செய்திருக்கிறோம் என்றால், சொஸைட்டிகள் செய்ய வேண்டிய சேவைகளில் நியாயமற்ற முறையில் ஏதாவது டிஸ்க்ரிமினேஷன் செய்தால், பாகுபாடு செய்தால், அப்போது ரிஜிஸ்டிரார் பரிசீலனை செய்யவேண்டும், அவர் பார்த்து கொடுக்கவேண்டும் என்று சொன்னால் கொடுக்கவேண்டும் என்று போட்டிருக்கிறோம். ரிஜிஸ்டிராருடைய உத்திரவிற்கு மேல் சர்க்காருக்கு ரிவிஷன்

1 p.m.

இருக்கிறது—அப்பீல் இருக்கிறது. ஆகவே ரிஜிஸ்டிரரார் செய்வது தான் கடைசி என்பது ஒன்றும் இல்லே. அந்த அதிகாரம் கொடுத்திருப்பது சட்டத்தில் இருக்கக் கூடிய சலுகைகள் கிடைப்பதற்கு ஒரு வழிவகையே அல்லாமல் வேறு ஒன்றும் இல்லே. கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் சொல்லும்போது இந்த வகையிலே அதிகாரத்தைக் கொடுத்து விட்டீர்களே என்று சொன்னுர்கள். அவர் ஒரு வக்கீல். ஆகையால் அவருக்கு இந்த வாதத்தைச் சொன்னுல் புரியும். இன்றைக்கு பீனல் கோட் இருக்கிறது. பீனல் கோடிலே பல டெபனிஷன்கள் இருக்கின்றன. இந்த பீனல் கோடை எழுதியவர் மெக்காலே என்பவர். பீனல் கோடிலே போட்டிருக்கிற விதத்தில் பக்கத்தில் இருக்கக்கூடிய இங்க் பாட்டிலிலே பேனவைத் தோய்த்துவிட்டால் திருட்டு, காரில் போகும்போது பக்கத்தில் யார் பேரிலாவது மண் அடித்து விட்டால் அஸால்ட் என்று ஆகிவிடும் என்று அந்த பீனல் கோடிலேயே எழுதினுர்கள். பீனல் கோடை அமுல் நடத்துவதிலே நாம் ஜட்ஜ் வைத்தோம். சரியான அஃபென்ஸ்தான அல்லவா என்று கண்டுபிடிக்க ஜட்ஜ் வைத்தோம். அதே போல இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரிஜிஸ்ட்ராரை வைத்திருக்கிறேம். சட்டம் இயற்றி பரவலாக சேவை செய்யவேண்டு மென்று போட்டோம். எந்தவிதமான பாகுபாடும் செய்யக் கூடாது என்று போட்டோம். கட்சிப் பிரதிகட்சி கூடாது என்று போட்டோம். இதை யெல்லாம் யார் நிறைவேற்றுவது ? எப்படி பீனல் கோடை நிறைவேற்ற ஜட்ஜை வைத்தோமோ அந்த மாதிரி இந்தச் சட்டத்தை நிறைவேற்ற ரிஜிஸ்டிரார் வைத்திருக்கிறேம். இதில் எந்த விதமான தவறும் கிடை யாது. ரிஜிஸ்டிராருக்கு அதிகாரம் இல்லேயென்றுல் மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு தவறு செய்தால் அத்தகைய தவறுகளுக்கு எந்தவித மான நிவாரணமும் கிடைக்காமல் போய்விடும்.

இரண்டாவது இந்தச் சட்டத்திலே நாம் பல மாறுதல்களேச் செய் திருக்கிறேம். கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் இது என்ன உயிரில்லாத பிணமாக வந்து விட்டதே என்று சொன்னுர்கள். அவர் எழுதியுள்ள டிஸென்டிங் மினிட்ஸைப் பார்த்தா லும் அவர் ஒரு கருத்தைத்தான் தெரிவித்திருக்கிருர். இதிலே, அங்கத் தினராகச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று சொன்னதை, சேர்த்தாக வேண்டும் என்று போட்டோம், அது உயிராகத் தெரியவில்லே அவருக்கு. டிஸ்க்ரிமினேட் செய்து சர்வீஸஸ் கிடைக்காமலிருந்தால் அவர்களுக்கும் வாங்கிக்கொடுக்க வழி செய்தோம், அது கூட அவருக்கு உயிராகத் தோன்றவில்லே. இன்னும் பல விதமாக சொஸைட்டிகளில் என்னென்ன செய்யவேண்டுமென்று செய்தோம், இதெல்லாம் உயிராகத் தோன்றவில்லே. ஏன் சொஸைட்டியில் டைரக்டராக இருப்பது தான் உயிர் என்று நினைத் தார்கள் என்று புரியவில்லே. இது எல்லாம் சேர்ந்துதான் உயிர். மசோதா கொண்டு வந்தபோது பல பாகங்களேக் கொண்டு வந்து மக்களுக்கு கிடைக்கவேண்டிய உதவிகளெல்லாம் கிடைக்க வழி செய்து புத்துயிர் அளிப்பது இந்த மசோதா என்று சொன்னேன். இதிலே ஒன்றுதான் குறைந்தது. ஒன்று குறைந்தது என்பதற்காக உயிர் இல்லே என்று சொல்லுவது பொருந்தாது. இது உயிருள்ள சட்டமாகத்தான் இருக்கிறது. விறுவிறுப்பு கொஞ்சம் ஜாஸ்தியாகக்கூட இருக்கிறது என்று சிலர் நினைக்கிருர்கள். இந்த விதமாக மசோதா இருக்கிறது. இரண்டாவது, சட்ட சபையில் சொன்னதை மாற்றி விட்டேன் என்று சொன்னுர்கள். மசோதாவை சட்ட சபையில் கொண்டு வந்தபோது நடந்த நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து படிக்கிறேன்—அப்போது இரண்டில் ஒன்றுதான் செய் கிறேன் என்று சொன்னேன். இண்ட்ரட்யூஸ் செய்யும்போதே இது தான் சொன்னேன் :—

" இன்றைக்கு இருக்கக்கூடிய மற்ரெரு குறைபாடு என்னவென்றுல் ஏதோ ஒரு சிலர்தான் நிர்வாகப் பொறுப்பில் எப்போதும் இருந்துகொண் டிருக்கிருர்கள். புதிதாக வருகிறவர்களுக்கு இடம் கிடைப்பதில்லே என் கின்ற புகார்களும் இருந்துகொண்டிருக்கிறது. . . . . "

என்று இதைப்பற்றி விவரித்து விட்டு—

"ஆனால் இது தான் சர்க்காருடைய முடிவுகள் என்று எடுத்துக் கொள்ளவேண்டாம். இதைப் பற்றி செலக்டு கமிட்டியில் எந்த விதமான முறையில், ஆனால் சர்க்காருடைய நோக்கத்திற்கு எதிரிடையாக இல்லாமல், மாற்றி அமைக்க வேண்டுமோ, அவ்விதமாக ஆராய்ந்து மாற்றி அமைத்தால் அதை சர்க்கார் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதனுடைய அடிப்படை என்னவென்றால், ஒருவர் எல்லா சொஸைடிகளிலும் இருந்துகொண்டு, வேறு பலருக்கு வாய்ப்பளிக்காத முறையில் இருந்துகொண்டிருக்கக்கூடாது என்கின்ற நோக்கந்தான். இதில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டும் என்றால், அதை ஆய்வுக் குழுவில் ஆராய்ந்து மாற்றி அமைத்தால் அதை சர்க்கார் கவனிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்." என்று தான் சொன்னேன்.

அப்புறம் விவாதத்திற்கு பதிலளிக்கும்போதுகூட கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் கொஞ்சம் இளகி விட்டீர்களே என்று சொன்னார்கள். அப்போது கூட இதைத் தான் திருப்பிச் சொன்னேன் :—

"கூட்டுறவு ஸ்தாபனத்தில் ஒருவர் எத்தனை சொஸைட்டிகளில் இருக்கலாம் என்பது சில அங்கத்தினர்களுக்கு சற்று கோபம் உண்டாக்கிவிட்டது என்று நினைக்கிறேன். நான் ஆரம்பத்திலே கூடச் சொன்னேன். இப்படி தான் இருக்க வேண்டும் என்று இறுதியாகச் சொல்லவில்லை. எந்த அளவுக்கு பரவலாக மற்றவர்களும் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்துகொள்ள கூடிய நல்ல சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டும் என்று. திறமைசாலிகள் அவர்களே இருக்கவேண்டும், மற்றவர்கள் இருக்கக் கூடாது என்றிருந்தால், மாறுதல் அளிக்கும் அளவுக்கு பரவல் அடையாது என்று பயம் சர்க்காருக்கு இருக்கிறது. ஆகவே தான் இப்படிச் செய்ய முற்பட்டோம். அதனால் யாரும், தங்களையோ, மற்றவர்களையோ விலக்கிவிட்டார்கள் என்று நினைக்கத்தேவையில்லை, எல்லோருடைய கருத்தும் எப்படி இருக்கிறதோ அப்படிச் செய்யலாம் . . ."

இப்படி பேசிக்கொண்டிருக்கும்பொழுது தான் கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் "தௌ யூ ஆர் ஈல்டிங்" என்று சொன்னார். தொடர்ந்து பேசும்போது நான் சொன்னது :—

"அதே பேச்சுத்தான் ஆரம்பத்திலும் சொன்னேன்—28-வது செக்ஷனைப் பற்றிச் சொல்லும்போது சொன்னேன். இது சர்க்கார் இறுதி முடிவு என்று சொல்லவில்லை. எல்லோரோடும் கலந்தாலோசித்து செய்ய வேண்டும் என்று சொன்னேன். அடிப்படையாக ஒருவரோ, அல்லது ஒரு கூட்டமோ எப்போதும் இயக்கத்தை தாங்களே தங்கள் கையில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று இருப்பதை மாற்ற வேண்டும் என்பது சர்க்கார் கொள்கை என்றேன். இப்பவும் இதைத் தான் சொல்லுகிறேன் . . ."

அப்படித்தான் சொன்னேன். ஆகையால் கொண்டு வந்ததை மாற்றி விட்டேன் என்று சொல்லுவது பொருத்தம் ஆகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் என்ன அபிப்பிராயம் இருக்கிறது என்று பார்த்து அதற்குத் தகுந்தபடி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை ஏதோ கொண்டுவந்ததை மாற்றி விட்டதாகச் சொல்லுவது சரியாகாது. பொதுவாக இந்தச் சட்டத்தில் இருக்கின்ற அம்சங்கள் எல்லாம் நீண்ட விவாதத்திற்குப் பின்புதான் செய்யப்பட்டது. ஒரு செலக்ட் கமிட்டி ஒரு வருஷம் பூரா உட்கார்ந்து சட்டத்தை செய்தது என்றால் அது இந்தச் சட்டம்தான். நாம் சென்ற வருஷ ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து அவ்வப்போது சட்டத்தின் ஷரத்துக்களை நன்றாக ஆராய்ச்சி செய்து, சட்டத்தில் எழுதுவதில் ஏதாவது தவறு இருந்தால் அவைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு சப்-கமிட்டி போட்டு இந்தச்சட்டத்தைச் செய்திருக்கிறோம்.

கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் 6 வருஷத்திற்குப் பின்னுல் ரிட்டையர் ஆகவேண்டும் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொன்னுர்கள். 6 வருஷத்திற்குள் எவ்வளவு மாறுதல்கள் ஏற்படப் போகின்றனவோ. 6 வருஷங்களுக்குப் பின் ஏற்படவேண்டுமென்பதற்கு நாம் இப்போது கவலைப்பட வேண்டிய தில்லை. அப்போது இருக்கின்ற சட்டசபை அதைப்பார்த்து கொள்ளும். 6 வருஷத்திற்குப் பின்பாவது மாற்றம் வரவேண்டுமென்று திருத்தத்தைக் கொடுப்பது இப்போது செய்யவேண்டியது அவசியம் இல்லை என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

இந்த மசோதாவை எல்லோரும் வரவேற்றுப் பேசியதற்காக எல்லா அங்கத்தினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் சொன்னுர்கள் "இந்தத் திருத்தத்தை அமைச்சர் எலெக்ஷனுக்குப் பிறகாவது கொண்டு வந்து மாற்ற வேண்டும்" என்று. எலெக்ஷன் நடந்து, அந்த எலெக்ஷ னில் நாங்களே மறுபடியும் பதவிக்கு வந்து, இதை மாற்றவேண்டும் என்று அவர்கள் கூறிய வாழ்த்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். (சிரிப்பு.)

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Co-operative Societies Bill, 1961, (L.A. Bill No. 22 of 1961) as amended by the Select Committee be taken into consideration."

The motion was put and carried.

DEPUTY SPEAKER: Amendments have not been circulated. So clause by clause consideration will be taken up to-morrow.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—*Statutory Rules and Orders.*

Nil.

B.—*Reports, Notifications and other papers.*

176. *Twelfth Report of the Committee on Estimates (Second Assembly) on Fisheries Department.*

APPENDIX I.

[Vide Answer to Starred question No. 1307 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 21st August 1961, page 480 supra.]

(*a*) Yes, Sir.

(*b*) The expenditure on Harijan Welfare Schemes was Rs. 1·20 crores in 1955-56. During the Second Plan, the annual outlay increased from this figure to nearly Rs. 3·55 crores. Out of this, only Rs. 2·02 crores was treated as a Plan expenditure in the sense that it was eligible for assistance from the Government of India. A part of this Plan outlay is on scholarships and mid-day meals also. These items of expenditure will continue in the Third Plan period, but met from the State funds. Thus on the non-Plan side, we would be spending on an average Rs. 2·15 crores a year.

The Third Plan outlay is over and above this and depends on the size of the All-India Plan as it has to be assisted by the Centre. The All-India outlay for the Third Plan for Backward Classes has been drastically cut down to Rs. 100 crores and when the percentage share of Madras is worked out on the population ratio of Scheduled Castes, Scheduled Tribes and other Backward Classes, it comes to Rs. 4·20 crores. Actually the allocation secured amounts to Rs. 5·38 crores.

However, as the tempo of Plan expenditure increases, the expenditure on welfare of Backward Classes would also be stepped up to reach a level of Rs. 4 to 4·5 crores by the end of the Third Plan. This would mean that during the five years of the Third Plan, the expenditure would be not less than Rs. 20 crores including the Plan and non-Plan outlays as against about Rs. 12 crores during the Second Plan period.

APPENDIX II.

[Vide Answer to Starred question No. 1308 asked by Sri K. R. Viswanathan on behalf of Sri T. K. Subbiah at the meeting of the Legislative Assembly held on 21st August 1961, page 481 supra.]

A.—(*a*) The Marudayar Scheme is intended to benefit a new area of about 13,674 acres in addition to stabilizing the existing ayacut of about 1,655 acres under Kovathattai and Sripurandan tanks and 6,000 acres under the Ponneri channel. The village-war particulars of the new area are given in the statement enclosed.

(*b*) About 7,700 tons.

(*c*) About Rs. 325 lakhs. (This is the latest estimate.)

NOTE.—The above particulars are only tentative and are likely to undergo variation as a result of further investigation that is being done in respect of this scheme.

21st August 1961]

(*d*) The scheme is under investigation and the question of taking up the scheme can be decided only after the results of the investigation are known and examined in detail.

STATEMENT.

MARUDAYAR RESERVOIR SCHEME.

Village war ayacut particulars.

Udayarpalayam taluk—

	Name of village.	*Ayacut (acre).*
1	Irugaiyur	325·51
2	Karaikurichi	321·66
3	T. Palur	821·80
4	Idangani	100·33
5	Chintamani	
6	Kodangudi	1,402.34*
7	Araikudi	
8	Cholamadevi	612·05
9	Udayanatham	953·48
10	Kodali Karuppur	164·33
11	Ulkottai	967·09
12	Vembakudi	1,573·73
13	Talutalaimedu	1,914·31
14	Karuvalappar Koil	359·25
15	Muthu Servaimadam	666·11
16	Kattagaram	444·91
17	Kulothunganallur	589·17
18	Sripurandan	556·03
19	Kadambur	853·44
20	Sathambadi	980·75
21	Govindhaputhur	67·42
	Total, New ayacut	13,674·21

* Items 5 to 7 are ex-zamin villages and the ayacut has been roughly arrived at. The correct area will be available only during localization.